விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

நாவாந்துறை
கிளை நூலகம்

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 13 ஞாயிற்றுக்கிழமை (27.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 159

## இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தமிழர்கள்

# சுயாட்சி கோரும் உரிமை

# சட்டப்படி எமக்கு உண்டு

## தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரை



(யாழ்ப்பாணம்) இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தமிழ் மக்கள். எனவே சுயாட்சி உரிமை கோர சட்டப்படி எமக்கு உரிமை உண்டு என வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தில் உரையாற்றினார். மேலும் இளைஞர், யுவதிகளின் மனதில் புதுத்தென்பை உண்டாக்க தமிழ் மக்கள் பேரவை பிரயத்தனங்களில் ஈடுபடும் எனத் தெரிவித்தார். (15-ம் பக்.)

முள்ளிவாய்க்கால் நினைவு தொடர்பில்

## தெற்கில் உள்ளவர்கள் கருத்து கூற வேண்டிய அவசியம் இல்லை

### வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிப்பது தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் உரிமை எமக்கு மட்டுமே உள்ளது என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இது தொடர்பாக தெற்கில் உள்ளவர்கள் கருத்து கூறவேண்டிய அவசியம் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டமை மற்றும் அன்றைய தினம் பாட 16☛

## தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்கு உள்ளான குடும்ப பெண் ஒருவர் ஆறு நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டை சாவற்கட்டை சேர்ந்த தயன் விஜியா (வயது 35) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார். திருமணமாகி 12 வருடங்கள் ஆகிய குறித்த பெண், 15☛

### உயிரிழப்பு 21 ஆக உயர்வு

## 2 பேர் காணாமல் போயுள்ளனர்
## 4 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 21 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் இரண்டு பேர் காணாமல் போயுள்ளனர்.

மேலும் 40 ஆயிரத்து 17 குடும்பங்களை சேர்ந்த ஓர் இலட்சத்து 53 ஆயிரத்து 712 பேர் பாதிக் 16☛

## இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள 36 ஏக்கர் மக்கள் காணிகள்

### நேற்று பாவனைக்கு விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த 36 ஏக்கர் மக்களின் காணிகள் நேற்று சனிக்கிழமை மக்கள் பாவனைக்கு விடுவிக்கப் 16☛

## இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்

### அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் தெரிவிப்பு



(கொழும்பு)

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது இலங்கைக்குரிய விடயம் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கின்றது. அதே வேளை இன்னமும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ள அவர்.

பிரகாசமான எதிர்காலம் என்ற இலங்கையின் கனவை நனவாக்குவதற்காக இலங்கை 15☛

## பிக்கப் - மோட்டார் சைக்கிள் நேருக்குநேர் மோதி விபத்து

### இரு இளைஞர்கள் உயிரிழப்பு

பிக்கப் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் விசுவமடுப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. 12☛

## முல்லை வந்த சுவாமிநாதனை சிறைப்பிடித்த கேப்பாப்பிலவு மக்கள்

### பொலிஸ் உதவியுடன் வெளியேறினார்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவுக்கு வருகைதந்த மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனை கேப்பாப்பிலவு மக்கள் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று முற்றுகையிட்டனர்.

இதனால் பொலிஸார் மற்றும் தனது பாதுகாப்பு உத்தியோகத்தரது துணையுடன் மக்களை விட்டு பாதுகாப்பாக வெளியேறிச் சென்றார்.

இதனை தொடர்ந்து கேப்பாப்பிலவு இராணுவ முகாமுக்கு சென்று இராணுவ தரப்புடன் கலந்துரையாடி மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செ 15☛

## நினைவேந்தல் செய்த வங்கி ஊழியர்கள் இடைநிறுத்தம்

### நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்ததாக கிளிநொச்சியில் தனியார் வங்கி ஊழியர்கள் இடைநிறுத்தப்பட்ட விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊழியர்கள் வங்கியினுடைய விதிமுறைகளுக்கு முரணாக நடந்து கொண்டதாக வங்கியால் கூறப்பட்டது. இது தொடர்பாக 16☛

## மண்டைதீவு காணி சுவீகரிப்பு குறித்து ரணிலுடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

ரணில் விக்கிரமசிங்கவிடம் மண்டைதீவு காணி சுவீகரிப்பு தொடர்பாக எடுத்துரைக்கவுள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

மண்டைதீவு பகுதியிலுள்ள கடற்படை முகாமிற்கு பொது மக்களது காணிகள் 18 ஏக்கர் 15☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பேருந்து மோ.சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் சென்றவர், வீதியில் பயணிகளை ஏற்றிக்கொண்டிருந்த தனியார் பேருந்துடன் பின்னால் சென்று மோதுண்டு விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் சுயநினைவற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

## மகிந்த, கோத்தா இறுதி யுத்தத்திற்கு எதையும் செய்யவில்லை-பொன்சேகா

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு சபை உறுப்பினர்களை தூங்க வைத்ததைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லையென பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லுமாறு இந்த நாட்டிலுள்ள சகல ஜனாதிபதிகளும் கூறியதாகவும், அது இரண்டு வசனங்கள் மட்டுமே எனவும்இதேபோன்ற ஒன்றைத் தான் மகிந்த ராஜபக்ஷவும் செய்தார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் தன்னுடன் ஹெலிகொப்டரில் ஏறி இரு முறை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது மட்டுமே இறுதி யுத்தத்துக்கான ஆற்றிய பங்களிப்பு எனவும் அமைச்சர் சரத் பொன்சேகா சுட்டிக் காட்டினார். (ம)


## வேலைவாய்ப்புக்கள்

| | | |
|---|---|---|
| இலவச விசா கட்டார் | தொழில்நுட்பவியலாளர், மின்னியல், இயந்திரவியல் | 94,600/- |
| டுபாய் ஓமான் பாஃரேன் | தாதியர், பராமரிப்பாளர், பல் வைத்திய தாதியர், மருத்துவ மாது, உதவியாளர் | 115,000/- தொடக்கம் 192,000/- |
| கட்டார் | மோட்டார் சைக்கிள், டாக்சி, பஸ் டிரைவர், Nissan கம்பனி பணியாளர் | 49,200/- தொடக்கம் 82,000/- |
| சவுதி அல்மராய் | விற்பனை உதவியாளர், டிரைவர், மெக்கானிக், வெல்டர், பிளம்பர், A/C தொழில்நுட்பவியலாளர் | 46,200/- தொடக்கம் 73,800/- + கமிஷன் |
| குவைத் | ஹோட்டல் பணியாளர்கள் Dish Washer, Waiter, Manager, Kitchen Helper, Comml. Chef | 67,990/- தொடக்கம் 287,650/- + சேவைக் கட்டணம் |

குறிப்பு பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம்

விபரங்களுக்கு ☎ 0777 324 004, 0773 616 798

SIKARAM ACADEMY Business · Hospitality · English FAST TRACK to CAREERS

221 - 1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11

TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd.,

90, First Floor, Chatham Street, Colombo 1

(சி-2721)



## வீடு விற்பனைக்கு

யாழ்.ரக்கா றோட், ரக்கா ஒழுங்கையில் 3 பரப்பு காணிக்குள் அழகான மேல்மாடி வீடு உடன் விற்பனைக்கு.

**தொடர்புகள்: 0764734160**



## தேவை

மூன்று நபர் கொண்ட குடும்பத்திற்கு வசதியுடைய வீடு வாடகைக்கு தேவை.

**0778331414, 0778185978**



## ஸ்ரூடியோவிற்கு பணியாளர் தேவை

புகைப்பட நிறுவனமொன்றிற்கு புகைப்பட மெடுப்பதில் அனுபவம் வாய்ந்த போட்டோ சொப் தெரிந்தவர் தேவை. அத்துடன் வேலைபயிலுநரும் தேவை. வடமராட்சியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்பு:0777283706** (சி-2733)



## ஊர்க்குஞ்சு விற்பனைக்கு

1 நாள் கலப்பு குஞ்சு, 1 நாள் கழுத்து வெட்டி, 2 மாத விறாந்துக்குஞ்சு, சேவல் குஞ்சு மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்புகள்:0778448295** (சி-2728)



## அறிவித்தல்
## சீட்டிழுப்பு திகதி மாற்றம் தொடர்பானது

வடக்கு கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம், கல்வி, மருத்துவம் போன்ற தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கோடு மக்கள் நலன்காப்பகம் எனும் நிறுவனத்தினூடாக அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பொன்றை மேற்கொள்ளும் நோக்கோடு நாம் சீட்டிழுப்பு விற்பனைச் சிட்டைகளை விற்பனை செய்து வரும் அதேவேளை, இச் சீட்டிழுப்பை எதிர்வரும் 29.05.2018 அன்று வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் நடாத்துவதாகவும் எமது நிறுவனத்தினூடாக விளம்பரங்களைச் செய்திருந்தோம். எனினும் சில தவிர்க்க முடியாத காரணங்களினால் குறித்த திகதியில் இச் சீட்டிழுப்பை நடாத்த முடியாதமையை இட்டு வருத்தம் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை இச் சீட்டிழுப்பானது எதிர்வரும் 28.06.2018 அன்று காலை 10.00 மணிக்கு கண்டிப்பாக ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெறுமென தெரிவித்துக் கொள்வதோடு வெற்றி பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரங்கள் 29.06.2018 அன்றைய பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும் என அறியத் தருகின்றோம்.

மக்கள் நலன் காப்பகம்,
நடுவப்பணியகம்,
கரடிப்போக்குச் சந்தி,
கிளிநொச்சி.
தொ.பே:0212284070




(4212)



## மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மொத்த விற்பனை

நெல்லியடி பெற்றோல் நிரப்பு நிலையம் (Petrol Shed) அருகாமையில் அமைந்திருக்கும் மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் உள்ள மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், தளபாடங்கள் உட்பட மொத்தமாக விற்பனைக்கு உண்டு. அதே இடத்தில் வியாபார நடவடிக்கை மேற்கொள்ள விரும்பின் கடை உரிமையாளரின் அனுமதி பெற்றுத் தரப்படும். தளபாடங்களும் இலவசமாக வழங்கப்படும்.

**தொடர்புகள்:0725467241, 0777448075** (சி-2730)


## மரண அறிவித்தல்



திருமதி
**பராசக்தி கிருஸ்ணன்**

மயிலிட்டி தெற்கு (கட்டுவன் குரும்பசிட்டியை) பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி கிருஸ்ணன் அவர்கள் 25.05.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் குரும்பசிட்டி அப்பு என்று எம்மால் அன்புடன் அழைக்கப்பட்ட மூளாய் -நாகலிங்கம் (முன்னாள் உரிமையாளர் நாதன் ஸ்டோர் வெலிமடை) அவர்களின் அன்பு மகளும் எனது மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2018)ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இல.128, யாழ் வீதி, வவுனியாவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தங்க முகுந்தன்
மூளாய், சுழிபுரம்

077 727 9238

(சி-2734)

## 3ம் ஆண்டு நினைவுகள் 8ம் ஆண்டு நினைவுகள்

திதி :-ஸப்தமி (21.05.2018)



மலர்வு 21 . 11 . 1968 — மறைவு 24 . 05 . 2015

அமரர்
**தனபாலசிங்கம் இலங்கேஸ்வரன்**

திதி :-திரியோதசி (27.05.2018)



மலர்வு 10 . 02 . 1940 — மறைவு 26 . 05 . 2010

அமரர்
**தனபாலசிங்கம் பரமேஸ்வரி**

உயிரின் உள்ளூறும்
உணர்வுகளில் உறைந்திடும்
எம் இனிய தெய்வங்களே!
உமை நினைக்கின்றோம்!
உருகுகின்றோம்!.

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

க.தனபாலசிங்கம்
குடும்பத்தினர்.

(சி-2732)

## கண்ணீர் அஞ்சலி



**திரு.சிங்கராசா கமலேஸ்வரன்**

பிறப்பு :- 14.07.1979
இறப்பு :- 25.05.2018

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சுதர்சினி கமலேஸ்வரன் அவர்களின் அன்புக் கணவர் திரு. சிங்கராசா கமலேஸ்வரன் அவர்கள் 25.05.2018 அன்று காலமானார். அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா
வித்தியாலயக் குடும்பம்.

(4214)

## ஓராண்டு நினைவு தின அழைப்பு

கடந்த (20.01.2017) அன்றும் (07.06.2017) அன்றும்
சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வங்கள்



அமரர்கள்
**திரு.கந்தன்**
**திருமதி செல்லம்மா**



அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்தி பிரார்த்தனை இன்றைய தினம் 27.05.2018 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அமரர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(4206)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பு; போலி நம்பிக்கையை தமிழ் மக்களிடம் ஏற்படுத்த நான் தயாரில்லை

## அமைச்சர் மனோகணேசன் வெளிப்படை



(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தரவும், ஏனைய பிரதான பிரச்சினைகளுக்கு முடிவைத் தரவும் புதிய அரசியலமைப்பு ஒன்று அவசியம் என்பது எங்கள் உறுதியான நிலைப்பாடு. ஆனால், இப்படி சொல்லி ஆரம்பிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு செயற்பாடு இன்று ஒரு நம்பிக்கையற்ற கட்டத்தை அடைந்துள்ளது.

புதிய அரசியலமைப்பு செயற்பாட்டின் பிரதான குழுவான வழிகாட்டல் குழு சும்மா கூடி கலையும் குழுவாக ஏறக்குறைய மாறி விட்டது. இதுவே இன்றைய உண்மை. இந்த உண்மைக்கு, புறம்பான போலி நம்பிக்கையை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்த என்னால் முடியாது.

அத்தகைய ஒரு முயற்சிக்கு துணை போகவும் முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவரும், தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க, அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோ மேலும் தெரிவிக்கையில்,

தாம் பாராளுமன்றத்தில் முன்வைக்க போகின்ற, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கும் திருத்த யோசனையை பற்றி, ஜே.வி.பி. தலைவர் நண்பர் அநுர திஸாநாயக்க, நீண்ட இடைவெளிக்கு பின் கடந்த வியாழக்கிழமை கூடிய வழிகாட்டல் குழு கூட்டத்தின் போது, என்னிடம் விளக்கிக் கூறினார்.

இந்த யோசனையை நாம் ஏற்கப் போகவில்லை என அவருக்கு நான் சொன்னேன். ஆனால், தனது யோசனையை முன்வைக்கும் அவரது நிலைப்பாட்டுக்கு அவர் கூறிய காரணத்தை நான் ஏற்றுக்கொள்வதாக அவரிடம் நான் கூறினேன்.

போகிற போக்கை பார்த்தால் புதிய அரசியலமைப்பு வருவதாக தெரியவில்லை. எனவே வராத ஒன்று வரும் என்று சும்மா காத்திருந்து, மக்களுக்கு தாம் அளித்த வாக்குறுதியை தாம் மீற முடியாது. ஆகவேதான், புதிய அரசியலமைப்பு செயற்பாட்டுக்கு வெளியே 20ஆவது திருத்தமாக இந்த யோசனையை தாம் கொண்டு வருவதாக, அநுர திஸாநாயக்க என்னிடம் கூறினார்.

அவரது யோசனையை ஏற்காவிட்டலும்கூட, அரசியலமைப்பு செயற்பாட்டுக்கு வெளியே அதைக் கொண்டு வரும் அந்தக் காரணத்தை ஏற்றுக்கொள்வதாக அவரிடம் நான் கூறினேன்.

அதுபோல, இன்றைய அரசியலமைப்பின் மொழி தொடர்பான அத்தியாயத்தில், "சிங்களம் இலங்கையின் ஆட்சி மொழியாகும்" என்று முதல் வரியில் கூறிவிட்டு, அடுத்த வரியில் "தமிழும் ஒரு ஆட்சிமொழி" என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுஏதோதமிழுக்குபோனால் போகிறது என ஒரு இரண்டாம் தர அந்தஸ்தை தருவது போல் இருக்கிறது. இதை மாற்றி புதிய அரசியலமைப்பில், "சிங்களமும், தமிழும் இலங்கையின் இரண்டு ஆட்சி மொழிகள்" என்று ஒரே வரியில் சொல்லப்படும் யோசனையை தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பாக நான் வழிகாட்டல் குழுவில் தெரிவித்து இடைக்கால அறிக்கையில் குறிப்பிட செய்துள்ளேன்.

இப்போது புதிய அரசியலமைப்பு என்ற ஒன்று வருவதில் பாரிய தாமதமும், சந்தேகமும் ஏற்பட்டு உள்ளதால், இன்றைய அரசியலமைப்புக்கு 21ஆவது திருத்தமாக, "சிங்களமும், தமிழும் இலங்கையின் இரண்டு ஆட்சி மொழிகள்" என்று ஒரே வரி யோசனையை, புதிய அரசியலமைப்பு செயற்பாட்டுக்கு வெளியே கொண்டு வர போவதாக வழிகாட்டல் குழுவுக்கு நான் அதிகாரபூர்வமாக அறிவித்தேன்.

ஜே.வி.பியின் "நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கும்" யோசனை 20ஆவது திருத்த யோசனையாகவும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் "ஆட்சி மொழி சமத்துவ யோசனை" 21ஆவது திருத்த யோசனையாகவும் பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு திருத்த யோசனைகளாக முன்வைக்கப்படும் என அமைச்சர் மனோ மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# பசு வதைக்கு எதிராக உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

பசு வதைக்கு எதிராகவும் கொல்களத்தினை மூடுமாறு கோரியும் சாவகச்சேரி மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று சனிக்கிழமை அடையாள உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது.

சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இடம்பெற்ற இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில், நல்லை ஆதீன குரு முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் , யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி விமலதேரர். சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியர் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள்,ஏனைய பொது அமைப்பை சார்ந்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த உண்ணாவிரதத்தின் ஏற்பாட்டாளர் என்ற வகையில்சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தம் கருத்து தெரிவிக்கையில்,

தென்மராட்சி மண் சைவத்துக்கு புகழ்பெற்ற மண். இங்கு தொண்ணூறுகளிலே கொல்களன் அமையப்பெற்றிருக்கவில்லை.

ஆனால் 2010 ஆம் ஆண்டுக்கு பின்னரே இறைச் சிக்கடைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இங்கிருப்பவர்கள் இறைச்சிக் கடைகளை நடத்தவில்லை. எங்கிருந்தோ வந்தவர்கள் தான் இறைச்சிக்கடைகளை நடத்துகின்றார்கள். எமது பகுதிகளில் உள்ள பசுக்கள் மற்றும் எருதுகள் திருடப்பட்டு இறைச்சியாக்கப்படுகின்றன.




எமது மண்ணுக்கு வாழ வந்தால் எமது மக்கள் உண்ணுகின்ற உணவுகளையே உண்ண வேண்டும். அவ்வாறு வாழ முடியாவிட்டால்இங்கிருந்து வெளியேற வேண்டும்.

இங்கு வாழ விரும்புபவர்கள் எமது நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ வேண்டும் அல்லது எமது பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-9-89)

# அபிவிருத்திக்காக நட்பு நாடுகளின் உதவிகளைப் பெறுவதே இலக்கு

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்காக உலகின் சகல நட்பு நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதே தமது எதிர்பார்ப்பாகுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஐந்து நாடுகளின் இராஜதந்திரிகள் தமது நற்சான்றுப் பத்திரங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கையளித்தனர்.

இதன் பின்னர் புதிய இராஜதந்திரிகளுக்கு மத்தியில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை சிறந்த முறையில் பேணி இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்நிலையில், இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு புதிதாக நியமனம் பெற்றுள்ள தூதுவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சுவீடன் தூதுவர் Klas Molin, சுகாதாரம், கல்வி மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறைகளில் காணப்படும் இலங்கையுடனான தொடர்புகளை பலப்படுத்துவதற்கு தமது பதவிக்காலத்தில் விசேட கவனம் செலுத்தவுள்ளதாக உறுதியளித்தார்.

அத்தோடு, பேண்தகு அபிவிருத்தி அனுபவங்கள் பலவற்றைக் கொண்ட பின்லாந்து தனது அனுபவங்களை இலங்கையுடன் பரிமாறிக் கொள்வதற்கான செயற்றிட்டங்களில் ஈடுபட எதிர்பார்ப்பதாக பின்லாந்தின் புதிய தூதுவர் Harri Kamarainen குறிப்பிட்டார்.

இவ்வாறு புதிய தூதுவர்கள் தமது நாடுகளின் அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்துகொள்ளவும், தேவையான உதவிகளை வழங்கவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளனர். (இ-7)

# தாதியர்களே இதுவரை சிக்கவில்லை

# உள்ளம் மாசடையும் போதுதான் இலஞ்சம் வாங்க முற்படுகின்றனர்

## ஆணைக்குழுவின் தலைவர் குருகே சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்கு இதுவரையில் இலக்காகாமல் இருப்பவர்கள் தாதியர்கள் மாத்திரமே என இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் நெவில் குருகே தெரிவித்துள்ளார்.

காலி மாவட்ட அரச அதிகாரிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இலஞ்ச ஊழல் நடவடிக்கைகள் தொடர்பில் அறிவுறுத்தும் நிகழ்வு பொல்வதுமோதர பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.



இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலஞ்சம் என்பது உள்ளத்துடன் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கலாகும். உள்ளம் மாசடையும் போதுதான் இலஞ்சம் வாங்க முற்படுகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தடை தாண்டி வந்த நம்ம சென்னை பொங்கி எழுந்து கிண்ணம் வெல்லுமா?

## இன்று ஹைதராபாத்துடன் இறுதி மோதல்

ஐ.பி.எல்., தொடரின் இறுதியில் இன்று சென்னை, ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன.

இதில் சாதிக்கும் பட்சத்தில் சென்னை அணி மூன்றாவது கிண்ணம் வென்று அசத்தலாம்.

இந்தியாவில் 11ஆவது சீசன் ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. லீக் சுற்றில் 4, 'பிளே ஓப்' சுற்றுடன் 2 அணிகள் நடையைக் கட்டின.

மும்பை வான்கடே மைதானத்தில் இன்று நடக்கும் இறுதியில் தோனியின் சென்னை, வில்லியம்சனின ஹைதராபாத் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

**தடை தாண்டி**

சூதாட்ட பிரச்சினை காரணமாக இரண்டு ஆண்டு தடைக்குப் பின் 'சீனியர்களுடன்' களமிறங்கிய சென்னை அணி அசத்தியது. காவிரி பிரச்சினை காரணமாக உள்ளூர் சேப்பாக்கத்திற்கு பதில் புனே சென்று விளையாடும் நிலைக்கு தள்ளப்பட்டது. இருப்பினும் தடைகளை கடந்து, 7ஆவது முறையாக இறுதிக்கு முன்னேறியது.

'சீனியர்' வோட்சன் (438 ஓட்., 1 சதம், 2 அரைசதம்), அம்பதி ராயுடு (586 ஓட்., 1 சதம், 3 அரைச்சதம்) ஜோடி, 6 முறை 40 ஓட்டங்களுக்கும் மேல் எடுத்து, சிறப்பான ஆரம்பம் கொடுக்கிறது.

கடந்த போட்டியில் வாய்ப்பு பெற்ற டு பிளசி கடைசி வரை தூணாக நின்று அணியை இறுதிக்கு கொண்டு வந்தார். இதனால் இன்று ராயுடு 'நடுத்தர வரிசையில் தான் வரவேண்டும். 9ஆவது முறையாக 400 ஓட்டங்களுக்கும் மேல் குவித்த ரெய்னா (14 போட்டி, 413 ஓட்.,) நம்பிக்கை கொடுக்க வேண்டும்.

அணித் தலைவர் தோனி (455) துடுப்பாட்டம் சென்னை அணக்கு பெரும்பலம். மற்றபடி பின் வரிசையில் பிராவோ, ஜடேஜா, சகார் ஓரளவுக்குத் தான் கைகொடுக்கின்றனர்.

**பந்துவீச்சு எப்படி?**

வேகப்பந்து வீச்சாளர்கள் ஷர்துல் தாகூர் (15 விக்.,), பிராவோ (13), லுங்கிடி (10), சகார் (10) என பலர் அணிக்கு பலம் சேர்க்கின்றனர். சுழலில் ஜடேஜா (10) நம்பிக்கை தருகிறார். ஹர்பஜன் கூடுதல் பலம் சேர்த்தால் 2010, 2011க்குப் பின் மூன்றாவது முறையாக கிண்ணம் வெல்லலாம்.

**துடுப்பாட்டம் எழுச்சி**

ஹைதராபாத் அணிக்காக (2016ல் சம்பியன்) 688 ஓட்டங்கள் குவித்த அணித் தலைவர் வில்லியம்சன் இருப்பது அசுர பலம். இரணடாவது முறையாக இறுதிக்கு வந்த இந்த அணிக்கு ஷிகர் தவான் (471), மணிஷ் பாண்டே (284) தவிர 'நடுத்தர வரிசையில்' துடுப்பாட்டம் சற்று சறுக்குகிறது. பின் வரிசையில் யூசுப் பதான் (215), சகிப் அல் ஹசன் (216), பிராத்வைட் வலுச் சேர்க்கின்றனர். தகுதிச் சுற்று 2ல் 10 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்த ரஷிட் கானும் தொல்லை கொடுக்க முயற்சிக்கலாம்.

**'சுழல்' ஆயுதம்**

ஹைதராபாத் அணியின் பலம் 'சுழல்' தான். 'நம்பர்-1' பந்துவீச்சாளராக உள்ள ரஷிட் கான் (21 விக்.,) சென்னைக்கு எதிரான 3 போட்டிகளில் 6 விக்கெட்டுக்கள் சாய்த்துள்ளார். சகிப் அல் ஹசன் (14) இவருக்கு நல்ல கூட்டணி தருகிறார். 'வேகத்தில்' சித்தார்த் கவுல் (21 விக்.,) தொடர்ந்து மிரட்டுகிறார். புவனேஷ்வர் குமார் (9), சந்தீப் சர்மாவும் (11) இணைவதால் எதிரணிக்கு இலக்கு எட்டுவது பெரும் சிரமமாக உள்ளது.

**ரூ. 26 கோடி பரிசு**

ஐ.பி.எல்., தொடரில் இன்று கிண்ணம் வெல்லும் அணிக்கு ரூ. 26 கோடி பரிசாக கிடைக்கும். இறுதியில் தோற்கும் அணி ரூ. 13 கோடி பெறும். மற்றபடி 'பிளே ஓப்' சுற்றுக்கு முன்னேறிய கொல்கத்தா, ராஜஸ்தான் அணிகளுக்கு தலா ரூ. 9.7 கோடி தரப்படும்.

**இறுதிக்கு கடந்து வந்த பாதை**

**சென்னை**

✖ லீக் சுற்று

14 போட்டிகளில் 9 வெற்றி, 5 தோல்வி

✖ 'பிளே ஓப்'

தகுதிச் சுற்று 1ல் ஹைதராபாத்தை வென்று இறுதிக்கு முன்னேற்றம்.

**ஹைதராபாத்**

✖ லீக் சுற்று

14 போட்டிகளில் 9 வெற்றி, 5 தோல்வி

✖ 'பிளே ஆப்'

தகுதிச்சுற்று 1ல் சென்னையிடம் தோல்வி

தகுதிச்சுற்று 2ல் கொல்கத்தாவை வென்று இறுதிக்கு தகுதி.

**ஆறு வெற்றி**

மும்பை வான்கடே மைதானத்தில் சென்னை அணி பங்கேற்ற 12 ஐ.பி.எல்., போட்டிகளில் 6ல் வெற்றி பெற்றது. 6ல் தோற்றது.

**ஏழாவது முறை**

அதிக ஐ.பி.எல்., இறுதியில் பங்கேற்ற அணித் தலைவர்கள் வரிசையில் தோனி 'நம்பர்-1' ஆக உள்ளார். இவர் சென்னை அணிக்காக இன்று 7ஆவது முறையாக இறுதியில் பங்கேற்கிறார். 2017 இறுதியில் புனே அணிக்காக சாதாரண வீரராக விளையாடினார்.

**ஒன்பது முறை**

சென்னை, ஹைதராபாத் அணிகள் ஐ.பி.எல்., தொடரில 9 முறை மோதின. இதில் சென்னை 7ல் வென்றது. 2ல் ஹைதராபாத் வெற்றி பெற்றது. இத்தொடரில் இரு அணிகள் மோதிய 3 போட்டிகளிலும் சென்னை அணி வென்றது.

**43 ஓட்டங்கள்**

சென்னை அணியின் ரெய்னா (4,957 ஓட்.,) இன்னும் 43 ஓட்டங்கள் எடுக்கும் பட்சத்தில் ஐ.பி.எல்., தொடரில் 5000 ஓட்டங்கள் எடுத்த முதல் வீரர் என்ற பெருமை பெறலாம். ஹோலி (4,948) அடுத்த இடத்தில் உள்ளார்.

**50ஆவது விக்கெட்**

சென்னை 'சுழல்' வீரர் ஹர்பஜன் சிங் இன்று ஒரு விக்கெட சாய்த்தால், மும்பை வான்கடே மைதானத்தில் 50 ஐ.பி.எல்., விக்கெட் வீழ்த்திய வீரர் ஆகலாம்.

**மழை வந்தால்**

இறுதிப் போட்டி நடக்கும் மும்பையில் வானம் 25 முதல் 44 சதவீதம் வரை மேகமூட்டமாக காணப்படும். மழை வர அதிகபட்சம் 7 சதவீதம் தான் வாய்ப்புள்ளது.

ஒருவேளை மழை அல்லது வேறு காரணங்களுக்காக போட்டி நடக்கவில்லை எனில் 'ரிசர்வ் டே' (மேலதிக நாள்) கிடையாது. சுப்பர் ஓவரில் வெற்றி பெறும் அணி முடிவு செய்யப்படும்.

இதற்கும் வாய்ப்பில்லை எனில் புள்ளிப்பட்டியலில் முந்திய அணி அல்லது 'பிளே ஓப்' சுற்றில் பெற்ற வெற்றி அடிப்படையில் கிண்ணம் வெல்லும் அணி தேர்வு செய்யப்படும். இதன் படி தகுதிச்சுற்று 1ல் ஹைதராபாத்தை வென்ற சென்னைக்கு அதிர்ஷ்டம் கிடைக்கலாம்.



பாகிஸ்தானுக்கு எதிராக லண்டன் லோர்ட்ஷில் நடைபெறும் 1ஆவது டெஸ்டில், அறிமுக அரைச்சதம் அடித்த (55*) இங்கிலாந்தின் டொமினிக் பெஸ்



# மரண அறிவித்தல்



## திருமதி இந்திராணி மகாலிங்கம்

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி மகாலிங்கம் நேற்று (26.05.2018) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி மகாலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சர்மிளா (லண்டன்), சுறாஜ், மயூரன் (கட்டார்), ஷகிலா (ஆசிரியர் - மன்/வெள்ளாங்குளம் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் விக்னகுமரன், வசீகரன், ரேணுகா, வேதாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும் சண்முகராசா (மாங்குளம்), காலஞ்சென்ற தவரெட்ணராஜா மற்றும் தர்மராஜா (வவுனியா), தவமணிதேவி, மனோகரி (கனடா), மகேந்திரன், விமலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்சன், ரிஷிடிலன், ரிஷிகா, அஸ்மிதன், டிவானுஜன், றோஸ்மிகன், அக்சைதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (27.05.2018) பி.ப 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(4217)

இல.53, பெரியதம்பிரான் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்
077 465 6498,
077 748 9349, 071 896 6006


## 'ஃபிபா' கால்பந்து கவுண்ட் டவுண் 18

# பீலே அதிர்ச்சி; பிரேசில் சம்பியன்

ஒன்பதாவது உலக கிண்ண கால்பந்து தொடர், 1970ல் மெக்சிகோவில் நடந்தது.



தகுதிச் சுற்றுப் போட்டிகளில் 71 நாடுகள் பங்கேற்றன. ஆபிரிக்க கண்டத்தில் இருந்து தகுதி பெற்ற முதல் அணி என்ற பெருமையை மொரோக்கோ பெற்றது.

இம்முறை வீரர்களின் ஆட்டம் ரசிக்கும் படியாக இருந்தது. பீலே, ஜேயர் சின்கோ, ரிவலின்கோ, டோஸ்டோ ஆகிய நான்கு நட்சத்திர வீரர்களுடன் 'நூற்றாண்டின் சிறந்த அணியாக' களமிறங்கிய பிரேசில், தாக்குதல் பாணியிலான ஆட்டத்தை வெளிப்படுத்தி ரசிகர்களை கிறங்கடித்தது.

பீலேவின் அபார ஆட்டம் தொடர, காலிறுதியில் பெருவை வீழ்த்தியது. பின் அரையிறுதியில் உருகுவேயை வென்று, எளிதாக இறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு காலிறுதியில், 'நடப்பு சம்பியன்' இங்கிலாந்து அணி, மேற்கு ஜேர்மனியிடம் தோற்று வெளியேறியது. அடுத்து நடந்த அரையிறுதியில் வலிமை மிக்க இத்தாலியை, மேற்கு ஜேரமனி எதிர்கொண்டது. நிர்ணயிக்கப்பட்ட ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் 1-1 என சமநிலையில் இருந்தன. பின் கூடுதல் நேரத்தில் அசத்திய இத்தாலி அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, இறுதிக்குள் நுழைந்தது.

**பிரேசில் சம்பியன்**

இறுதியில் மிரட்டிய பிரேசில் அணி, மிகுந்த சோர்வுடன் காணப்பட்ட இத்தாலியை 4-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

இதன்மூலம் 'ஜூல்ஸ் ரிமட்' கிண்ணத்தை சொந்தமாககி கொண்டது. இந்த உற்சாகத்தில் இருந்த பிரேசில் ரசிகர்களுக்கு, உலக கிண்ண போட்டிகளில் இருந்து பீலே ஓய்வு பெற்றது பெரும் அதிர்ச்சி அளித்தது.

**ஃபிரி கிக்**

**16 ஆண்டுகளுக்கு பின்...**

மேற்கு ஆபிரிக்க நாடு செனகல், 2002ல் தென் கொரியா மற்றும் ஜப்பானில் நடந்த உலக கிண்ண தொடரில் முதன் முறையாக பங்கேற்றது. 'நடப்பு சம்பியன்' பிரான்சை முதல் போட்டியிலேயே வீழ்த்திய இந்த அணி, காலிறுதியில் துருக்கியிடம் தோற்று வெளியேறியது. 16 ஆண்டுகளுக்கு பின் செனகல் அணி, இம்முறை (2018) விளையாட தகுதி பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நாட்டின் வளர்ச்சியே உங்கள் கைகளை நம்பித்தான்

தினமும் கோடீஸ்வரர்கள், இலட்சாதிபதிகளுடன் இலட்சக்கணக்கான வெற்றியாளர்களைத் தோற்றுவிக்கும் தேசிய லொத்தர் சபை இந்த நாட்டின் முன்னேற்றம் மற்றும் நிலையான அபிவிருத்தியின் பின்னணியில் என்றும் இருந்தது.

பெரு நகரங்கள் மற்றும் கிராமங்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் நாடு முன்னேறுவது நீங்கள் வழங்கும் சிறிய ரூபா.20/- பங்களிப்பின் மூலமே.

# தேசிய லொத்தர் சபையின் இவ்வார லொத்தர் வெற்றி விபரங்கள்

### 2018.05.18

வெற்றி இலக்கங்கள்

- මහජන සම්පත 3660: F 4 9 5 3 2 7
- සම්පත් රේඛා 817: B 10 13 26 29 36 — 2nd சன்ஸ்: 37 46
- ගොවි සෙත 1763: Y 15 23 45 59
- Mega Power 228: T — சுப்பர் இலக்கம் 04 — 17 32 54 66

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **575,622**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.20,919,570**

### 2018.05.19

வெற்றி இலக்கங்கள்

- ජාතික සම්පත 840: Q 7 8 3 9 4 3
- සුපිරි වාසනා 1326: சுப்பர் இலக்கம் 07 — 17 20 21 28 (முதல் போனஸ் இல, இரண்டாவது போனஸ் இல)
- ගොවි සෙත 1764: F 02 33 38 56
- සෙවණ 084: O 28 29 45 51

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **441,221**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.17,029,120**

### 2018.05.20

வெற்றி இலக்கங்கள்

- මහජන සම්පත 3661: E 8 9 8 6 8 7
- ගොවි සෙත 1765: T 09 46 71 79
- නීරෝගා 396: தனு 26 32 35 48 (போனஸ் இலக்கம்)

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **353,090**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.14,370,370**

### 2018.05.21

வெற்றி இலக்கங்கள்

- මහජන සම්පත 3662: F 4 3 6 1 6 2
- ගොවි සෙත 1766: L 07 37 49 73
- Double Dreams 103: L 03 04 63 கார் 01
- Mega Power 229: O — சுப்பர் இலக்கம் 03 — 07 22 29 59

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **426,501**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.17,498,760**

### 2018.05.22

வெற்றி இலக்கங்கள்

- මහජන සම්පත 3663: D 4 6 8 5 6 8
- සෙවණ 085: R 18 35 44 64
- නීරෝගා 397: கன்னி 29 46 51 64 (போனஸ் இலக்கம்)
- ගොවි සෙත 1767: L 32 38 54 56

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **432,928**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.18,728,640**

### 2018.05.23

வெற்றி இலக்கங்கள்

- ජාතික සම්පත 841: C 7 4 9 0 8 8
- සුපිරි වාසනා 1327: சுப்பர் இலக்கம் 23 — 19 45 49 65 — முதல் போனஸ் இல 10, இரண்டாவது போனஸ் இல 66
- ගොවි සෙත 1768: O 05 40 45 66
- Mega Power 230: J — சுப்பர் இலக்கம் 01 — 04 07 08 19

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **461,530**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.14,982,550**

### 2018.05.24

வெற்றி இலக்கங்கள்

- මහජන සම්පත 3664: H 0 5 5 7 3 8
- වාසනා සම්පත 1493: RCE 04 09 26 47 — போனஸ் இலக்கம் 59
- ගොවි සෙත 1769: W 33 49 57 79
- නීරෝගා 398: கன்னி 18 38 46 53 (போனஸ் இலக்கம்)

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **465,809**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.18,582,030**



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
234/2, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரணவாய் மேற்கு வல்லியாவத்தை பகுதி மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்காக கிணறு மற்றும் தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் 2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் 10 இலட்சம் ரூபாய் இதற்கு ஒதுக்கப்பட்டது. இதற்கு காணி இல்லாமையால் அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை. அப் பகுதியைச் சேர்ந்த குமரன் செல்லக்கண்டு என்பவர் இதற்கான காணியினை வழங்கியதையடுத்து அடிக்கல் நேற்று முன்தினம் நாட்டப்பட்டது. இதில் கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன். திட்டமிடல் உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# மல்லாகத்தில் தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மருதஞ்சோலை அருள்மிகு பெரியநாயகி சமேத பெரிய தம்பிரான் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை வைகாசிப் பொங்கல் வேள்விப் பெரும்விழா அதிகாலை 5 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறும். இப்பெருவிழாவில் "சடங்கு வழிபாடு" எனும் விடயத்தில் தெய்வீக ஞானத் தமிழருவி காரை எம்.பி. அருளானந்தனின் தெய்வீகப் பேருரை இடம்பெறும். (இ

# மழலைகளுடன் மக்கள் வங்கி

(யாழ்ப்பாணம்)

சிறுவர் சேமிப்புக்கு அத்திபாரம் இடும் நோக்கோடும் சேமிப்பை ஊக்குவிக்கும் நிகழ்ச்சியாகவும் நடைபெறும் மழலைகளுடன் மக்கள் வங்கி எனும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் சதானந்தன் சர்வானந்தன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் கந்தசாமி சுசீந்திரன் வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர். சிதம்பரப்பிள்ளை தில்லைநாதன், மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் சின்னராசா நித்தியானந்தன், மக்கள் வங்கி உதவி பிராந்திய முகாமையாளர் நாகேந்திரன் சிறிகாந்தா, கௌரவ விருந்தினராக வல்வெட்டித்துறை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கௌரி சேதுராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ

# மு.தளையசிங்கம் பன்முகப்பார்வை முழுநாள் ஆய்வரங்கு யாழில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி தூண்டி இலக்கியவட்டத்தின் ஏற்பாட்டில் மு.தளையசிங்கம் பன்முகப்பார்வை முழுநாள் ஆய்வரங்கு நாளை மறுதினம் 29ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வு 2அமர்வுகளாக இடம்பெறவுள்ளது. முதலாவது அமர்வு கவிஞர். சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும். இதில் மெய்யுள்.முற்போக்கு இலக்கியம். விமர்சனம்,சமூக,அரசியற் செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடல் இடம்பெறும்.

இரண்டாவது அமர்வு பேராசிரியர்.இரா.சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறும். இதில் நாவல். சிறுகதைகள்.கவிதை பற்றிக் கலந்துரையாடல் இடம்பெறும்.

இந்நிகழ்வின் தொகுப்புரையினை தி.செல்வமனோகரன் வழங்குவார். (இ-7)

# மீன்பிடிப் படகு வழங்கல்



(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி திணைக்களத்தினால் நடத்தப்படும் அபிவிருத்தி சீட்டிழுப்பில் 2018 ஜனவரி மாதத்தில் வெற்றி பெற்ற ஜே/06 கிராம உத்தியோகத்தர் பிரிவைச்சேர்ந்த அயிரான்சிஸ் என்பவருக்கு கிடைத்த இரண்டு இலட்சம் ரூபா நெடுந்தீவு சமுர்த்தி தலைமையக பிரிவின ரின் நெறிப்படுத்தலில் இவரது குடும்பத்தின் வாழ்வாதாத்தை மேம்படுத்தும் நோக்கிலும் வருமானம் ஈட்டும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையிலும் மீன்பிடி படகு கொள்வனவு செய்யப்பட்டு நெடுந்தீவு பிரதேச செயலாளர் எப்.சி. சத்தியசோதி, கணக்காளர் எம்.சிவகுமார் ஆகியோரால் பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.(இ

# தொடர்ச்சியாக இயங்கும் புகையிரதக் கடவை சமிக்ஞை

(சாவகச்சேரி)

புகையிரதக் கடவைகளின் சமிக்ஞை விளக்கும் ஒலியும் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருந்தன. இதனால் கடவைகளை கடப்போர் புகையிரதம் வருமா? இல்லையா? என்ற அச்சத்தில் இருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. வடக்கு முழுவதும் நேற்று காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

இதன் காரணமாக புகையிரதக் கடவைகளின் தானியங்கி சமிக்ஞை விளக்குகள் தொடர்ச்சியாக செயற்பட்டுக் கொண்டிருந்தன. இன்றும் மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சமிக்ஞை விளக்குகள் தொடர்ச்சியாக செயற்படக்கூடும் என்பதால் புகையிரதக் கடவைகளை கடப்போர் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.(இ-89)



# மணவாளக்கோலத் திருவிழா விஞ்ஞாபனமும் தட்ஷணவாயில் மண்டப அங்குரார்ப்பணமும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு பெரிய கலட்டி ஞானவைரவர் சுவாமி கோவில் நவோத்திர சகஸ்ர மஹா சங்காபிஷேக மணவாளக்கோலத் திருவிழாவும் தட்ஷணவாயில் வழிபாட்டு மண்டப அங்குரார்ப்பணமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறும். (இ

# ரம்ழான் புனித அல்குர்ஆன் போட்டி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியா கல்லூரி மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ரம்ழான் புனித அல்குர்ஆன் போட்டி பரிசளிப்பு விழா நடைபெறும். அஷ்ஷேக் எம்.எஸ். ஏ.எம். முபாரக் மௌலவி (நளீமி) தலைமையில் இயங்கும் அல்பாக்கியாத்துஷ் ஷாலி ஹாத் பௌண்டேஷன் ஆதரவில் பத்தாவது முறையாக நடைபெறும் இந்த பரிசளிப்பு விழாவில் நிகழ்ச்சி தொகுப்பாளராக எழுத்தாளர் தேசாபிமானி எம்.எப். எம். இக்பால் செயற்படுவார். (இ

# வள்ளுவர் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் சிவகணேசன் புடைவையகமும் இணைந்து முன்னெடுக்கவுள்ள திருவள்ளுவர் விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும். மலையகக் கிராமிய நடனம், நாட்டிய நாடகம், வள்ளுவர்வழி முகாமைத்துவம் என்ற பொருளில் அமைந்த ஆய்வரங்கம் ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் ஆய்வரங்க நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதாக தமிழ்ச்சங்கம் அறிவித்துள்ளது. (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில இடையூறுகள் ஏற்படலாம்.

**மேடம்:** தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள், விருந்தினர் வருகையுண்டு, களஸ்திர நன்மையுண்டு.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, உடல்.நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபார விருத்தியுண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு

**கும்பம்:** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், திடீர் பயணங்கள் கைகூடும்.

**கடகம்:** நம்பிக்கைகள் நடைபெற பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், வருமானம் பெருக வழி சமைப்பீர்கள்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பெண்ணால் பெருமைகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், பகை விலகும்.

| | | | |
|---|---|---|---|
| | | சூரி, புத | சுக் |
| | இராசி பலன் | | ராகு |
| செவ். கேது | கிரகநிலை | | |
| சனி | | குரு. சந் | |

சந்திராஷ்டமம்
ரேவதி, அச்சுவினி

**27.05.2018**

வைகாசி 13, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு

திரயோதசி முன்னிரவு 7.06 மணிவரை

சுவாதி முற்பகல் 10.42 மணிவரை

சுபநேரம் 8.52-10.22 மணிவரை

இராகுகாலம் 4.22-5.52 மணிவரை

பிரதோச விரதம்

வளவன்

**தனுசு:** பொது வாழ்வில் புகழ் கூடும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புகள் உங்களை நாடி வரும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், உறவினர்கள் வருகையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பீர்கள், திடீர் பயணத்தால் பணவரவு ஏற்படலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களுக்கு வந்த சோதனை

## சம்பளத்தில் பெரும்பகுதி வரியாக அறவீடு!

(கொழும்பு)

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உழைக்கும்போது வரி செலுத்தும் முறை காரணமாக அமைச்சர்கள் பலருக்கும் பலத்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

உழைக்கும் போது வரி செலுத்தும் முறையின் கீழ் அமைச்சர்களின் மாதாந்தச் சம்பளம், கொடுப்பனவுகள், வாகனத்திற்கான எரிபொருள் கொடுப்பனவு மற்றும் சாரதிக்கான சம்பளக் கொடுப்பனவு என்பன அவர்களின் வருமானம் கணிக்கப்பட்டு. அதிலிருந்து புதிய வரி அறவிடப்படுகின்றது.

அந்த வகையில் இம் மாதம் பெரும்பாலான அமைச்சர்களின் மாதாந்தச் சம்பளத்தில் 50 ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சம் ரூபா வரை வரியாக அறவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஒரு சிரேஷ்ட அமைச்சருக்கு இந்த மாதம் 25 ஆயிரம் ரூபா மட்டுமே சம்பளமாக கையில் கிடைக்கப் பெற்றுள்ளது.

இது குறித்து அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பலை தோன்றியுள்ளது. எனினும் நிதியமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும் வரி அறவிடுதலை நேரடியாக எதிர்ப்பதற்கும் யாரும் முன்வரவில்லை என்றும் தெரியவருகின்றது.

எனவே இது குறித்து நிதியமைச்சர் மங்கள சமரவீரவுடன் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் கயந்த கருணாதிலக்க சந்திப்பொன்றை மேற்கொண்டு இந்த வரி அறவிடல் முறையில் நெகிழ்வொன்றை ஏற்படுத்தும் சாத்தியம் குறித்து கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# திருடர்களைப் பாதுகாக்கும் திருடர்களே அரசில் உள்ளனர்

## சத்துர எம்.பி. விசனம்

(கொழும்பு)

திருடர்களைப் பாதுகாக்கும் திருடர்கள் தற்போதைய அரசாங்கத்தில் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சத்துர சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆரம்பத்தில் 100 நாள் வேலைத்திட்டத்தின் போது மிகப் பெரிய புரட்சியை செய்தது. அத்துடன் தற்போது அரசாங்கத்திற்கு இன்னும் 541 நாட்களே எஞ்சியுள்ளன.

இந்த காலத்தில் அன்று 100 நாள் வேலைத்திட்டத்தில் செய்த வேலைகளை 5 மடங்காக அதிகரித்து எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் எனவும் சத்துர சேனாரட்ன வலியுறுத்தினார். (இ-7)

# ரணிலுக்கு அதிகாரத்தை வழங்கவே இருபதை ஜே.வி.பி. கொண்டுவந்தது

## வாசுதேவ எம்.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முழுமையான அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான சூழலை உருவாக்கும் வகையிலேயே 20 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார அதற்கு கூட்டு எதிர்க்கட்சி ஒருபோதும் இடமளிக்காது எனவும் தெரிவித்தார்.



ஜே.வி.பியினால் 20 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.20 ஆவது சீர்திருத்தத்திற்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சினால் தீர்மானமொன்று இன்னும் எடுக்கப்படவில்லை. அதற்கான கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. எனினும் எந்த சந்தர்ப்பத்திலும் அதற்கு கூட்டு எதிரணி ஆதரவளிக்காது என்பதே எமது நிலைப்பாடாகும்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதிகாரங்கள் அனைத்தும் பாராளுமன்றத்தை சேரும். நாட்டில் ஜனாதிபதிக்கு அடுத்து அதிகாரங்கள் பெற்றவர் பிரதமராவார். எனவே நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டால் அடுத்து அதிகாரங்கள் யார் வசம் என்று சிந்திக்கும். அவற்றை கைப்பற்றக் கூடியவராக பிரதமர் காணப்படுவார். எனவே ஜே.வி.பியின் 20 ஆம் சீர்திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அதிகாரங்கள் அனைத்தும் ரணில் வசம் செல்வதற்கான வாய்ப்புக்களே அதிகமுள்ளன.

ஆனால் ஐ.தே.க.வினுடைய அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து கொள்கைகளுமே நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பொருத்தமற்றதாகவே காணப்படுகின்றது. எனவே அதிகாரங்களை கைப்பற்றுவதற்கு கூட்டு எதிர்கட்சி ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது. அதேவேளை மீண்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சி பீடமேறுவதையும் அங்கீகரிக்காது என அவர் மேலும் தெரிவித்தார் (இ-7)


**FLORANCE NIGHHTINGAALE**

School of Nursing

**படித்துவிட்டு தொழில்வாய்ப்பின்றி வீட்டில் இருக்கின்றீர்களா?**
**எங்களிடம் வாருங்கள். நாங்கள் உங்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றோம்.**

ஒருவருடத் தாதியர் பாடநெறி,3 மாதம் தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள்.

பின் நிரந்தர வேலைவாய்ப்புகள்.

பாடமுடிவின் பின் மாதம் ஒன்றிற்கு அடிப்படைச் சம்பளமாக 14,500/- பெற்றுக்கொள்ளமுடியும்.

OTயுடன் 25,000/- ரூபாவினை பெற்றுக்கொள்ளலாம்.



**தொடர்புகளுக்கு: 077 718 6438**

கே.கே.எஸ்.வீதி, மருதனார்மடம், (ஆஞ்சநேயர் கோயில் முன்பாக)

குஞ்சர்கடையடி, கரணவாய் மத்தி, நெல்லியடி.

(சி-2728)


# இயற்கை சீற்றத்தால் சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.10 ஆயிரம் முற்பணம்

(கொழும்பு)

இயற்கை சீற்றத்தின் காரணமாக சேதமடைந்த வீடுகளுக்கு முதற்கட்டமாக பத்தாயிரம் ரூபாய் முற்பணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக நிலவிய கனமழை மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் தற்போதைக்கு 64 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

அதற்கு மேலதிகமாக 3841 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்த நிலையில் சேதமடைந் துள்ள வீடுகளுக்கு தேசிய காப்புறுதி நிதியத்தினூடாக இழபபீடுகளை வழங்கும் வகையில் பத்தாயிரம் ரூபா வீதம் முற்பணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 353 இலட்சம் ரூபா நாட்டின் அனைத்து மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த முற்பணம் வழங்கும் நடவடிக்கை நேற்று தொடக்கம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளை வழங்குவதற்காக 388 இலட்சம் ரூபா மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (இ-7)


**உளசமூகப் பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சிநெறி**

**பதவி வெற்றிடம்-25**

**தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம், மாவட்ட செயலகங்கள் (வடமாகாணம்) மற்றும் சாந்திகம்** ஆகிய நிறுவனங்கள் இணைந்து வடமாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளநல, உளசமூக சேவைகளை வழங்க முன்வந்துள்ளன. அதன் ஒரு அம்சமாக உள சமூகத் துறையில் பயிற்சியாளர்களை உருவாக்கி அவர்களூடாக பாதிக்கப்பட்ட கிராமங்களில் பணியாற்றும் அரச, அரச சார்பற்ற மற்றும் கிராம மட்ட பொது அமைப்பினரைப் பயிற்றுவிப்பதையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள சமூக ஆதரவினை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு இவ் விண்ணப்பம் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் ஏற்கனவே கோரப்பட்டது (2017 ஐப்பசி மாதம்). திரும்பவும் விண்ணப்பிக்க சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது. முன்னர் விண்ணப்பித்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

இத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் இரண்டு மாதகாலப் பயிற்சியைத் தொடர்ந்து தத்தமது பிரதேசங்களில் பணியாற்றத் தொடங்குவார்கள்.

**திட்டக் காலப்பகுதி: 1 வருடம் உத்தேசிக்கப்பட்டுள்ளது.**

**தகைமைகள்:**

1) உளவியல், சமூகவியல், மானுடவியல், மெய்யியல், விஞ்ஞானம் மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளில் இளங்கலைமாணிப் பட்டம் பெற்றிருத்தல்.
2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது கல்வி நிறுவனம் ஒன்றில் மேற்படி துறையில் டிப்ளோமாவுடன் குறைந்தது பல வருடங்களாவது வேலை செய்த அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
3) உள சமூகத் துறையில் பல வருடங்களாவது திறமையாக வேலை செய்த அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
4) கணினி அறிவு முக்கியமானது.
5) ஆங்கிலத்தில் திறமையுள்ளவர்களாக இருப்பது அவசியமானது.
6) சிறந்த தொடர்பாடல் திறனும் ஏனையவர்களைக் கற்பிப்பதில் சுய ஆர்வமும் விருப்பமும் சமூக சேவை மனப்பான்மை கொண்டவராக இருத்தல்.

மேற்படி பதவி நிலைக்குத் தெரிவு செய்யப்படுவர்கள் தத்தமது மாவட்டத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் பயிற்சி வழங்குவதிலும் களப்பணியில் ஈடுபடுவதற்குமுரிய உடல், உளத்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் மோட்டார் சைக்கிளும் அதற்கான சாரதி அனுமதிப்பத்திரமும் கொண்டிருத்தல் வேண்டத்தக்கது.

மேற்படி தகைமை உள்ளவர்கள் தங்களைப் பற்றிய தகவல் பெறக்கூடிய, உறவினரல்லாத மூவரின் பெயரைக் குறிப்பிட்டுத் தங்களுடைய சுயவிபரக் கோவையை பின்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு: சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

இத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கப் பெண்கள், வடக்கு மாகாணத்தில் வசிப்பவர்கள் மற்றும் பல இன, மத, மொழி, சாதி, மலையக பின்னணியைக் கொண்டவர்கள் அதிகம் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 01.06.2018**

**அனுப்ப வேண்டிய முகவரி: இணைப்பாளர்-வடமாகாணம்,**
**தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம், சாந்திகம்,**
**8, கற்பக விநாயகர் வீதி (கச்சேரி நல்லூர் வீதி),**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல : 021-300 490[illegible]**
**மின்னஞ்சல் முகவரி:** onur.shanthi[illegible]



**கண்ணீர் அஞ்சலி**

**திரு. அந்தோனிப்பிள்ளை மரியதாஸ்**



எமது பாடசாலையில்
கல்வி கற்பிக்கும்
**திருமதி.**
**லெசியா லக்ஷி மெல்போன்**
ஆசிரியையின்
தந்தையாரான
**அந்தோனிப்பிள்ளை**
**மரியதாஸ்**
அவர்களின்
மரணச் செய்தி அறிந்து
துயர் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்,
கிளி/செல்லியாதீவு அ.த.க.பாடசாலை, பூநகரி.

(4209)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20-வது அரசியலமைப்பு திருத்த யோசனை மிகச் சிறந்தது

## லால் விஜேநாயக்க பாராட்டு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ள 20வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பான யோசனை மிகச் சிறந்தது என புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பில் மக்கள் கருத்தை அறியும் குழுவின் தலைவரான சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படும் என்பது நீண்டகாலமாக வாக்குறுதியாக மாத்திரமே இருந்து வந்துள்ளது.

இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமை மற்றும் புதிய அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுவதில் காணப்படும் மந்த நிலைமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் பார்த்தால், மக்கள் விடுதலை முன்னணியின் இந்த யோசனை மிக சிறந்த ஒன்றாகும் எனவும் லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் 20வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பான யோசனையை மக்கள் விடுதலை முன்னணி நேற்று முன்தினம் நாடாளுமன்ற செயலாளர் தம்மிக திஸாநாயக்கவிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்காவின் பாரிய கடற்படை கூட்டுப் பயிற்சி

## இலங்கை கடற்படைக்கு முதல் முறையாக அழைப்பு

(கொழும்பு)



இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அமெரிக்கா நடத்தி வரும் பாரிய கடற் படைக் கூட்டுப் பயிற்சியில் முதன் முறையாக இலங்கைக் கடற்படையும் பங்கேற்கவுள்ளது.

ஹவாயில் "பசுபிக் விளிம்பு" ஒத்திகை என்ற பெயரில், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பாரிய கடற்படைக் கூட்டுப் பயிற்சியை அமெரிக்கா நடத்தி வருகிறது.

1971 ஆம் ஆண்டு அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கூட்டுப் பயிற்சி, இந்த ஆண்டு எதிர்வரும் ஜூன் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகி, 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இம்முறை கூட்டுப் பயிற்சியில் இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான், கனடா உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கின்றன.

இதில் பங்கேற்க இலங்கைக்கு முதன் முறையாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் ஆரம்பமாகும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க இலங்கை கடற்படையின் போர்க் கப்பல் ஒன்று ஹவாய்க்குச் செல்லவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுகளால் இலங்கையுடனான இராணுவ உறவுகளை குறைத்திருந்த அமெரிக்கா அண்மையில், இருதரப்பு உறவுகளை பலப்படுத்தி வருகிறது.

இதன் அடுத்த கட்டமாகவே, இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா முதன்முறையாக கூட்டுப் பயிற்சிக்கான அழைப்பை விடுத்துள்ளது. (இ-7)

# பரிசில் நாள் இன்று

(யாழ்ப்பாணம்)

கைதடி தச்சன்தோப்பு "கற்பதால் உயர்வோம், காலத்தை வெல்வோம்" கந்தையா கனகம்மா நிதியத்தின் பரிசளிப்பு நாள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் சாவகச்சேரி பிரதேச சபை நாவற்குழி உபபணிமனை பொறுப்பதிகாரி இராசதுரை ஜெயக்காந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் கந்தையா வாமதேவன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் தில்லைநாதர் தங்கவேல், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் மேரிலூர்த்து கனகரத்தினம், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் மல்லிகா பாலச்சந்திரன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அரியகுட்டி விமலறோசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# பொதுஜன பெரமுன பிரதேச சபை உறுப்பினர் உட்பட நால்வர் கைது

(கொழும்பு)

இபலோகம கன்திரியாகம பிரதேசத்தில் பயிர் நிலத்தில் பொருத்தப்பட்டிருந்த நீரப்பம்பி ஒன்றைக் களவாடிய சம்பவம் தொடர்பில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களவாடிய குறித்த நீர்ப்பம்பியின் பெறுமதி 39 ஆயிரத்து 500 ரூபா என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நீர்ப்பம்பியின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்டிருந்த முறைப்பாட்டுக்கு அமையவே இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, இதற்கு முன்னர் அவர்கள் திருடிய 8 நீர்பம்பிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (இ-7)

# பொது மக்களுக்கு முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக வெள்ள அனர்த்த நிலைமைகளுக்கு மத்தியில் தொற்று நோய்களைத் தடுக்க பொது மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என சுகாதார துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

தொற்று நோய்களைத் தவிர்ப்பதற்காக கொதித்தாறிய நீரைப் பருகுமாறு தொற்று நோய் ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்தியர் பபா பலிஹவதன தெரிவித்துள்ளார்.

சீரற்ற வானிலை காரணமாக சுவாசம் சார்ந்த நோய்கள் மற்றும் எலிக்காய்ச்சல் என்பன பரவும் அபாயம் தொடர்பிலும் அவதானத்துடன் இருக்குமாறு தெரிவித்துள்ளார்.

வெள்ளநீர் உட்புகுவதனால் கிணறுகள் அசுத்தமடைந்துள்ளன.

எனவே, சுத்தமான குடிநீரையோ அல்லது கொதித்தாறிய நீரையோ பருக வேண்டும்.

ஏனெனில், நீரின் மூலம் நோய்கள் பரவும் நிலைமையே அதிகளவில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், தடிமன் உள்ளிட்ட நோய் நிலைமைகள் ஏற்படுமாயின் உடனடியாக வைத்திய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என தொற்று நோய் ஒழிப்பு பிரிவின் விசேட வைத்தியர் பபா பலிஹவதன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 05.2018 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1883-ரஷ்யாவின் மன்னனாக மூன்றாம் அலெக்சாண்டர் முடி சூடினான்.
- 1937-கலிபோர்னியாவில் கோல்டன் கேட் பாலம் திறக்கப்பட்டது.
- 1940-இரண்டாம் உலகப் போர்: பிரான்சில் டன்கேர்க் என்ற இடத்தில் ஜேர்மனியரிடம் சரணடைந்த ஐக்கிய இராச்சியத்தின் நோர்ஃபோக் பிரிவைச் சேர்ந்த 99 பேரில் 97 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் பிஸ்மார்க் போர்க் கப்பல் வட அட்லாண்டிக்கில் மூழ்கடிக்கப்பட்டதில் 2,100 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997-முல்லைத்தீவுக் கடலில் கடற்புலிகள் படகில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 8 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1907 ரேச்சேல் கார்சன், அமெரிக்க உயிரியலாளர், நூலாசிரியர் (இ. 1964)
- 1916 ச.ராஜாபாதர், இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், பொதுவுடைமைவாதி (இ. 1986)
- 1931 ஓ.என்.வி.குறுப்பு, மலையாளக் கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர் (இ. 2016)
- 1935 தினேசு கோசுவாமி, இந்திய அரசியல்வாதி
- 1954 லோரன்சு எம்.குரோசு, கனடிய-அமெரிக்க இயற்பியல் கோட்பாட்டாளர், அண்டவியலாளர்
- 1957 நிதின் கட்காரி, இந்திய அரசியல்வாதி
- 1962 ரவி சாஸ்திரி, இந்தியத் துடுப்பாட்ட வீரர்
- 1977 மஹேல ஜயவர்தன, இலங்கைத் துடுப்பாட்ட வீரர்

### இறப்புகள்

- 1564-ஜான் கால்வின், பிரான்சிய இறையியலாளர், மதகுரு (பி. 1509)
- 1840-நிக்கோலோ பாகானீனி, இத்தாலிய வயலின் இசைக்கலைஞர், இசையமைப்பாளர் (பி. 1782)
- 1910-ராபர்ட் கோக், நோபல் பரிசு பெற்ற செருமானிய மருத்துவர் (பி. 1843)
- 1919-கந்துகூரி வீரேசலிங்கம், இந்திய நூலாசிரியர், செயற்பாட்டாளர் (பி. 1848)
- 1964-ஜவகர்லால் நேரு, இந்தியாவின் முதலாவது பிரதமர் (பி. 1889)
- 1981-க. இரா.ஜமதக்னி, இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், மார்க்சிய சிந்தனையாளர், நூலாசிரியர் (பி. 1903)
- 1988-ஏர்ணஸ்ட் ருஸ்கா, நோபல் பரிசு பெற்ற செருமானிய இயற்பியலாளர் (பி. 1906)
- 1998 -மினூ மசானி, இந்திய வழக்கறிஞர், அரசியல்வாதி (பி. 1905)

### சிறப்பு நாள்

- சிறுவர் நாள் (நைஜீரியா)
- அன்னையர் நாள் (பொலீவியா)
- அடிமை ஒழிப்பு நாள் (குவாதலூப்பே, செயிண்ட்-பார்த்தலெமி, சென் மார்ட்டின்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 60 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 170 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 70 | 80 | 120 | 80 |
| தக்காளி | 200 | 200 | 200 | 130 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 35 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 80 | 65 | 120 | 80 |
| கரட் | 200 | 300 | 180 | 80 | 300 | 200 |
| பூசணி | 40 | 20 | 30 | 20 | 40 | 30 |
| புடோல் | 120 | 100 | 80 | 55 | 120 | 80 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 | 30 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 160 | 130 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 85 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 200 | 140 | 140 | 160 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 80 | 160 | 70 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | — | — | 100 | 60 |
| பயற்றங்காய் | 140 | 200 | 140 | 80 | 120 | 200 |
| லீக்ஸ் | 200 | 300 | 240 | 120 | 240 | 250 |
| பீற்றூட் | 120 | 100 | 50 | 30 | 80 | 70 |
| கறிமிளகாய் | 140 | 200 | 100 | 60 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 200 | 200 | 200 | 250 |
| போஞ்சி | 250 | 300 | 240 | — | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | — | — | 80 | 70 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 40 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 200 | 200 | 120 | 200 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 100 | 70 | 25-70 | 50-75 | 75 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | — | 150 | 200 |
| வெங்காயப்பூ | 250 | — | 280 | — | — | 320 |
| முள்ளங்கி | 100 | 100 | 140 | 30 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 35 |
| ஈரப்பலா | 80 | — | — | — | 100 | 110 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டு இயந்திரங்கள் தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)

அத்தியாவசிய திருத்தப் பணிகள் காரணமாக நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டு மின்பிறப்பாக்கி இயந்திரங்களை தற்காலிகமாக நிறுத்துவதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்றுக் காலை முதல் இரண்டாவது மற்றும் மூன்றாவது மின்பிறப்பாக்கி இயந்திரங்களை நிறுத்துவதற்கு தீர்மானித்ததாக அந்தச் சபை தெரிவித்துள்ளது.

அதன்படி தற்போது முதலாவது மின்பிறப்பாக்கி இயந்திரத்தின் மூலம் மாத்திரம் மின் உற்பத்தி செய்யப் படுவதாகவும் அதனூடாக தேசிய மின்சார கட்டமைப்புக்கு 200 மெகாவோல்ட் மின் இணைத்துக் கொள்ளப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

முதலாவது மின்பிறப்பாக்கி இயந்திரத்தில் காணப்படுகின்ற தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அதில் இருந்து முழுமையான மின் சாரத்தை உற்பத்தி செய்ய முடியாது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த நாட்களில் தேவையான அளவு நீர் இருப்பதால் நூற்றுக்கு 55 வீதம் நீர் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இதே வேளை நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது மின்பிறப்பாக்கி இயந்திரங்களை திருத்தம் செய்வதற்கு சுமார் 5 நாட்கள் எடுக்கும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-7)

# அரசு சார்பில் பேசினால் 2 இலட்சம் ரூபாய் பணம்

## மகிந்த யாப்பா தகவல்



(கொழும்பு)

அரசாங்கத்தின் சார்பில் பேசினால் இரண்டு இலட்சம் ரூபாய் பணம் கிடைக்கப் பெறுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறு பணம் வழங்கப்படுவதாக அவர் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற விவகார அமைச்சினால் இவ்வாறு இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் சார்பில் சத்திமிடும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கொடுப்பனவை பெற்றுக் கொள்கின்றனர். தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் இவர்கள் அரசாங்கத்தின் சார்பில் குரல் எழுப்புவது நியாயமானதே என கூறியுள்ளார். (இ-7)

# பாதாள உலகக் குழுவே படுகொலைக்கு காரணம்

(கொழும்பு)

இரத்மலானை - ஞானேந்திர வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தெஹிவளை - கல்கிஸை மாநகர சபையின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர் ரஞ்சன் சில்வா உயிரிழந்த சம்பவம் தொடர்பான உண்மை வெளியாகியுள்ளது.

இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய நபர்கள் பயணித்த வெள்ளை நிறக் கார் தொடர்பில், பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர், விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்நிலையில், குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இரத்மலானை அஞ்சு எனும் பாதாள உலகக் கோஷ்டித் தலைவரால் செயற்படுத்தப்பட்டது என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில், காயமடைந்த இருவரில் ஒருவர், மேற்படி மாநகர சபையின் ஊழியரெனவும் மற்றையவர், ஆமி சம்பத் (உக்குங்) என்றழைக்கப்படும் சரத் ஜயகொடி என்பவரெனவும் இவர்கள் இருவரும், களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனரென்றும், பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானை லன்சியா மற்றும் இரத்மலானை ரொஹா ஆகிய இரு பாதாள உலகக் கோஷ்டியினருக்கு இடையில் நீண்டகாலமாக நிலவிவந்த பிரச்சினையே இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்குக் காரண மெனச் சந்தேகிக்கப்படுவதோடு, சம்பவத்தில் உயிரிழந்த ரஞ்சன் சில்வா, இரத்மலானை ரொஹா குழுவுக்கு நிதியுதவி செய்து வந்தமைக் காகவே படுகொலை செய்யப்பட்டுள்ளாரெனத் தெரிவிக் கப்படுகின்றது.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர், இலங்கைக் கிரக்கெட் அணியின் வீரர் தனஞ்ஜய டீ சில்வாவின் தந்தையென்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மலையகத்தில் கடும் குளிர்



(ஹற்றன்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக மலையகத்தில் கடும் குளிருடன் கூடிய காலநிலை காணப்படுகின்றது.

தொடர்ந்தும் பெய்து கொண்டிருந்த மழை சற்றுக் குறைந்துள்ளதுடன், நேற்றுக் காலை முதல் தெளிவற்ற வானிலை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொகவந்தலாவ, ஹற்றன், டிக்கோயா, மஸ்கெலியா, தலவாக்கலை, கொட்டகலை, நுவரெலியா, அக்கரப்பத்தனை, டயகம, கினிக்தேனை ஆகிய பகுதிகளில் இன்று காலை முதல் கடும் குளிரான காலநிலை நிலவுகிறது.

இதேவேளை, நுவரெலியா, இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை மற்றும் காலி முதலான ஐந்து மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF SCIENCE, TECHNOLOGY, RESEARCH, SKILLS DEVELOPMENT & VOCATIONAL TRAINING AND KANDYAN HERITAGE

UNIVERSITY COLLEGE OF JAFFNA

Applications are invited from suitable qualified persons for the below mentioned posts on Temporary basis in University College of Jaffna.

**1. LECTURER (CONTRACT)/ VISITING LECTURERINBUILDING SERVICES TECHNOLOGY, CONSTRUCTION TECHNOLOGY, PRODUCTION TECHNOLOGY, FARM MACHINERY TECHNOLOGY, MECHATRONICS TECHNOLOGY, HOSPITALITY MANAGEMENT, COSMETOLOGY (BEAUTICULTURE), FOOD TECHNOLOGY**

**Qualifications:**

1. A Degree with specialization in a relevant subject with First Class or Second Class (Upper Division) Honours.

OR

2. A degree with specialization in a relevant subject with Second Class (Lower Division) Honors and at least 01 year of experience in teaching /research/professional work in recognized mercantile establishment /postgraduate studies in a recognized University or Higher Education Institution;

OR

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other general degree with at least Second Class Honors,

AND

(b) A Postgraduate Degree with duration of at least 02 academic years in the relevant subject with a research component by way of thesis/dissertation;

OR

4. (a) A Degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) One year Master Degree in the relevant subject or equivalent further professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka.

AND

(c) Five (5) years professional experience after graduation or after securing professional qualification given in 4(a).

OR

5 (a) A degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by Act of parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) Eight (8) years professional and/ or teaching experience after graduation or after securing professional qualification given in 5(a)

**NOTE: Automobile Engineering field will be given priority in Farm Machinery Technology.
National Vocational Qualification (NVQ) Level 5 will also be considered for the field of Cosmetology.**

**2. DEMONSTRATOR (CONTRACT) IN BUILDING SERVICES TECHNOLOGY (ELECTRICAL & MECHANICAL), FARM MACHINERY TECHNOLOGY, PRODUCTION TECHNOLOGY, CONSTRUCTION TECHNOLOGY, HOSPITALITY MANAGEMENT & COSMETOLOGY**

**Qualifications:**

- Degree in the relevant field.
- NVQ Level 5 qualification will also be considered for Cosmetology.

**3. INSTRUCTOR IN ENGLISH LANGUAGE&INFORMATION TECHNOLOGY(CONTRACT BASIS / VISITING)**

**Qualifications:**

- A Degree in the relevant fieldOR
- Not below NVQ 6 and five (05) year experience in the relevant field

**SALARY SCALE:**

- Lecturer (Contract) Rs. 43,051p.m (Fixed)
- Demonstrator(Contract) Rs.33,100 p.m (Fixed)
- Instructor (Contract) Rs. 33,100 (Fixed)
- Visiting Lecturer Rs. 1,500 / Lecture hour &Rs. 600 / Practical hour
- Visiting Instructors Rs. 600 / Hour

**NOTE : Lecturer, Demonstrator and Instructor who will be recruited on contract basis will be paid applicable allowances in addition to the above salary and they are entitled to EPF & ETF.**

- **Specimen Application** form and **further details** are available at**www.ucj.ac.lk.**Duly filled applications forms indicating academic and professional qualifications should be sent to **"Assistant Registrar, University College of Jaffna,No 29, Brown Road, Kokuvil, Jaffna"** by Registered post on or before **11th June 2018**.
- Desired **post applied** should be indicated clearly on the top left hand corner of the envelope.
- Applicants from Higher Education Institutions, Government Departments and Government Corporations should apply through the Heads of such Institutions. Applications which do not conform to this requirement will be rejected. Such applicants are strongly advised to submit an **advance copy** to the address given above.

27.05.2018

**Assistant Registrar
University College of Jaffna**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

விநாயகராமன்

இயற்கை அனைவரையும் சமமாகவே அரவணைத்துச் செல்லும். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட குணாதிசயங்கள், சிந்திக்கும் ஆற்றல், உருவங்கள் என்று தன்னுடைய பணியை முழுமையாக நிறைவேற்ற முன்னோக்கியே நதி போன்று காலம் பிரயாணிக்கும். கடந்த காலம் என்பது நிகழ்காலத்தில் காண முடியாத ஒன்று. எதிர்காலமும் அது போன்றதே. எக்காலத்திலும் காலம் என்பது நின்றதே இல்லை. முன்னோக்கிப் பிரயாணிக்கிறது. இந்தக் காலத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பிறப்பும் தனித்தனி எல்லைகளை நிர்ணயித்துக்கொண்டு வாழ்கின்றது.

அதைத் தான் எங்களின் இயற்கை பிறப்பு எண், மாத எண், வருட எண், விதி எண் என்று எண்ணியல் அளவீடுகளில் அடையாளம் காட்டுகின்றது. அனைவருமே நாட்டை ஆண்டால் ஏனைய பணிகளை எப்படி நிறைவேற்றிக் கொள்வது? அதனால்தான் இயற்கை பிறப்பு, இறப்பு எல்லைகளுக்கு நடுவே ஒருவரது வாழ்க்கைப் பயணத்தை இயக்கிக் கொண்டிருக்கிறது. அப்படி நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கையின் அனைத்துவிதமான பலன்களையும் அனுபவித்து வெற்றிகரமாக வாழ எண்களின் அடிப்படை விதிகளை (பஞ்சபூத வசிய சக்தி) தெரிந்து கொண்டு அதற்கேற்றாற்போல் எழுத்துக்களை கையாள வேண்டி படைக்கப்பட்ட விதிமுறைகள் அடங்கிய பெட்டகமே எண்களின் இயற்கை.

வெற்றி தோல்விகளைத் தரும் சக்திகள் எண் எழுத்துக்களின் போக்கில் இயற்கையின் படைப்பில் இயல்பாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றன. நல்லவர், கெட்டவர் என்று பாராமல் வெற்றிகள் மாற்றத்துடன் காணப்படுவதன் இரகசியமும் இதுவேதான். இயற்கையின் சூட்சுமம் வெளிப்படையாக அறியப்படாத ஒன்று. படைப்பின் அனைத்து அம்சங்களையும் (வெப்பம், குளிர்ச்சி,இளமை, முதுமை) அனுபவிக்கின்றோம். ஆனால் வெளிப்படையாகக் காட்ட முடிவதில்லை. இயற்கையின மறைமுக செயற்பாடுகளை, வாழ்க்கை பற்றிய அனுபவ இரகசியம் (பஞ்சபூத செயற்பாடுகள்) அறிந்தவர்கள் எளிதாக இனங்கண்டு கொள்வார்கள். இயற்கையை அறிந்தவர்கள் அதன் கருத்துக்களோடு ஒன்றிசைபவர்கள். வெற்றியைத் தமது அனுபவமாக்கிக் கொள்கிறார்கள்.




பிரபஞ்ச வெளியில் கோள்களின் சுழற்சியானது ஒன்றுக்கொன்று ஈர்த்தும், விலக்கியும் சரியான சுற்றுப் பாதையில் சூரியனைச் சுற்றி வலம் வருகின்றன. அதைப்போலவே அதன் அலையியக்கங்களை பெற்று பிறப்பையும் இறப்பையும் அதன் இடைப்பட்ட அனுபவங்களையும் சந்திப்பவையே அனைத்துயிர்களும்! அவ்வுயிர்களின் அனுபவங்களாகிய நட்பு, விரோதம், காதல், உதவி, சீர்திருத்தம் அனைத்தும் அதன் அடிப்படையிலேயே அமையும். இதனுடைய தன்மைகளை அளக்கும் அளவீடுகளே எண்களும் எழுத்துக்களும்!

கண்கள் இரண்டு! என்றாலும் பார்வை ஒன்றுதான். செவி இரண்டு என்றாலும் கேட்பது ஒன்றுதான். இதைப்போலவே எண்ணும் எழுத்தும் இரண்டு. வெவ்வேறு அளவீடுகள் என்றாலும் இயக்கம் (கோள்களின் அலையியக்கம்) ஒன்றுதான். அதன் அடிப்படையில் தான் எழுத்துக்களும் எண் மதிப்பு நிர்ணயிக்கப்பட்டுக் கோள்களின் அலையி யக்கம் மனிதனில் ஏற்படுத்தும் நிகழ்வுகள் குறித்துக் கணக்கிட முடிகின்றது.

அனைத்து நிகழ்வுகளையும் சாதகமாக்கி வெற்றியான வாழ்க்கை வாழ அதிர்ஷ்டப் பெயரைப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஆதிக்கத்தின் கீழ் பிறந்தவர்களும் அவரவருடைய தனிப்பட்ட அதிர்ஷ்ட இரகசியங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள அதிர்ஷ்டப் பெயர், அதிர்ஷ்டக் கையெழுத்து, அதிர்ஷ்டக் குறிப்புகள் பற்றி விரிவாகப் பின்வரும் அத்தியாயங்களில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். ஒவ்வொரு ஆதிக்கத்தில் பிறந்தவர்களும் தங்களுக்குத் தேவையான அதிர்ஷ்ட குறிப்புக்களை கற்றறிந்து தெரிந்து கொண்டு வாழ்க்கையில் அதனைச் செயற்படுத்தி வெற்றி பெற வாழ்த்துகிறேன். (தொடரும்)

# 5 புதிய இராஜதந்திரிகள் நியமனம்



(கொழும்பு)

இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராஜதந்திரிகள் ஐவர் தமது நியமனக்கடிதங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வு ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

மொசாம்பிக் நாட்டின் உயர்ஸ்தானிகரும் சுவீடன், பின்லாந்து, சவுதி அரேபியா மற்றும் வெனிசுவெலா ஆகிய நாடுகளின் தூதுவர்களுமே இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களது பெயர் விபரங்கள்,

Ermindo Augusto Ferreira- மொசாம்பிக் நாட்டின் உயர்ஸ்தானிகர், Klas Molin - சுவீடன் தூதுவர், Harri Kamarainen -பின்லாந்து தூதுவர், Abdulnaser H.Al Harthi - சவுதி அரேபிய தூதுவர், Augusto Montiel - வெனிசுவெலா தூதுவர். (இ-7)

# அரச நிதி முறைகேடு பந்துல எம்.பி. வழக்கு



(கொழும்பு)

அரச நிதி முறைகேடு தொடர்பில் எதிர்வரும் தினத்தில் நீதிமன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள தயாராகவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா குறுக்கிட்டதை தொடர்ந்து நாடாளுமன்றில்அமைதியற்றநிலைமை ஏற்பட்டிருந்தது. (இ-7)

# முதலீட்டு வாய்ப்புக்களை ஊக்குவிப்பது குறித்து அமைச்சர் மலிக்குடன் சீனத் தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பது தொடர்பாக, இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஷியுவான், இலங்கையின் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அனைத்துலக வணிக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பு, அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அனைத்துலக வணிக அமைச்சின் செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு வாய்ப்புக்களை ஊக்குவிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டையில் சீனா இராணுவத்தளம் அமைக்கவுள்ளதாக வெளியாகும் தகவல்களால் சீனா எரிச்சலடைந்துள்ளது.

அத்தகைய பரப்புரைகளை முறியடிக்க இலங்கைக்கான சீனத் தூதுவர், அரச மற்றும் எதிர்க்கட்சி வரிசையிலுள்ள முக்கிய அரசியல் பிரமுகர்களை அண்மைய நாட்களாக சந்தித்துப் பேச்சு நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலில் பெரமுனவிற்கே வெற்றி

## ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் தேர்தல்கள் அனைத்திலும் வெற்றி பெறுவது உறுதியாகியுள்ளது. அதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்றுக் கொண்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியுடன் இணைந்துகொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் கடந்த புதன் கிழமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தனர்.

அச்சந்திப்பு வெற்றியளித்துள்ளதால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து எதிர்க்கட்சியாகச் செயற்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்கவுள்ளதாகவும் அதில் தற்காலிகமான நிர்வாக சபையை நியமிக்கவுள்ளதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஏனெனில் தற்போது கட்சியின் நிர்வாகத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் அதிகளவானோர் அங்கம் வகிப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

எனவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு அதிகளவானோரின் ஆதரவு இருப்பது உறுதியாகியுள்ளது. அதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகித்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குபவர்களும் நன்கு உணர்ந்துள்ளனர்.

எனவே எதிர்வரும் சகல தேர்தல்களிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றியீட்டுவது உறுதியாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூத்துக்குடியில் தமிழர்கள் படுகொலைக்கு எதிராக மட்டக்களப்பில் நேற்றுக் கண்டனப் போராட்டம்







(கொழும்பு)

தமிழ்நாடு, தூத்துக்குடியில் தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு அஞ்சலி செலுத்தியும் படுகொலை செய்தவர்களை கண்டித்தும் மட்டக்களப்பில் கண்டன போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த கண்டனப் போராட்டமும் அஞ்சலி நிகழ்வும் நேற்று நடைபெற்றது.

இதன்போது தூத்துக்குடியில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழர்களுக்கு நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தூத்துக்குடியில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் உறவுகளுக்கு நீதி வேண்டி 'ஈழத்து உறவுகளின் கண்டன போராட்டம்' என்னும் தலைப்பில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கண்டன போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள், "அழிக்காதே அழிக்காதே தமிழர்களை அழிக்காதே, இந்திய அரசே படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளுக்கு நீதிவேண்டும்" போன்ற பதாகைகளை ஏந்தி கோசங்களை எழுப்பியுள்ளனர்.

மேலும் இந்த போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் த.சுரேஸ், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், பல்வேறு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் மக்கள் கலந்து கொண்டனர். (இ-7)

## அதிகரிக்கும் கடன் சுமை

# சீனாவிடமிருந்து மேலும் கடன் பெறும் இலங்கை

(கொழும்பு)

சீன அபிவிருத்தி வங்கியிடம் இருந்து இலங்கை அரசாங்கம் ஒரு பில்லியன் டொலர் கடனைப் பெறவுள்ளதாக நிதியமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களுக்கான கொடுப்பனவுகளை கொடுத்துத் தீர்க்கவே இலங்கை அரசாங்கம் இந்தக் கடனைப் பெறவுள்ளது.

எட்டு ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் இந்தக் கடன் பெறப்படவுள்ளதாக நிதியமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்குக் கடன் வழங்க நான்கு அனைத்துலக நிதி நிறுவனங்கள் முன்வந்திருந்த நிலையில், சீன வங்கி தவிர்ந்த ஏனைய மூன்று நிறுவனங்களும் கடனை மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று நிபந்தனை விதித்தன.

இந்நிலையில் சீன அபிவிருத்தி வங்கி எட்டு ஆண்டுகள் கால அவகாசம் அளித்துள்ளதுடன் இந்தக் கடன் 5.3 வீத வட்டியுடன் மீளச் செலுத்தப்பட வேண்டும்.

இது ஒரு நல்ல வாய்ப்பு எனவும் மூன்று ஆண்டுகள் விலக்குக் காலம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் ஐந்து ஆண்டுகளில் ஆண்டுக்கு இரண்டு தடவைகள் தலா 100 மில்லியன் ரூபா வீதம் கடனை திருப்பி செலுத்த முடியும் என்று நிதியமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை அடுத்த ஆண்டில் கடுமையான கடன் நெருக்கடியைச் சந்திக்கும் என்றும் 2019 இல் 4.3 பில்லியன் ரூபாய் கடனை திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையில் இருப்பதாகவும் நிதியமைச்சர் மங்கள சமரவீர சில நாட்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பாதுகாப்பு நிலைமைகள் விவகாரம்

# சிங்கள ஊடகங்களின் செய்தி தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்புத் தொடர்பாக அரசாங்கம் கரிசனை கொண்டிருப்பதாக இரண்டு சிங்கள நாளிதழ்களில் நேற்று முன்தினம் வெளியாகிய செய்தி தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், 'தேசிய நாளிதழ்களான, தினமின மற்றும் லக்பிம ஆகியவற்றில் வெளியாகியுள்ள "சிவில் போராட்டங்களுக்கான பின்னணியை ஏற்படுத்தும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் இடமளிக்க வேண்டாம்", "நாட்டைப் பிளவுபடுத்தும் செயல்கள் தொடர்பாக பாதுகாப்புத்துறையினர் அவதானத்துடன் உள்ளனர்" என்ற தலைப்புக்களில் அமைந்த செய்திகளில் எவ்வித உண்மையும்இல்லை.

இது யாரேனும் ஒரு நபர் அல்லது அமைப்பினால் உருவாக்கப்பட்டு ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள ஒரு பொய்யான செய்தியாகும்.

இத்தகைய பொய்யான செய்தியை ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தவர் யார் என்பது பற்றி துரிதமான விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்" என்று கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயம் என்றே குறித்த செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு விடயங்கள் தொடர்பாகவும் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை என்றும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)





குடியிருப்பு பிரதேசங்களில் விடுதி அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்,முஸ்லிம் மக்கள் அமைப்பினால் நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று யாழ். கஸ்தூரியார் வீதியில் இடம்பெற்றது. (படங்கள்:-பொ.சோபிகா)

# ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை நாம் தேடிக் கொண்டிருக்கின்றோம்

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரைத் தேடிக்கொண்டிருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மல்வத்து பீடத்தின் மஹா நாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை நேற்று முன்தினம் மாலை சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அடுத்து நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை நாம் தேடிக் கொண்டிருக்கின்றோம். விரைவில் எம்மால் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளரை அறிவிப்போம். அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை நானும் தேடிக் கொண்டிருக்கின்றேன். உங்களிடமிருந்தும் இது தொடர்பான மேலதிக தகவல்களை எதிர்பார்க்கின்றேன்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு கூட்டு எதிரணியிலிருந்து போட்டியிடுவதா? அல்லது பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா? என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள கட்சித் தலைவர்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நாளை மறுதினம் 29 ஆம் திகதி கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது அர சாங்கத்திலிருந்து விலகிய 16 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் மேற்கொண்ட சந்திப்பின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் கூட்டு எதிரணிக் கட்சி உறுப்பினர்களுக்கு மகிந்த ராஜபக்ஷ தெளிவுபடுத்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்கப் வாகனம்-மோட்டார் சைக்கிள் விபத்து; இருவர் பரிதாபமாக உயிரிழப்பு



(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவின் ஊடாகச் செல்லும் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் உள்ள விசுவமடு 12 ஆம் கட்டைப் பகுதியில் மகேந்திர பிக்கப் வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேரெதிராக மோதிக் கொண்ட விபத்துச் சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு தருமபுரம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஆர். விமல குணரட்னா தெரிவித்துள்ளார்.


இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு 11.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தருமபுரம் பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் மீது புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி அதிவேகமாக பயணித்த மகேந்திர பிக்கப் வாகனம் விசுவமடு 12 ஆம் கட்டைப் பகுதியில் வைத்து மோதுண்டு விபத்துக்குள்ளானது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன்மேலும் ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு தருமபுரம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்துச் சம்பவத்தில் தருமபுரத்தைச் சேர்ந்த சந்திரகுமார் - உதயகுமார் (வயது - 28) என்ற இளைஞரும், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில் சிகிச்சை பலனின்றி தருமபுரத்தைச் சேர்ந்த முருகையா -சஞ்சீவன் (வயது -28) என்ற இளைஞருமே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்கள்.

இதேவேளை, விபத்தினை ஏற்படுத்திய பிக்கப் வாகனம் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்ற நிலையில் நேற்று சனிக் கிழமை அதிகாலை நேரத்தில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பிக்கப் வாகனத்துடன் சாரதி உட்பட 04 பேர் சரணடைந்துள்ளதாகவும் இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தருமபுரம் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஆர்.விமல குணரட்னா தெரிவித்துள்ளார். (2-15)

# உயிலங்குளம் அணைக்கட்டில் வெடிப்பு வீதி தாழிறங்கி போக்குவரத்துக்குத்தடை



(மல்லாவி)

துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட உயிலங்குளம் அணைக்கட்டு ஊடாக தென்னியன்குளம், கோட்டை கட்டிய குளம், அம்பலபெருமாள் குளம், அமைதிபுரம் ஆகிய கிராமங்களுக்கும் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்கும் நடைபெற்று வந்த வாகனப் போக்குவரத்து உயிலங்குளத்தின் அணைக்கட்டில் வெடிப்பு ஏற்பட்டு தாழிறங்கியுள்ளதால் வாகனப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளதாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட உயிலங்குளத்தின் அணைக்கட்டுப் பகுதியில் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் அணைக்கட்டு ஊடாக வாகனங்கள் பயணிப்பது நேற்று சனிக்கிழமை முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த அணைக்கட்டு ஊடாக தென்னியன் குளம், கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களுக்கும் மற்றும் கிளிநொச்சி அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம் போன்ற இடங்களுக்குப் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஆட்டோக்கள் தவிர்ந்த மற்றைய அனைத்து இலகு ரக வாகனங்கள், கனரக வாகனங்கள் ஆகியவற்றை பயணிக்க வேண்டாம் எனவும் இதற்குப் பதிலாக மாற்றுப் பாதையில் பயணத்தை தொடருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுப் பாதையாக தேறாங்கண்டல் ஊடாக ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி சென்று பின்னர் அங்கிருந்து கோட்டை கட்டிய குளம் செல்லும் வீதி ஊடாகப் பயணத்தை தொடர முடியும். அல்லது மல்லாவி, மாங்குளம் ஊடாக ஏ-9 வீதியில் உள்ள திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயம் அருகே செல்லும் வீதி ஊடாகவோ பயணத்தை தொடர முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இடவசதி, கட்டட வசதி பற்றாக்குறை

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பல்வேறு சிகிச்சைப்பிரிவுகள் போதிய இடவசதிகள் இன்றியும் கட்டட வசதிகள் இன்றியும் இயங்கி வருவதனால் நோயாளர்களுக்கான சிகிச்சைகளை வழங்குவதில் வைத்தியசாலை நிர்வாகமும் சிகிச்சைபெறச்செல்லும் நோயாளர்களும் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அதாவது, வெளிநோயாளர் பிரிவுக்கான போதிய இடவசதி, மாதாந்த கிளினிக், நோயாளர்களுக்கான சிகிச்சை வழங்குவதற்கான இட வசதி என்பன பற்றாக்குறையாகவே காணப்படுகின்றன.

இதைவிட, என்புமுறிவு, சிகிச்சைப்பிரிவு, ஆய்வுகூடம், பதிவாளர் அலுவலகம், பொலிஸ் பிரிவு, களஞ்சிய வசதி என்பன இல்லாத நிலை காணப்படுவதுடன், உளநல சிகிச்சைப் பிரிவிற்கான உள்நோயாளர் விடுதிகளும் மற்றும் ஏனைய விடுதிகளும் போதிய இட வசதிகள் இன்றி காணப்படுகின்றன.

இதனைவிட, கண் நோயாளர்களுக்கான உள்நோயாளர் விடுதி, ஆய்வுகூடம், விபத்துப்பிரிவு என்பனவும் தேவையாகவுள் ளன.

இவ்வாறு பல்வேறு தேவைப்பாடுகள் கொண்ட இவ் வைத்தியசாலையில் நிலவுகின்ற பௌதீக வள நெருக்கடிகளால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்ளும் அதேநேரம் இந்த மக்களுக்கான சேவைகளை வழங்குகின்ற வைத்தியசாலை நிர்வாகம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு மன்னாரில் முன்னெடுக்கப்பட்டது

(மன்னார்)

நாட்டில் தற்கொலையை தடுக்கும் நோக்கில் கரையோர பகுதிகளூடாக "சுழுத்தான" தொண்டு நிறுவனம் சுதந்திரத்திற்கான பாதை அடிச்சுவடு எனும் தொனிப் பொருளில் 73 நாட்கள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் மன்னார் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அத்துடன், மன்னார் நகருக்கு வருகை தந்துள்ள இவர்கள் தற்கொலை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மன்னார் நகரத்தில் அமைந்துள்ள குடும்ப புனர்வாழ்வு நிலையத்தில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றுள்ளதுடன், மாவட்டத்தில் உளவியல் ரீதியான சேவைகளை மேற்கொண்டு வரும் பிரதிநிதிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பயிற்சியில் மன்னார் மாவட்டத்தில் உளவியல் ரீதியாக கடமையாற்றும் பல்வேறு தொண்டர்கள் கலந்து கொண்டிருந்தனர். (2)

# எந்தவிதமான பதிலையும் தீர்வையும் அரசு வழங்காது காலத்தை இழுத்தடிக்கின்றது



(கண்டாவளை)

கிளிநொச்சியில் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் எதுவித தீர்வுகளுமின்றி தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர.

காணாமல் ஆக்கப்படடவர்களின் உறவினர்களால் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் இரவு-பகலாக இந்தக் கொட்டகைகளில் தங்கி வருகின்ற நிலையில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தும் வருகின்றனர்.

அத்துடன் பலர் நோய் வாய்ப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றனர்.

அதாவது, தற்போது பெய்து வரும் மழை, மற்றும் வெயில், நுளம்புகளின தொல்லை, கால்நடைகளின் தொல்லை என்பவற்றால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தமது போராட்டத்திற்கு எதுவித பதிலையும் வழங்காது, தீர்வுகளையும் வழங்காது காலத்தை இழுத்தடித்து வருவதனால் தாங்கள் கஷ்டங்களை எதிர்கொள்வதாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (2-35)

# கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக 41 சிறிய குளங்கள் புனரமைக்கப்படவில்லை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள 41 சிறிய குளங்களைப் புனரமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மன்னார் மாவட்டத்தின் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் அடங்குகின்ற 41 வரையான சிறிய குளங்கள் இதுவரை புனரமைக்கப் படாது காணப்படுகின்றன.

இவ்வாறு குளங்கள் புனரமைக்கப்படாமை மற்றும் அதன் கீழுள்ள பெருமளவான பயிர்ச்செய்கை நிலங்கள் துப்புரவு செய்து பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாமல் காணப்படுகின்றது.

இதனால் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட பல குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளன.

எனவே புனரமைக்கப்படாது இருக்கின்ற குளங்களைப் புனரமைத்து அதற்குட்பட்ட பயிர்ச்செய்கை நிலங்களையும் துப்புரவு செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக இந்தப்பிரதேசத்தில் காணப்படுகின்ற கட்டுக்கரைக்குளத்தின் கீழுள்ள 161 வரையான குளங்களின் 41 சிறிய குளங்கள் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாது காணப்படுகின்றன.

மீள்குடியேற்றத்தின் பின்னர் இந்தக் குளங்களைப் புனரமைத்துத்தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகளால் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டன.

ஆனால், இன்று வரைக்கும் இதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை என பிரதேச விவசாய அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிவாங்குதல் என்பது அற்பர்களால் உண்டாகும் அற்ப ஆனந்தம் காணும் செயலேயாகும்.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வங்கி நிர்வாகங்கள் சமூகப் பொறுப்புடன் நடக்க வேண்டும்

கிளிநொச்சியில் உள்ள வங்கிக் கிளையொன்றில் நினைவேந்தலை செய்த வங்கி உத்தியோகத்தர்கள் இருவர் தலைமை அலுவலகத்தால் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தி தமிழ் மக்கள் மத்தியில் மிகப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மே-18, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது யுத்தத்தில் உயிரிழந்த தமிழ் மக்களை நினைவுகூருகின்ற நாள்.

இந்த நாட்டில் நடந்த மிகக் கொடூரமான யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

தமிழ் இனத்தை அழிப்பது போல இந்தக் கொடூரச் செயல் நடந்தேறியது. இதுபற்றி தென்பகுதிச் சிங்கள மக்கள் அறியாமல் இருந்திருக்க முடியாது.

எனினும் தாம் செய்த நிட்டூரத்தை மறைப்பதற்காகவும் போர்க்குற்றச் செயல்களில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் பேரினவாதிகள் வன்னி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் என்றும்,

மே 18 நினைவேந்தல் விடுதலைப் புலிகளின் தலைவரை நினைவுகூருகின்ற நாள் எனவும் கபடத்தனமாக பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

மே 18 அன்று முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி; உயிரிழந்த தங்கள் உறவுகளுக்காக கண்ணீர் விட்டு அழுது புலம்புகின்ற நிகழ்வுகள் ஊடகங்களில் வெளிவந்திருக்கின்றபோது,

இந்த நாட்டின் ஒரு முக்கியமான வங்கி நிர்வாகம் அதனை அறியாமல் இருந்திருக்க நியாயமில்லை.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இரண்டு நிமிடமேனும் அனுஷ்டியுங்கள் என வடக்கு மாகாண முதலமைச்சர் அவர்கள் பொதுவான வேண்டுகோளை விடுத்திருந்தார்.

இதன் அடிப்படையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி வட மாகாணத்திலுள்ள பெரும்பாலான நிறுவனங்கள், பொது அமைப்புக்களில் இடம் பெற்றன.

உண்மையில் மே 18இல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக விடுமுறை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

அதனைச் செய்வதற்கான அதிகாரம் இல்லை எனும்போது, பூரண ஹர்த்தால் அறிவிப்பு மூலமாக அனைத்து நிறுவனங்களும் பூட்டப்பட, மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் பணி முடக்கம் ஏற்படாமல் நினைவேந்தலைச் செய்வது எனத் தீர்மானித்ததற்கமைய வங்கிப் பணியாளர்கள் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இஃது தவறு என்று வங்கி நிர்வாகம் கருதியிருந்தால் அது மிகப்பெரும் அநீதி.

ஏனெனில் கொடிய யுத்தத்தில் இறந்தவர்கள் வங்கி உத்தியோகத்தர்களின் உறவுகளாக இருக்கலாம். ஏன் குறித்த வங்கியின் வாடிக்கையாளர்களாகக் கூட இருக்கலாம்.

இந்நிலையில் போரில் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களை நினைவுகூருங்கள் என்று பெருந்தன்மையோடு வங்கி நிர்வாகங்கள் அறிவித்திருக்க வேண்டும்.

அதைவிடுத்து வடக்குத் தமிழர்களின் பணத்தை எடுப்பதுதான் எங்கள் வேலை; நினைவேந்தல் அல்ல என்றால் வங்கிகள் தங்கள் சமூகப் பொறுப்பை இழந்து போகின்றன என்றே பொருள் கொள்ள வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் பணி இடைநிறுத்தத்தை உடனடியாக இரத்துச் செய்வதுதான் முதல் வேலை. இதனை வங்கி நிர்வாகம் செய்யும் என நம்பலாம்.

## ஹெரோயின் விற்பனை செய்த இளைஞர்கள் ஐந்து பேர் கைது

அவிசாவளை - கிதுல்கல பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஹெரோயின் விற்பனை செய்த இளைஞர்கள் 5 பேரை பொலிஸ் அதிரடி படையினர் கைது செய்துள்ளனர்.

இதன்போது, அவர்களிடம் இருந்து 1580 மில்லிகிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் 23 தொடக்கம் 28 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## வவுனியா ஓமந்தையில் முதிரைக் குற்றிகள் மீட்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா ஓமந்தையில் நேற்று மாலை 7.30 மணியளவில் கன்டர் ரக வாகனத்தில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட முதிரைக்குற்றிகளை ஓமந்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஓமந்தையிலிருந்து ஏ9 வீதியூடாக சட்டவிரோதமான முறையில் முதிரைக் குற்றிகளை கன்டர் ரக வாகனத்தில் கொண்டு சென்ற சமயத்தில் குறித்த வாகனத்தினை ஓமந்தையில் கடமையில் நின்ற போக்குவரத்து பொலிஸார் மறித்துள்ளனர்.

இதன்போது குறித்த கன்டர் ரக வாகனம் நிற்காமல் சென்றுள்ளது. வாகனத்தினை பொலிஸார் பின்தொடர்ந்த சமயத்தில் வாகனம் புதியவேலர் சின்னங்குளம் வீதிக்கு திரும்பி அதிவேகமாக சென்றுள்ளது.

இதன்போது கன்டர் ரக வாகனத்திலிருந்து 7 முதிரைக்குற்றிகள் வீதியில் வீழ்ந்துள்ளது.

இதன் காரணமாக குறித்த வாகனத்தினை பின்தொடர முடியவில்லையென ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியில் வீழ்ந்த முதிரைக்குற்றிகளை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் குறித்த வாகனத்தின் இலக்கத்தினை வைத்து வாகனத்தின் உரிமையாளரை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-281)

## வவுனியா இலுப்பைக்குளத்தில் இ.போ.ச பேருந்து விபத்து

வவுனியா செட்டிக்குளம் இலுப்பைக்குளம் பகுதியில் நேற்றுக் காலை இ.போ.ச பேருந்து வீதியினை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. எனினும் பேருந்தில் பயணித்த எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

செட்டிக்குளத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து வீதியின் சீரற்ற பாதை காரணமாக வீதியினை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இதன்போது பேருந்தில் பயணம் மேற்கொண்டிருந்த பயணிகளுக்கு எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை.

இவ் வீதியின் சீரற்ற தன்மையே இவ் விபத்திற்கு காரணமாகும். தினசரி அதிகளவான மக்கள் இவ் வீதியூடாகவே வவு னியா நகரத்திற்கு சென்று வருகின்றனர். மீண்டுமொரு விபத்து ஏற்படாமல் இருப்பதற்கு முன் வீதியினை செப்பனிட்டு தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ம-281)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**அகங்காரத்தை அழிக்கும் வழிகள் என்ன?**

அகங்காரம் இல்லாமல் போகும் போது ஒருவன் நான் எனது என்பதெல்லாம் மாயை அனைத்தும் இறைவனுடையதுதான் என்பதை உணர்ந்து கொள்வான். இந்தப் பிரபஞ்சத்தில் எனக்குக் கிடைத்துள்ளதெல்லாம் இறைவன் கொடுத்த தானமாகும். நான் இந்தப் பூமிக்கு வரும்போது இவற்றையெல்லாம் கொண்டு வந்தேனா? அல்லது செல்லும் போது கொண்டு போகப் போகிறேனா? இல்லை.

ஒரு கட்டத்தில் இந்த உடல் சிதைந்து புழுக்களுக்கு இரையாகப் போவதுதான். இந்த உடலினால் துக்கத்தைத் தவிர வேறு எதைத் தர முடியும். இந்த உடல் மீது அசை வைத்து தீய செயல்களைச் செய்து பாவியாவது எதற்காக? இது போன்ற சிந்தனைகள் நமது அகங்காரத்தை விட்டொழிக்கச் செய்யும். இந்த உலகத்தில் எனக்கு எதுவுமில்லை என்ற தெளிவு ஏற்படும். பிறகு நமது அகங்காரம் மறைந்திருக்க என்ன இருக்கிறது. (தொடரும்)

## நாட்டின் ஜனாதிபதியாக கோத்தபாய இரண்டு முறை பதவி வகிப்பார்

### ஜோதிடர் விஜயமுனி ஆருடம்

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எதிர்காலத்தில் இரண்டு முறை நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிப்பார் என ஜோதிடர் விஜித ரோஹன விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த தேர்தலின் பின்னர் நாட்டின் பிரதமராக பதவி வகிப்பார் எனவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு ராஜயோகம் இருந்த போதிலும் அது அந்தளவுக்கு பலமாக காணப்படவில்லை.

சஜித் பிரேமதாச ஜனாதிபதியாக பதவிக்கு வர வாய்ப்புள்ளது, ஆனால், கோத்தபாய ராஜபக்ஷ இரண்டு முறை ஜனாதிபதியாக பதவி வகித்த பின்னரே சஜித் பிரேமதாச ஜனாதிபதியாக பதவிக்கு வர முடியும் எனவும் ஜோதிடர் விஜித ரோஹன விஜயமுனி சொய்சா குறிப்பிட்டுள்ளார். (ம)

## சிறுமியை கத்தியால் குத்திவிட்டு தற்கொலை செய்த சிறிய தந்தை

அக்கரைப்பற்று - பட்டியடிப்பிட்டி பகுதியில் சிறுமியொருவரை அவரின் சிறிய தந்தை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

14 வயதான சிறுமி ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் கழுத்தில் கத்தியால் குத்திய சிறிய தந்தை, பின்னர் தன்னைத் தானே எரியூட்டிக் கொண்டுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிறுமியின் சிறிய தந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் சிறுமியை பாலியல் ரீதியில் துன்புறுத்தியமையே இந்த சம்பவத்தின் பின்னணி என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம)

## வவுனியா ஓமந்தைப் பகுதியில் ரயிலுடன் மோதி டிப்பர் விபத்து

(குருமன்காடு)

வவுனியா ஓமந்தையில் நேற்று மாலை 6.10 மணியளவில் ரயிலுடன் மோதி டிப்பர் வாகனம் விபத்துக்குள்ளானது.

ஓமந்தை அரசமுறிப்பு பகுதியில் மண் மற்றும் கல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் ரயில்வே தண்டவாளத்தில் புதையுண்டது.

இதன்போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த புகையிரதம் குறித்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் புகையிரதம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த ஓமந்தை போக்குவரத்து பொலிஸார் துரிதமாக செயற்பட்டு டிப்பர் வாகனத்தினை அவ்விடத்திலிருந்து அகற்றினார்கள்.

இவ் விபத்துச்சம்பவம் காரணமாக சுமார் 30 நிமிடங்களின் பின்னரே புகையிரதம் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்தது. (ம-250,281)

## தோணி கவிழ்ந்ததில் இளைஞன் பலி

### நண்பனின் மரண வீட்டுக்கு சென்றபோது விபரீதம்

மட்டக்களப்பு - சந்திவெளி ஆற்றில் நேற்று முன்தினம் இரவு தோணி கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி இளைஞனொருவர் உயிரிழந்துள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

திகிலிவட்டை கிராமத்தில் நண்பரின் மரண வீட்டுக்கு செல்வதற்காக தனது இரு நண்பர்கள் சகிதம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் தோணியில் சந்திவெளி ஆற்றினை கடக்க முற்பட்டவேளை தோணி கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன் ஏனைய இருவரும் உயிர் தப்பியுள்ளனர்.

உயிரிழந்தவர் சந்திவெளி பிள்ளையார் கோவில் வீதியைச் சேர்ந்த 21 வயதான யோகராசா ரரிஷன் என அவரது பெற்றோர் அடையாளம் காட்டியுள்ளனர்.

கடந்த சில தினங்களாக பெய்துவரும் அடை மழை காரணமாக ஆற்றில் நீர் மட்டம் அதிகரித்துள்ளதுடன் ஆற்றுவாழை கரையொதுங்கி காணப்படுகிறது.

குறித்த இளைஞன் ஆற்றுவாழைக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில தட்டுவன் கோட்டையிலும் வவுனியா பிரதேசத்தில் குடாகச்சகொடிய, மகாமயிலங்குளம், துட்டுவாகை, குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்விக்கு நானே பொறுப்பாளி ஒப்புக் கொண்ட தினேஸ் கார்த்திக்



கொல்கத்தாவில் நடைபெற்ற இறுதிப்போட்டிக்கான இரண்டாவது தகுதிச்சுற்றில், ஹைதராபாத் அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வீழ்த்தி, இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

இந்நிலையில் இறுதிப்போட்டிக்கான தகுதிச்சுற்றில்தோல்வி அடைந்தது குறித்து கொல்கத்தா அணியின்தலைவர்தினேஷ் கார்த்திக் கூறியதாவது, இந்த தோல்வி மிகவும் கவலையளிக்கிறது. ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

நாங்கள் தொடர் முழுவதும் சிறப்பாகவே விளையாடினோம். இந்தப் போட்டியில் தோற்றது சிறப்பானதாக இல்லை. சேஸிங்கை தொடங்கும்போது, போட்டி எங்கள் பக்கமே இருந்தது.

ஆனால், சில மோசமான ஷாட்களும் ஒரு ஓட்டம் அவுட்டும்எங்களிடம்இருந்து போட்டியை மாற்றிவிட்டது. நான், நிதிஷ் ராபின் உத்தப்பா ஆகியோர்நன்றாக ஆடி ஆட்டத்தை முடித்திருக்க வேண்டும்.

ஆனால் எனது தவறின் மூலம் வெற்றியை நோக்கிச் செல்ல முடிய வில்லைஎன்று கூறியுள்ளார். (க)

# ஸ்டோக் வீசிய பந்தில் கை உடைந்தது அஸாமிற்கு



இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் பென் ஸ்டோக்ஸ்வீசிய பந்தில் படுகாயமடைந்த பாகிஸ்தான்வீரர்பாபர்அஸாமின்கையில் எலும்புமுறிவு ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இவ்விரு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி லண்டனில்கடந்த 24ஆம்திகதி தொடங்கியது.

முதல் இன்னிங்சில் ஆடிய இங்கிலாந்து 184 ஓட்டங்களுக்கு ஆல்-அவுட் ஆனது. பின்னர் ஆடிய பாகிஸ்தான் அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 350 ஓட்டங்கள் எடுத்துள்ளது. பாகிஸ்தான் அணி துடுப்பாட்டம் செய்து கொண்டிருந்தபோது, இங்கிலாந்து அணியின் ஆல்ரவுண்டர் பென் ஸ்டோக்ஸ் வீசிய ஓவரை, பாபர் அஸாம் எதிர்கொண்டார். அப்போது, ஸ்டோக்ஸ் வீசிய பந்து பாபர் அஸாமின் முழங்கையில் பலமாக தாக்கியது. இதனால்அவரது கை வீங்கியதால்அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. எனினும் அவரால்கையை கீழே போட முடியவில்லை என்பதால் உடனடியாக அவர் மைதானத்தில் இருந்து வெளியேறினார்.

அவருக்கு ஸ்கான் செய்து பார்த்த போது, முழங்கையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது. எனவே, அவர் நான்கு முதல் ஆறு வாரகாலம் வரை ஓய்வு எடுக்க வேண்டும் என வைத்தியர்கள்தெரிவித்தனர் இதனைத் தொடர்ந்து, இங்கிலாந்து கிரிக்கெட் தொடரில் இருந்து விலகிய அவர், நாடு திரும்ப உள்ளார். அவருக்கு பதிலாக வேறு வீரர்அணியில்இடம்பெறுவார்என தெரிகிறது.

# யங்கம்பன்ஸ் உதைபந்தாட்டத்தொடர் குறிஞ்சிக்குமரனை வென்றது திக்கம் இளைஞர்



கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடை பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடந்த ஆட்டமொன்றில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் அணி மோதியது. பிரகலாதனின் சிறப்பாட்டத்தால் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவானது. போட்டியின் ஆட்டநாயகனாக திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் வெற்றிக்கு வழிவகுத்த பிரகலாதன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# தூய ஒளி வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டி முடிவுகள்

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 32 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் தூயஒளி வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் 4:2 என்ற கோல்கணக்கில் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. நடைபெற்ற மற்றுமோர் போட்டியில் மற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க-106)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது
076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு
அனுப்பிவையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# குண்டுவெடிப்பில் பலியானவர்களுக்கு எனது விருதை அர்ப்பணிக்கின்றேன்

## உருகிய ரஷித்



கொல்கத்தாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ள ஐதராத்பாத் அணியின் வீரர் ரஷித் கான் ஆட்டநாயகன் விருதை,குண்டுவெடிப்பில் பலியானவர்களுக்கு அர்ப்பணித்துள்ளார்.

ஐ.பி.எல் திருவிழாவின் 11ஆவது சீசன் நிறைவுப் பகுதியை எட்டியுள்ளது. முதல் தகுதிச்சுற்றில் சென்னை சூப்பர் கிங்ஸ் இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இதில் தோல்வியடைந்த ஐதராபாத்தும், வெளியேற்றுதல் சுற்றில் வெற்றி கண்ட கொல்கத்தாவும் மோதின.

இப்போட்டியில், ஐதராத்பாத் அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியடைந்தது, சிறப்பாக விளையாடிய ரஷித் கானுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

இதன்பின்னர் பேசிய ரஷித் கான்(ஆப்கானிஸ்தான்), இந்த போட்டியில் சிறப்பாக விளையாடியது மகிழ்ச்சி.

பந்துவீச்சு, பேட்டிங், பீல்டிங் என அனைத்திலும் என முழுத் திறமையுடன் விளையாடினேன், இதற்காக நான் பயிற்சிகளும் மேற்கொண்டேன்.

இந்த விருதை எனது நாட்டில் என் சொந்த ஊரில் கிரிக்கெட் மைதானத்தில் நடந்த குண்டுவெடிப்பில் பலியானவர்களுக்கு அர்ப்பணிக்க விரும்புகிறேன் என தெரிவித்துள்ளார். (க)



பாராளுமன்ற உறுப்பினர் சிவஞ்ஞானம் சிறீதரனின் 2017ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் புலோப்பளை கிழக்கு சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கழகத்தின் வேண்டுகோளை ஏற்று குறித்த விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது இங்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன், உறுப்பினர்களான வீரவாகுதேவர்.கோகுல் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் [illegible] உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டைதீவு காணி...

சுவீகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான பெயர் பட்டியல்களும் கிராம சேவகர் அலுவலகத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தமது காணிகளை கடற்படையானது சுவீகரிக்க தாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என அப் பகுதி மக்கள் உறுதியாக தெரிவித்துள்ளனர். அத்துடன் தமது சம்மதம் இன்றி தமது காணிக்குள் கடற்படை நுழையுமாயின் தமது உயிரை கொடுத்தேனும் தமது மண்ணை மீட்போம் எனவும் அம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள் ஆகியோருடன் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடவுள்ளார். (ம)

## இலங்கை அரசாங்கம்...

யுடன் கைகோர்த்து பயணிப்பதற்கு அமெரிக்கா விரும்புகின்றது என தெரிவித்தார்.

இலங்கையின் நல்லிணக்க முயற்சிக்கு இலங்கையே தலைமை தாங்கவேண்டும், காயங்களை ஆற்றக்கூடிய பிரகாசமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கக்கூடிய நல்லிணக்க முயற்சியை இலங்கையே முன்னெடுக்க வேண்டும்.

இலங்கை வெற்றியடையவேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம், இலங்கையுடனான எங்கள் உறவுகள் விஸ்தரிக்கப்படுவதற்காக பெருமளவு முதலிட்டுள்ளோம்.

இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கின்றது. அதேவேளை இன்னமும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் உள்ளன.

இலங்கை யுத்தத்திற்கு பிந்திய காலத்திற்குள் நுழையும் இந்த தருணத்தில் ஜனநாயகத்தை பலப்படுத்தும் இந்த வேளையில் வாக்குறுதி அளிக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்றும் பொறுப்பு இலங்கையுடையது.

2016ஆம் ஆண்டு சுதந்திரக்கொண்டாட்டங்களை பார்வையிடுவதற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்த சிலரில் நானும் ஒருவன்.

தேசிய கீதம் சிங்களத்தில் இசைக்கப்பட்ட வேளை வளர்ந்தவர்கள் கூட கண்ணீர் விடுவதை மாத்திரம் நான் பார்க்கவில்லை, ஐம்பது வருடத்திற்கு பின்னர் அரச நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவதை பார்த்து கண்ணீர் சிந்தப்படுவதையும் நான் பார்த்திருக்கின்றேன்.

இதுவே நல்லிணக்கத்தின் பலம், மிக மோசமான துயரம் மற்றும் மனவேதனைளிற்கு பின்னர் காயங்கள் ஆற்றப்படுவதன் பலம் இது என தெரிவித்தார். (ம)

## சுயாட்சி கோரும் உரிமை...

தமிழ் மக்கள் பேரவையின் விசேட கூட்டம் நேற்று யாழ் நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பேரவை தனது பணிகளை விரிவடையச் செய்ய வேண்டிய காலம் தற்போது கனிந்துள்ளது. இவ்வாறான விரிவுபடுத்தலுக்கு எமக்கு உறுதுணையாக இருக்கப் போவது எமது இளைஞர் யுவதிகளே! இன்று வடகிழக்கு மாகாணங்களில் வலுப்படுத்த வேண்டிய ஒரு சமூக அலகாக வலம் வருவது இளைஞர் யுவதிகளே!

"வலுப்படுத்த வேண்டிய" என்று கூறும் போது உடல் ரீதியாக என்பது அர்த்தமில்லை. ஆத்மீக ரீதியாக கொள்கை ரீதியாக, அவர்கள் வலுப்பெற வேண்டிய ஒரு கால கட்டம் ஜனித்துள்ளது.

இன்றைய இளைஞர் குழாம் பல விதங்களில் முன்னைய காலத்தில் வாழ்ந்த எம்மவர்களில் இருந்து வித்தியாசமானவர்கள். நாம் வயதுக்கும் முதுமைக்கும் மதிப்புக்கொடுத்தோம். இன்று அப்படியில்லை. இன்றைய பிள்ளைகள் உலக விடயங்கள் பலதையும் பத்துப் பதினைந்து வயதுக்கு முன்னரே அறிந்து கொள்கின்றார்கள்.

உலக ஞானம் அவர்களுக்கு நிரம்பவும் உண்டு. கைபேசிகள், கணனிகள், தொலைக்காட்சிகள் போன்றவை சதா அவ்வாறான ஞானத்தைக் கொடுத்துக்கொண்டே உள்ளன. அதே போல் சுயநலமும் அவர்களுக்கு அதிகம். உலக ஞானத்தில் திளைத்தவர்கள் பொதுவாகவே சுயநலமிகளாக இருப்பார்கள் என்பது ஞானிகளின் கருத்து.

தமிழ் மக்கள் பேரவை யாவரையும் உள்ளடக்கிய ஒரு மக்கள் இயக்கம். எமது தமிழ் மக்களை அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் வழி நடத்துவது எமது கடமையாகும். இதுவரை காலமும் எமது அரசியல் கொள்கைகளை முன் வைத்து கூட்டங்கள் வைத்து மக்களுக்கு அரசியல் அறிவைப் புகட்டி வந்துள்ளோம். தொடர்ந்தும் அதனைச் செய்யவே இருக்கின்றோம். ஆனால் எமது காலத்தின் பின்னர் எமது அரசியல் சமூக அமைப்புக்களைக் கொண்டு நடத்தப் போவது இளைஞர் யுவதிகளே. திடீர் என்று தலைமைத்துவம் அவர்கள் வசம் செல்வதிலும் பார்க்க இப்பொழுதிருந்தே அவர்கள் தமது காரியங்களை, கடப்பாடுகளை, கடமைகளை உணர்ந்து நடக்கத் தொடங்கினால் அது நன்மை தரும் என்று நம்புகின்றோம்.

இதன் காரணத்தினால்தான் தமிழ் மக்கள் பேரவை இளைஞர் மகாநாடு ஒன்றினை நடத்த வேண்டும் என்று முடிவெடுத்தது. இவ்வாறான மகாநாடுகளில் நாங்கள் சில விடயங்களை வலியுறுத்த உள்ளோம். அரசியல் ரீதியாக நாங்கள் அவர்களுக்கு சில அடிப்படை விடயங்களை எடுத்துக் கூற வேண்டியுள்ளது. சமூக ரீதியாகவும் சில விடயங்களை அவர்களுக்கு வலியுறுத்த விரும்புகின்றோம்.

முதலில் அரசியலை எடுத்துக் கொள்வோம். எமக்கென சில உரித்துக்கள் உண்டென்று சர்வதேசச் சட்ட நூல்கள் கூறுகின்றன. இந்த நாட்டின் ஆதிக் குடியினரின் வழிவந்தவர்கள் என்பதால் தமிழர்களாகிய எமக்கு நாம் வாழும் இடங்களில் சுயாட்சி கோர சட்டப்படி உரித்து இருக்கின்றது. மேலும் எமக்கு எம்முடைய கலை, மொழி, கலாசாரம் போன்றவற்றை சுதந்திரமாகப் பாவித்து பாதுகாத்து வர உரித்துண்டு. நாம் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் நிலம் மேல் எமக்கு உரித்துண்டு. நிலங்களின் வளங்களை எடுத்துப் பாவிக்க உரித்துண்டு. நாம் இந்நாட்டின் மூத்த குடிகள் என்ற முறையில் எமக்கு சில உரிமைகள் உரித்துக்கள் உண்டு என்பதை இதுகாறும் மறந்துவிட்டோம். பாரம்பரிய மூத்த குடிகள் பற்றிய உரித்துக்களை உள்ளடக்கியுள்ள ஐக்கிய நாடுகள் விளம்பல் ஆவணத்தில் அவை இடம் பெற்றுள்ளன. 46 ஷரத்துக்களைக் கொண்ட அதில் பல உரித்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பரிசீலனை செய்தல் நன்மை பயக்கும்.

இன்று எம்மிடையே ஒரு வித பலவீனம் உருவாகியுள்ளது. இது இளைஞர் யுவதிகளிடமும் காணப்படுகின்றது. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதும் நாம் தோற்றுவிட்டோம் என்ற ஒரு மனோ நிலை எங்கள் மனதில் குடிகொள்ளத் தொடங்கியுள்ளது. எமது எதிர்பார்ப்புக்களை நடைமுறைப்படுத்த இனி யார் வரப் போகின்றார் என்ற ஒரு நம்பிக்கை அற்ற நிலை எட்டிப் பார்க்கத் தொடங்கியுள்ளது. இதனை மாற்றி எம் இளைஞர் யுவதிகள் மனதில் வலுவேற்றுவது எமது பொறுப்பு.

உலக அதி கூடிய எடைக்குரிய குத்துச் சண்டை வெற்றி வீரனாக ஒரு காலத்தில் வலம் வந்த மொகமட் அலி குத்துச் சண்டை அரங்கினுள் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்திருக்கின்றீர்களோ எனக்குத் தெரியாது. வலைத்தளங்களில் இப்போதும் பார்க்கலாம். அரங்கினுள் நடனமாடுவது போல் அங்கும் இங்குமாக வலம் வருவார். அவர் தன்முகத்துக்கு எதிரியின் எந்த ஒரு குத்தும் படாமல் பார்த்துக் கொள்வார். எதிரியின் குத்துக்கள் பலமாக இருந்தால் தன் கைகளுக்குள் எதிரியின் தலையைப் பிடித்து தொடர்ந்து அவர் குத்த முடியாமல் ஆக்கிவிடுவார். மத்தியஸ்தர் அப்போது இருவரையும் பிரித்து விடுவார். இவ்வாறே நடனமாடி சுற்றுக்களை ஒவ்வொன்றாக முடித்துக் கொண்டு எதிரியைப் பலம் இழக்கச் செய்வார். அதாவது பலம் கொண்ட மட்டில் எதிரி குத்த எத்தனித்து எத்தனித்து அவை வீண்போகவே தனது பலத்தை மெல்ல மெல்ல அவர் இழக்கத் தொடங்கிவிடுவார். முகமட் அலி நடனமாடிக் கொண்டு அவரிடம் இருந்து தப்பிப் போய் கொண்டிருப்பார். திடீரென்று ஒரு சுற்றில் அலியின் குத்துக்கள் எதிரியின் மீது சரமாரியாகப் பொழிய அவர் சுருண்டு நிலத்தில் விழுந்து விடுவார். அலி வெற்றிவாகை சூடுவார்.

இதனை எதற்காக இங்கு கூறினேன் என்று நினைப்பீர்கள். காரணம் இருக்கின்றது. எமக்கு உரித்துக்களைத் தரமறுக்கும் சிங்கள அரசியல் தலைமைத்துவம் தற்போது வலுக்குறைந்து வருகின்றது. அரசியல் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், கடன் சுமைகள், சர்வதேசத்தில் கடுமையான சாடல்களுக்கு உள்ளாகி வருவது இவ்வாறான பல இடர்களைச் சந்தித்து வருகின்றது சிங்களத் தலைமைத்துவம். சர்வதேசத்திற்குக் கொடுத்த வாக்குறுதிகளை இயற்றாமல் இருந்து மேலும் மேலும் தவணை கேட்பது அரசாங்கத்தின்மேல் உலக நாடுகளுக்கு இருக்கும் மதிப்பைக் குறைத்துக் கொண்டு வருகின்றது. இந்த நேரத்தில் நாங்கள் மொகமட் அலியிடம் இருந்து பாடம் படித்துக் கொள்ள வேண்டும்.

அதாவது இத்தருணத்தில்த்தான் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு எமக்கு நேர்ந்த, நேர்ந்து கொண்டிருக்கும் இடர்களைப் பற்றி எல்லாம் உலகறியச் செய்ய வேண்டும். சுயாட்சியை வழங்க அவர்களே முன்வர வேண்டும். ஒரு கட்டத்தில் தமது தேவையின் நிமித்தம் எமக்குரிய சுயாட்சி உரிமையை அவர்கள் கையளிக்கும் சந்தர்ப்பம் ஏற்படும் என்பதில் நாங்கள் திடமான நம்பிக்கை வைக்க வேண்டும். நம்பிக்கை ஒளி மலரத் தொடங்கினால் இளைஞர்கள், யுவதிகள் ஏன் நாம் எல்லோருமே புதுத்தென்பு பெறத் தொடங்கிவிடுவோம். ஆகவே இளைஞர் யுவதிகளின் மனதில் புதுத் தென்பை உண்டாக்க எமது தமிழ் மக்கள் பேரவை பிரயத்தனங்களில் ஈடுபட வேண்டும். எமது தன்னம்பிக்கையே எமது நிலையான சொத்து.

இன்று இளைஞர்கள் யுவதிகள் மட்டத்தில் நம்பிக்கையீனம் குடிகொண்டதால்தான் அவர்கள் சில தகாத வழிகளிலே செல்ல எத்தனிக்கின்றார்கள். பரீட்சைகளில் போதிய புள்ளிகள் இல்லாமை, மனதில் குறிக்கோள் இல்லாமை, குடும்பங்களுக்குள் ஏச்சுப் பேச்சுக்கள் என்று பல காரணங்களைக் கூறலாம். சிலருக்கு வெளிநாட்டுப் பணம் வந்து சேர்வதால் அதனைப் பாவிக்கத் தெரியாமல் திண்டாடும் நிலைமையும் அவர்களை ஆத்திரம் அடைய வைக்கின்றது. சிலர் வெளிநாட்டுப் பணத்தை உபயோகித்து மோட்டார் சைக்கிள்களை வாங்குகின்றார்கள். மது அருந்துகின்றார்கள். வாக்கு வாதங்களில் ஈடுபடுகின்றார்கள். வன் செயலிலும் ஈடுபடுகின்றார்கள்.

அவர்கள் மனதில் குறிக்கோள் இல்லாததே இதற்குக் காரணம். ஒன்றில் உயர் கல்வி ரீதியாக நான் இந்தவாறாக வருவேன் என்ற ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். அல்லது விளையாட்டு ரீதியாக அவ்வாறான குறிக்கோள்கள் இருக்கலாம் அல்லது வணிக ரீதியாகக் குறிக்கோள்கள் இருக்கலாம். இல்லை என்றால் ஏதாவது ஒரு சமயம் சார்பான குறிக்கோள்கள் கூட இருக்கலாம். குறிக்கோள்கள் அவசியம் என்பது எம் எல்லோருக்குந் தெரியும். ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் கனவு காணச் சொன்னார். எமது குறிக்கோள்கள் செயற்படுத்தப்படுவன என்று கனாக் காண வேண்டும்.

அரசியல் ரீதியாக ஒரு குறிக்கோளையும் அதனை அடையும் வழிமுறைகளையும் நாம் இளைஞர் யுவதிகளுக்குச் சொல்லிக் கொடுத்தோமானால் அவர்களை நாம் எமது சமூகத்தின் மிக வலுவான ஒரு அலகாக மாற்றியமைக்க முடியும். ஆகவே தான் இளைஞர் கருத்தரங்கங்களை தமிழ் மக்கள் பேரவை ஒழுங்கு படுத்த முன் வந்தமையின் காரணத்தை இப்பொழுது நீங்கள் ஓரளவு உணர்ந்திருப்பீர்கள்.

இவ்வாறான ஒரு எண்ணம் என்னுள் பரிணமித்தது எப்பொழுது என்று கேட்டீர்களானால் எனது விடை நகைச்சுவையாக இருக்கும்.

என்னைப் பதவியில் இருந்து விரட்ட எம் மாகாண சபை உறுப்பினர்கள் பல சதிகளில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் "நாம் உங்களுடன்" என்று இளைஞர்கள் ஒன்று கூடித் தமது ஆதரவை வெளிப்படுத்திய போது நான் ஒன்றைக் கூறினேன். அது நன்றிப் பெருக்கில் என்னை அறியாது வெளிவந்த சொற்கள். "நானும் உங்களுடன் இருப்பேன்" என்று கூறினேன். பதவி பறி போகின்றதோ இல்லையோ "நான் உங்களுடன்" என்ற போது தான் என்னால் இளைய சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் என்ன என்ற கேள்வி உதித்தது.

இளைஞர்களின் பலத்தை நன்மைக்கும் பாவிக்கலாம். தீயனவற்றிற்கும் பாவிக்கலாம். தமிழ் மக்கள் பேரவை அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்து குறிக்கோள்களைக் கொடுத்து மதிப்பையும் கொடுக்க முன் வந்தால் அவர்கள் சமூகத்தின் ஆர்வலர்களாக மாறிவிடுவார்கள் என்ற முடிவுக்கு வந்தேன்.

மேலும் அரசியல் கட்சிகள் இரண்டாம் மட்ட அல்லது மூன்றாம் மட்ட இளைஞர்களை யுவதிகளை தலையெடுக்க விடாது அவர்களை தட்டித் தட்டி வைப்பதையும் நான் கண்டுள்ளேன். தலைவர்கள் தகைமை அற்றவர்களாக இருக்கும் போது தம்மிடத்தை மற்றவர்கள் பிடித்துக் கொள்வார்களோ என்று அவர்கள் சந்தேகிப்பது நாம் கண்டு வரும் ஒரு நிகழ்வு. தகைமையுடையவர்களை மேலெழும்ப விட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை தமிழ் மக்கள் பேரவை செய்ய வேண்டும். இளைஞர் யுவதிகளை அடையாளம் கண்டு எம்முடன் இணைத்துக் கொள்ள முன் வர வேண்டும். முதலில் இளைஞர் அணிக்குள்ளும் காலம் செல்லச் செல்ல மத்திய குழுவிற்குள்ளும் அவர்களை ஈர்க்க வழி அமைக்க வேண்டும்.

அரசியல் குறிக்கோள்கள் கொள்கை ரீதியாக இருக்கலாம், சமூக ரீதியாகவும் இருக்கலாம். சமய ரீதியாகவும் இருக்கலாம். மற்றவர்களுக்கு உதவுவதில்த்தான் எமக்கு உண்மையான மகிழ்ச்சி ஏற்படும் என்று நாம் சமய ரீதியாக உணர்ந்து கொண்டோமானால் சமூக ரீதியாக உதவிகளைச் செய்ய எமது இளைஞர் யுவதிகள் முன்வருவார்கள். கூட்டாக இணைந்து செயற்கரியவற்றை செய்யக் கூடியவர்கள் இளைஞர் யுவதிகள். சிரமதானம் செய்வது. இரத்ததானம் செய்வது. பணம் சேர்த்து தானங்கள் பல இயற்றுவது போன்ற பலவற்றை இளைஞர் யுவதிகள் செய்யலாம். தாம் வாழும் கிராமங்களை சுத்தமுடன் சுகாதாரமுடன் இருக்க ஆவன செய்யலாம். சமூகச் சீர் திருத்தத்திலும் அவர்கள் ஈடுபடலாம். பொலிஸாருக்கு ஒத்தாசையாக பொது மக்கள் குழுக்களில் கடமையாற்றிப் போதைப்பொருள் பாவனை, மணல் கடத்தல் போன்றவற்றை தடுக்கும் பணிகளில் இளைஞர்கள் ஈடுபடலாம். வன் செயல்களில் ஈடுபடுவோரை அடையாளங்கண்டு அவர்களின் வாழ்க்கைகளில் மறுமலர்ச்சி ஏற்படுத்தலாம்.

இவற்றிற்கெல்லாம் சரியான வழிநடத்தல் முறைகளை நாம் புரிந்து கொண்டுதான் அவர்களை ஆற்றுப்படுத்த முன்வர வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவை எமது இளைய சமுதாயத்தை எவ்வாறு வழி நடத்துவது என்ற விடயத்தில் சிந்தித்துப் பற்றுறுதியுடன் செயற்பட வேண்டும். நாம் வெறும் கடமைக்கு வேலை செய்பவர்களாக இருந்தால் எம் மீது இளைஞர் சமுதாயத்திற்கு சந்தேகமும், ஆத்திரமும், கோபமும் வந்து விடும். எம்முள் அன்பும் கரிசனையும் மேலெழுந்ததால்த்தான் அவர்கள் எம் வழிக்கு வருவார்கள்.

எனவே இளைஞர் யுவதிகளை வழிநடத்த தமிழ் மக்கள் பேரவை முன்வர வேண்டும் இளைஞர்களுக்கான குறிக்கோள்களை அவர்கள் மனதில் உள்ளடக்க நாம் பாடுபட வேண்டும். கூடுமான வரையில் வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கவும் நாங்கள் முன்வர வேண்டும். உன்னத குறிக்கோள்களை இளைஞர் அணிகள் மத்தியில் விதைத்தால் பயிர்கள் செழித்து வளரும். சமூகம் மறுமலர்ச்சி அடையும். ஆகவே இளைஞர் யுவதிகளை அரசியல் ரீதியாக ஆற்றுப்படுத்த நாம் எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## முல்லை வந்த...

யப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளரது அலுவலகத்தில் இராணுவம் மற்றும் அரசாங்க அதிபர் மற்றும் அமைச்சர் சுவாமிநாதன் ஆகியோருக்கிடையில் சுமார் அரைமணி நேரம் சந்திப்பு நடைபெற்றது

இதனைத்தொடர்ந்து கேப்பாப்பிலவு மக்களுக்கும் அமைச்சருக்குமிடையில் சுமார் அரை மணிநேர சந்திப்பு இடம்பெற்றிருந்தது. இருப்பினும் இந்த சந்திப்பில் இராணுவ அதிகாரிகள் கலந்துகொள்ளவில்லை, ஊடகங்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. (ம-281)

## தீக்காயத்துக்குள்ளான...

தனக்கு குழந்தைகள் இல்லை என்ற மனவிரக்தியில் இருந்துள்ளார். இது தொடர்பாக பலரிடம் தனது கவலையை வெளிப்படுத்தி வந்துள்ளார்.

மனவிரக்தியில் இருந்த குறித்த பெண் கடந்த 21ஆம் திகதி தனது தாயிடம் குளிப்பதற்கு செல்வதாக கூறிவிட்டு குளியல் அறைக்குள் சென்றுள்ளார். அங்கு தீக்குளித்துள்ளார். தீயில் எரிந்தபடி வெளியே ஓடி வந்த குறித்த பெண்ணை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மரண விசாரணை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர்மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தெற்கில் உள்ள...

சாலை, மாகாணசபை கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிட்டமை தொடர்பாக தெற்கு அரசியல்வாதிகளால் பல்வேறு எதிர்க் கருத்துக்கள் பரப்பப்படுகின்றமை தொடர்பாக ஊடகவியலாளர்களால் நேற்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிப்பது எமது தனிப்பட்ட விடயம். நாமே அதற்கு பொறுப்பானவர்கள், இதை மற்றவர்கள் கூறவேண்டிய அவசியம் இல்லை.

எமக்கு உள்ள அதிகாரங்கள் குறைவு. அதிலும் இருக்கும் அதிகாரங்களையும் மேலும் எடுக்கப்பார்க்கிறார்களோ தெரியாது. முள்ளிவாய்க்கால் நினைவுதினம் தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் உரிமை எமக்கு தான் உள்ளது என மேலும் தெரிவித்தார்.

அத்துடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பாக இன்று (நேற்று) இடம்பெற்ற தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் பேசப்பட்டது. அடுத்த வருடம் 10 ஆவது ஆண்டு நிறைவு வரவுள்ளது. அது தொடர்பாக பரந்த குழு ஒன்றை அமைத்து மக்கள் யாவரும் சேர்ந்து செயற்படக்கூடிய பூர்வாங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். வெகு விரைவில் அது தொடர்பாக அறிவிக்கப்படும். மேலும் பலவிதமான குறைபாடுகள் கவனத்தில் எடுக்கப்பட்டது. அடுத்த வருடம் இவ்வாறான குறைகள் ஏற்படாத வண்ணம் மக்களுடைய பரந்துபட்டகுழுவின் ஊடாக நடத்தவுள்ளோம் எனத் தெரிவித்தார். (ம-9)

## நினைவேந்தல்...

நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் அன்றைய தினம் அனைவரும் உயிரிழந்தவர்களை நினைவுகூரும்படி முதல்வர் என்ற வகையில் என்னால் அறிவித்தல் வழங்கப்பட்டது.

எனவே எமக்கும் தொடர்புள்ளதா என ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதுடன் இவ்விடயம் தொடர்பாக அவர்களுடன் நேரடியாக பேசவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(ம-9)

## இராணுவ கட்டு...

பட்டது. ஜே/233 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மாம்பிராய், மாங்கொல்லை பகுதிகளைச் சேர்ந்த 85 குடும்பங்களுக்குச் சொந்தமான 36 ஏக்கர் காணிகள் மக்களின் மீள்குடியமர்வுக்காக விடுவிக்கப்பட்டன என்று தெல்லிப்பழை பிரதேச செயலர் தெரிவித்தார்.

எனினும் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையூடான மாங்கொல்லை காணியிலுள்ள வீடுகள் விடுவிக்கப்படவில்லை. அவை தொடர்ந்தும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் பாவனையிலேயே இருக்கின்றன. காங்கேசன்துறை செல்லப்பிள்ளையார் கோயில் பின்பகுதியூடாகவோ மாம்பிராய் உள் வீதியூடாகவோ விடுவிக்கப்பட்ட காணிக்குள் போக முடியும் என படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

விடுவிக்கப்பட்ட காணிகளில் இப்பில் இப்பில் மரங்கள் காடுகள் போல வளர்ந்துள்ளதால் மக்கள் தமது வீடுகளையோ ஒழுங்கைகளையோ இனங்காண முடியவில்லை. இராணுவத்தினர் பயன்படுத்திய தனியார் வீதியூடாகவே போக முடிகிறது. அங்குள்ள வீடுகள் சில உடைக்கப்பட்டுள்ளன.

மாம்பிராய் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட்டாலும் மாங்கொல்லை காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. இங்கிருந்த நரசிம்ம வைரவர் கோயில் இராணுவ வேலிக்குள்ளேயேஉள்ளது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் ஊழியர்கள் தங்கும் விடுதியூடாக சீமெந்து தொழிற்சாலைக்கு நேராக கம்பி வே[illegible] அடித்து விடுவித்திருந்தால் அநேகமான வீடுகள் விடுவிக்கப்பட்டிருக்கும். ஆனால் குறுக்கறுத்து மாங்கொல்லை உள் ஒழுங்கையூடாக இராணுவ முட்கம்பி வேலி அடிக்கப்பட்டதால் பல வீடுகள் வேலிக்குள் அகப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தமது சொந்த காணிகளை துப்புரவு செய்து மீள்குடியமர்வதற்கு வலி.வடக்கு பிரதே[illegible] செயலக மீள்குடியேற்ற செயலணி அதிகாரிகள்எமக்கு உதவி செய்ய வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9)

## 2 பேர்...

கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந் நிலையில் இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண் சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக குறித்த பிரதேசத்தில் உள்ள மக்கள் அவதானமாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
(B-2446)

DELIVERY IN 3-5 DAYS
UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

வேலைக்கு ஆள் தேவை
Thenu Super Mart, Aadiyapatham RD, Thirunelvely.
T.P:- 021 492 1259
Time Monday 9.30am
நேர்முக தேர்விற்கு நேரில் வரவும்.
(4213)

வேலையாட்கள் தேவை
கணக்கியல் அனுபவம் உடைய ஆட்கள் தேவை.
தொடர்பு
சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல. 55,57 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வேலையாட்கள் தேவை
கட்டிடப் பொருட்கள் விற்பனையில் அனுபவம் உடைய ஆட்கள் தேவை.
தொடர்பு
சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல. 55,57 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பழைய மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்
யாழ். சிங்கள மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவ,மாணவியர் அனைவரும் கீழ் குறிப்பிடப்படும் விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
37, நாவற்குழி சந்தி, நாவற்குழி.
A.தமயந்தி 077 185 2840

WEC COLLEGE
மொழிக்கற்கை கல்லூரி
(புதிய உயர் கல்லூரி வளாகம்)
அரியகுளம் யாழ்ப்பாணம் மற்றும் சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447, 0217200989
IELTS (ACADEMIC/GENERAL)
தனிப்பட்ட வகுப்பு ஒழுங்கு முறைகள். 30,60,90 மணித்தியால முறையிலான வகுப்பு ஒழுங்குகள்
திருமணமாகி UK செல்பவர்களுக்கான
IELTS LIFE SKILLS A1 / B1
ஒரு வகுப்பில் 8 மாணவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள்.
ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனிப்பு
இரண்டு ஆசிரியர்களின் (ஆண்/பெண்) உதவியுடன் வழிகாட்டல்கள்.
GERMAN / SWISS - DEUTSCH
ஒரு வகுப்பில் 8 மாணவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள்.
Unlimitted Hours Classes
ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனிப்பு
DUTCH ( NETHERLAND/HOLLEND
ஒரு வகுப்பில் 4 மாணவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள்.
ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனிப்பு
Unlimitted Hours Classes
(C-2724)
SPOKEN ENGLISH WITH GRAMMER
ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள்.
ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனிப்பு.
இரண்டு ஆசிரியர்களின் (ஆண்/பெண்) உதவியுடன் வழிகாட்டல்கள்.

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(சு-2718)
CNR World Wide Express
021 5674145
077 2931062

ஜேர்மன் சுவிஸ் மொழிகள்
Deutsch
திரு. R.மயூரன் ஆசிரியரால் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு தமிழ் விளக்கத்துடன் கற்பிக்கப்படுகின்றன.
Note:- தனிப்பட்ட வகுப்புக்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
German Swiss Academy
(4123)
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (Near Rasi Collection) 077 645 4998
No:- 17A, கச்சாய் வீதி, சாவகச்சேரி.(Near New market)

யாழ்ப்பாணம் வந்தால் வாங்கோ...
இரசாயனம் விசிறாத பழங்கள், உடனடி தூய பழரசங்கள், Fruits salad, Cut Fruits, Ice creams, மதிய வீட்டு சைவ குத்தரிசி சாப்பாடு, தோசை வகைகள், சிற்றுண்டிகள், ஆரோக்கியத்திற்கு உகந்த உள்ளூர் தயாரிப்புக்கள் மற்றும் வெள்ளி மாலை தோறும் இயற்கை வழி இயக்கத்தின் அங்காடியில் நஞ்சு அற்ற காய்கறிகள் விற்பனைக்குண்டு. (4216)
Juicy Touch, 572, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (Singer காட்சியறை & RDHS அருகில்)
தொடர்பு:- 077 078 0240 021 222 3242

எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை
● அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
● அருள்ஸ் பிறைவேற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.
அருள்
சாவகச்சேரி இல. 01 NDB வங்கிக் கட்டடம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
நெல்லியடி இல. 01 பெற்றோல் செற் லேன் ,நெல்லியடி. 076 443 1576
கிளிநொச்சி இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்) 076 443 1576
(சி-2725)

உடனடி வேலைவாய்ப்பு
யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எதிரில் SINGER காட்சியறைக்கு அருகில் உள்ள ஆரோக்கியமான இரசாயன கலப்பற்ற உணவகம் மற்றும் உடனடி பழரச விற்பனை நிலையத்திற்கு காலை 06.00 மணிக்கு முன்னர் பாரம்பரிய உணவு தயாரிப்பதற்கு பகுதிநேர/முழுநேர சமையல்காரர் தேவை. பெண் பணியாளர்கள் விரும்பத்தக்கது. தங்குமிட வசதியும் உள்ளது.
தொடர்பு:-077 0780240
(4216)
572, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
நேர்முகம்: 28.05.2018. 3pm-6pm

மாணவர்களுக்கான புதிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கவும்
Diploma Courses
➢ Civil Draughtsmanship(1 year Part time)
➢ Information and Communication Technology(ICT) – (8 Months Full Time)
Computer Certificate Courses ( 3 – 4 months Part time)
➢ Computer Application Assistant(CAA)-NVQ Level 3(Accredited)
➢ Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
➢ Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
➢ Computer Hardware Technician
➢ Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
➢ AutoCAD 2D & 3D Modeling
➢ Computerized Accounting Packages – AccPAC, Tally & QuickBook
➢ Computer Programming –JAVA and C++ Programming
Certificate in Craft Courses ( முழு நேரம் -தமிழ் மொழி மூலம் )
➢ குளிரூட்டுதல் பயிற்சி நெறி -Refrigeration & Air-Conditioning Mechanic
➢ வீட்டு மின் இணைப்பாளர்- Electrician
➢ மோட்டார் வாகனம் திருத்துதல் - Motorcycle & Light Engine Mechanism
➢ இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல் - Radio, TV & Electronic Servicing
➢ அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்- NVQ Level -3 (Accredited) –Aluminum Fabricator
(C-2719)
மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
(TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Hostel, Library & Sports
For More Information : DIRECTOR
JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.
Tel : 0213213139/0212250975 E-mail: ejcit@sltnet.lk

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 167

விலை : 30.00

வள்ளுவர் ஆண்டு 2049 | 27.05.2018 | தொலைபேசி : 021 222 3378

நாவாந்துறை

தமிழகத்தில்...

## குறிவைக்கப்படும் தமிழர்கள்



## கவனிப்பார் யார்?



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

எங்கட தமிழர் பகுதியில நடக்கிற அவல மரணங்கள் தொடர்பில ஆலடி மாநாடு கவனம் செலுத்த வேணும் என்று பண்டிதர் பரமலிங்கம் மாநாட்டில கோரிக்கை வைத்தார்.

பண்டிதரின் கோரிக்கையை அங்கிருந்த அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள, மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் அதனை அங்கீகரித்து நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொண்டார்.

தமிழர் தாயகத்தில் நடக்கும் அவல மரணங்கள் தொடர்பில் கருத்துரைக்க பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

**பண்டிதர்:** அண்மைக் காலமாக தமிழர் தாயகத்தில் அவல மரணங்கள் ஒவ்வொரு நாளும் நடந்த வண்ணமுள்ளன. வீதி விபத்து மரணங்கள் , நீரில் மூழ்கி இறத்தல், மின்சாரம் தாக்கி பலியாதல், தற்கொலை மரணங்கள் எனப் பலவழிகளிலும் மரணங்கள் நடந்த வண்ணமுள்ளன.

அதிலும் விபத்து மரணங்கள் சொல்லி மாளாது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் வடமராட்சியில் தந்தையும் மகனும் மின்சாரம் தாக்கி மரணமான செய்தி எல்லாரையும் உலுக்கிப் போட்டுது.

**விதானையார்:** கேபிள் ரி.வி. லைனில வந்த கரண்ட்தான் தந்தையையும் மகனையும் தாக்கி சாகடித்திருக்குது.

**கங்காணி:** ரி.வி.கேபிள் லைன் கொடுக்கிறவர்கள் அதனைப் பாதுகாப்பாகச் செய்ய வேணும். ஏனோ தானோ என்று நடந்து கொண்டால் இப்படியான அவலங்கள்தான் நடக்கும்.

**வாத்தியார்:** அதுசரி கேபிள் லைனை பாதுகாப்பான முறையில எப்படி வழங்குகிறது என்ற சட்டக் கட்டுப்பாடுகள் ஏதேனும் உண்டோ? இதுபற்றி யார் கவனிக்கிறது எண்டு ஒண்டும் தெரியாமல் இருக்குது.

**மூப்பர்:** எங்கட அரச நிர்வாகிகள் தங்கட கடமையைச் சரியாகச் செய்ய வேணும். கேபிள் லைன் கொடுக்கிறவியள் தாங்கள் ஒரு சங்கமாக இயங்கி கட்டணத்தை உயர்த்துவது, சில ரி.வி.சனல்களை நிறுத்துவது இப்படித் தீர்மானங்கள் எடுக்கினமே தவிர, மக்களின்ர பாதுகாப்புக் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கிறதாக இல்லை.



## பாதுகாப்பான முறையில கேபிள் லைன் இருக்கவேணும்

**சாத்திரியார்:** வடமராட்சியில மின்சாரம் தாக்கி தந்தையும் மகனும் இறந்த சம்பவம் போல இந்தியாவில நடந்திருந்தால் ரி.வி. கேபிள் லைன் நடத்துகிறவர்களுக்கு எதிராக மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை மக்கள் நடத்தியிருப்பினம்.

**வாத்தியார்:** நாங்கள் இப்படிக் கதைக்கிறது ரி.வி.கேபிள் லைன் சேவையில ஈடுபடுகிறவர்களுக்கு ஆத்திரமாக இருக்கும். ஆனால் நான் கேட்கிறது உங்களுக்கு இப்படியொரு இழப்பு ஏற்பட்டால் எப்படி இருக்கும் எண்டு ஒருக்கால் சிந்தித்துப் பாருங்கள். மனித உயிர் போட்டுது எண்டால் பிறகென்ன அவ்வளவுதான். ஆகையால நாங்கள் ஒரு தீர்மானம் எடுப்பம்.

வாத்தியார் இவ்வாறு கூற பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ரி.வி. கேபிள் லைன் சேவையை வழங்குகிறவர்கள் அதனைப் பாதுகாப்பான முறையில வழங்க வேணும். இதனை உரிய அதிகாரிகள் கவனிக்க வேணும்.

அதேநேரம் வடக்கு மாகாணத்தில் நடக்கிற வீதி விபத்து மரணங்கள், மின்சாரம் தாக்கிய இறப்புகள், நீரில் மூழ்கியதால் நடக்கும் சாவுகள், தற்கொலைச் சம்பவங்கள் தொடர்பில ஒவ்வொரு மாவட்ட அரச அதிபர்கள் தலைமையில கூட்டம் போட்டு ஆராய வேணும்.

பண்டிதர் இவ்வாறு கூற, இடையில குறுக்கிட்ட கங்காணியார் ஏன் பண்டிதர் ஐயா ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் மாதாந்தம் நடக்கிற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில இது பற்றி ஆராய்ந்தால் என்ன?

**பண்டிதர்:** அபிவிருத்திக் குழுக் கூட்டமோ. அது வேலை மினக்கெட்ட அரசியல்வாதிகள் தாங்களும் இருக்கிறம் என்பதைக் காட்டுகிற கூட்டமல்லோ. அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில உருப்படியான விடயங்கள் செய்திருந்தால் இண்டைக்கு எங்கட மக்களின்ர வாழ்க்கைத்தரம் எங்கோ போயிருக்கும்.

எந்த விபரமும் தெரியாமல் கூட்டத்திற்கு வந்திருந்து ஏதோ கதைத்துவிட்டுப் போறதைப் பார்த்து சிரிக்கிறதா? அழுகிறதா? எண்டு தெரியாமல் இருக்குது.

**வாத்தியார்:** சரி...சரி... முதலில விபத்து மரணங்களைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேணும் எண்ட தீர்மானத்தைக் கொண்டு வருவம்.

வாத்தியார் இவ்வாறு கூற, அதனை அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள்.

தொடர்ந்து கங்காணி கார்த்திகேயன் எழுந்தார்.

**கங்காணி:** பளைப் பகுதியில அமைக்கப்பட்ட காற்றலை மின்சார உற்பத்தியால அந்தப் பிரதேசத்தில மழை இல்லை எண்டு மக்கள் முறையீடு செய்திருக்கினம். கிளிநொச்சியில நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இது பற்றிக் கதைத்தவியளாம்.

**சாத்திரியார்:** ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில என்ன சொன்னவியளாம்.

**கங்காணி:** பொதுமக்கள் கூறியிருக்கிற குற்றச்சாட்டுத் தொடர்பில ஆராயுமாறு சுற்றுச்சூழல் பிரிவுக்கு அறிவுறுத்தியிருக்கினமாம். இனி சுற்றுப்புறச் சூழல் அதிகார சபை கொடுக்கிற அறிக்கையைப் பொறுத்துத்தான் எல்லாம்...

**மூப்பர்:** உதுகள் ஒண்டும் நடக்கப்போற காரியமல்ல. பளைப் பிரதேசத்து மக்கள் ஒன்றுகூடி ஒரு பலமான ஆர்ப்பாட்டம் செய்ய வேணும். அப்பதான் எங்கட ஆட்கள் விழித்துக் கொள்ளுவினம்.

**விதானையார்:** போதாக்குறைக்கு காற்றலை மின்சார உற்பத்தியை தனங்கிளப்புப் பகுதியிலும் செய்யிறதுக்கு முயற்சி நடக்குதாம்.

**சாத்திரியார்:** நாசமறுக்க, நெல் விளையிற தனங்கிளப்புக்கும் உலை வைக்கப்போகினமாக்கும்.

**பண்டிதர்:** பளைப் பிரதேசத்தில காற்றலையை அமைத்து இப்ப அந்தப் பகுதியில மழை இல்லை எண்டாயிற்று. இனி, தனங்கிளப்பு... இப்படியே எங்கட விவசாய உற்பத்தி நடக்கிற இடங்களைப் பார்த்து இலக்கு வைபடுகுது.

**வாத்தியார்:** மக்கள் விழிப்பாக இருக்க வேணும். ஊர் மக்கள் விழிப்பாக இருந்தால் எல்லாம் சரிவரும். இந்தா பாருங்க மண்டைதீவில 18 ஏக்கர் விவசாயக் காணியை கந்தறுக்கிறமெண்டு கடற்படை நிற்குது.

வலி.வடக்கு , வலி. கிழக்கிற்கு குரல் கொடுக்கிற எம்.பிமாருக்கு தீவகத்தில வெறுப்புத்தானே. அதால எல்லாரும் பேசாமல் இருக்கினம்.

**மூப்பர்:** அதுசரி யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின்ர பணிப்பாளர் நியமனம் எப்படி இருக்கு.

**வாத்தியார்:** அது என்ர இங்கிரிமண்ட் மாதிரி fைபல் எடுக்கிறதும் பிறகு திருப்பி அனுப்பிறதுமாக இருக்கு...

வாத்தியார் இவ்வாறு கூற அந்த நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பறிபோகிறது

# வடக்கு ஆக்கிரமிக்கப்படுகிறது





# தமிழினப் பற்றுறுதியேனும் அறுந்து போகாமல் இருக்கட்டும்

இருப்பதையாவது காப்பாற்ற வேண்டும் என்ற நினைப்பை தமிழ் அரசியல்வாதிகளிடம் ஏற்படுத்துவதுகூட கடினமான விடயமாக உள்ளது.

ஒரு காலத்தில் தந்தை செல்வநாயகத்தின் தலைமையின் பாசறையில் பயின்ற தமிழ் அரசியல்வாதிகள் தமிழ்மக்களின் உரிமைக்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்தனர்.

எங்கெல்லாம் தமிழ் மக்களுக்கு எதிரான செயல்கள் இடம்பெற்றனவோ அங்கெல்லாம் தமிழ் அரசியல்வாதிகள் பிரசன்னமாக இருந்ததுடன் குறித்த விடயம் பற்றி பாராளுமன்றத்தில் கடுமையாகப் பிரஸ்தாபித்தனர்.

இதன் காரணமாக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகண்டு சிங்கள அரசியல்வாதிகள் பயங்கொண்டனர். ஆனால் இன்று நிலைமை அதுவன்று.

இப்போது தமிழ் அரசியல் தலைமை என்றிருக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்குக் கண்டு தமிழ்மக்கள் பயம் கொள்கின்றனர்.

எங்கள் இனத்தை விற்றுவிடுவார்களோ! தமிழினம் தெருவில் நிற்கும் அவலத்திற்கு ஆளாகிவிடுமோ? என்ற ஏக்கம் தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

இதற்கு கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்களின் செயற்பாடும் அவர்களின் நடவடிக்கைகளும் சாட்சியாக உள்ளன.

அண்மையில் தமிழ் ஊடகமொன்றுக்கு செவ்வியளித்த காசி ஆனந்தன் அவர்கள், தந்தை செல்வாவின் தலைமையில் பயின்றவர்கள் ஏன்தான் இப்படி மாறினார்கள் என்று கேட்டிருந்தார்.

ஆக, தமிழ்மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்த தமிழ் அரசியல்வாதிகள் இப்போது தமிழ் மக்களின் உரிமைக்கான கோசத்தை நெரித்து இலங்கை ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இயங்குவதைக் காணமுடிகின்றது.

வடக்கு- கிழக்கு தமிழர் தாயகம் என்ற மரபுநிலை கிழக்கின் பறிபோதலுடன் அறுந்து போகும் போலுள்ளது.







ஆம், கிழக்கு மாகாணம் முழுவதும் முஸ்லிம் மக்களின் ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டதாக ஆகிவருகிறது. கிழக்கு மாகாணத்தின் முக்கியஸ்தர் ஒருவர்; மிக விரைவில் கிழக்கில் இருந்து தமிழ் மக்கள் வெளியேறும் அவலநிலை ஏற்படும் என்று கூறியுள்ளார்.

அந்தளவிற்கு கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் கனகச்சிதமாக தமிழ் அரசியல்வாதிகளின் பலவீனத்தைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணம் முழுவதையும் தமதாக்கத் திட்டம் தீட்டுகின்றனர்.

கிழக்கில் சுமார் 500 ஏக்கர் நிலத்தில் இஸ்லாமியப் பல்கலைக்கழகமொன்று முழுக்க முழுக்க இஸ்லாமிய கலாசாரக் கட்டமைப்பில் அமைக்கப்படுகிறது.

அதேவேளை கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்து முடிந்த கையோடு மீண்டும் முஸ்லிம் ஒருவரே கிழக்கின் முதலமைச்சராக வரவேண்டும் என்பதற்கான திட்டமிடல்கள் இப்போதே அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தி வருவ தான தகவல்களும் வெளியாகியு ள்ளன.

கலைக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் நஷீர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் முதலமைச்சராகப் பதவி வகித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு விவசாயம் மற்றும் கல்வி அமைச்சுக்கள் வழங்கப்பட்டன.

ஆனால் எதிர்வரும் தேர்தலின் பின் தமிழர்களை ஒட்டு மொத்தத்தில் நீக்கிவிட்டு, சிங்களக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுதல் என்ற திட்டத்தின் மூலம் தமிழ் அமைச்சர்கள் என்ற பேச்சுக்கே இனி இடமில்லை என்பதான சூழ்நிலையை அவர்கள் திட்டமிட்டுச் செய்து வருகின்றனர்.ஆனால் இதுபற்றி எங்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் ஏதுமறியாதவர்களாகவே இருக்கின்றனர்.

தவிர, கிழக்கு மாகாணம் பறிபோகின்றது. அதனை எப்படியாவது தடுத்து நிறுத்துங்கள் என கிழக்கு மாகாணத்தின் தமிழ்ப் புத்திஜீவிகளும் தமிழ்ப் பற்றாளர்களும் கோரிக்கை விட்டாலும் அந்தக் கோரிக்கைகள்கூட, கூட்டமைப்பின் உறுப்பினர்களால் உதாசீனம் செய்யப்படுகிறது.

அதாவது கூட்டமைப்பின் தலைமைக்குப் பயந்து கூட்டமைப்பின்உறுப்பினர்களும் தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதைத் தவிர்த்து விடுகின்றனர் எனும் போது, எங்கள் அரசியல் எவ்வாறாக உள்ளதென்பதை உணர்ந்து கொள்வது அவ்வளவு கடினமன்று.

ஆக, கிழக்கு மாகாணத்தின் சமகால நிலைமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய கவனத்தையும் காட்டப் போவதில்லை என்பது சர்வநிச்சயம்.

இதேவேளை வடக்கு மாகாணமும் இராணுவத்தின் ஆக்கிரமிப்பு, சட்டவிரோத சிங்களக் குடியேற்றம், பௌத்த விகாரைகளின் கட்டுமானம் என்ற ஆக்கிரமிப்புகளுக்குள் அகப்பட்டுள்ளது.எனினும் இவை குறித்து தமிழ் அரசியல் தலைமை எதுவும் பேசுவதாக இல்லை.

அதேநேரம் தமிழ்மக்களின் மீள்குடியேற்றத்திற்கு வருகின்ற சர்வதேச நிதியுதவிகள் இராணு வத்தின் தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றது என அண்மையில் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கூறியிருந்தார்.

முதலமைச்சர் கூறியது உண்மை என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஒத்துக் கொண்டுள்ளார் எனும் போது கூட்டமைப்பின் தலைமை என்ன செய்துகொண்டிருக்கிறது? என்ற கேள்வி எழவே செய்யும்.

இராணுவத்தை வெளியேற்று என்று வடக்கு மக்கள் போராடிக் கொண்டிருக்கையில், வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்திற்கென சர்வதேச நாடுகள் வழங்கிய உதவி இராணுவத்திற்குப் பயன்படுத்துவதென்பது எந்த வகையிலும் ஏற்புடையதன்று.

இருந்தும் இவற்றை அறிந்தும் அறியாதது போல கூட்டமைப்பின் தலைமை இருப்பது தமிழ்மக்களின் இன உணர்வையும் கூட்டமைப்பு வேரறுத்துவிடுமோ என்ற ஏக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.


எனவே, எங்கள் உரிமை என்பதற்கு முன்னதாக எங்களிடம் இருக்கக்கூடிய தமிழினப் பற்றுறுதியின் வேர் அறுந்து போகாமல் பாதுகாப்பது முதற்பணி என்றாகிறது.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காளி



தான் ஒரு தத்துப்பிள்ளை என்று தெரிந்து, தன்னைப் பெற்றவர்களைத் தேடி ஹீரோ கிளம்பும் 80-களின் கதை!

அமெரிக்காவின் மிக முக்கிய மருத்துவர் விஜய் ஆண்டனி. 'பரத் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல்' என்ற பிரமாண்ட சாம்ராஜ்யத்திற்குச் சொந்தக்காரர். தன் உண்மையான பெற்றோர்களைத் தேடி இந்தியா வந்து இறங்குகிறார்.

அவரின் ரிஷிமூலத்தை ஜாதி ஏற்றத்தாழ்வுகளின் பின்னணியில் சொல்ல முயற்சித்திருக்கிறார் இயக்குநர் கிருத்திகா உதயநிதி!

ஹீரோவாக விஜய் ஆண்டனி. டாக்டர் கரக்டருக்கு நன்றாக பொருந்திப் போகிறார். ஆனால் ஹீரோவுக்கான மாடுலேஷன்கள் தான் நிறைய மிஸ் ஆகின்றன. சண்டைக் காட்சிகளில் கூட, 'ஓங்கி அடிச்சா வலிக்கும் சார், மெதுவாவே அடிக்கிறேன்' என மெல்லிய குரலில்தான் உரையாடுகிறார்.

நான்கு ஹீரோயின்கள். கொஞ்சமே கொஞ்சம் கவனம் ஈர்ப்பது ஷில்பா மஞ்சுநாத் மட்டுமே. அஞ்சலி, சுனைனா போன்றவர்களின் நடிப்புக்குத் தீனி போட கதையில் இடமேயில்லை. நாசர், வேல.ராமமூர்த்தி, ஜெயப்பிரகாஷ் போன்றவர்களுக்கும் அஃதே.

முதல்பாதி முழுக்கப் படத்தைத் தூக்கி நிறுத்துவது யோகிபாபு தான். நொடிக்கு நொடி பன்ச் அடித்து நம்மைக் குலுங்கவைக்கிறார். ரிச்சர்ட் எம்.நாதனின் ஒளிப்பதிவு 80-களில் நடக்கும் கதையையும் இப்போது நடக்கும் கதையையும் திறம்பட பேலன்ஸ் செய்கிறது. கலை இயக்கத்தில் மட்டும் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருக்கலாம்.

வழக்கமாக விஜய் ஆண்டனி இசையமைக்கும் படங்களில் ஒரு பாட்டாவது எகிடுதகிடு ஹிட்டடிக்கும். இதில் 'அரும்பே' மட்டும் லேசாக முணுமுணுக்க வைக்கிறது. முன்னும் பின்னுமாகப் பயணிக்கும் திரைக்கதைதான். ஆனால் எல்லா ப்ளாஷ்பேக்குகளும் ஒரேபோல முடிவது அயர்ச்சியைத் தருகிறது. 'நமக்கு உடனே ஓ.கே சொல்ற பொண்ணு கண்டிப்பா நம்மள விட்டுட்டுப் போய்டுவா. நம்மள சுத்தவிட்டு ஓ.கே சொல்ற பொண்ணுதான் கூடவே இருப்பா - இந்த மாதிரியான வசனங்கள் ஒரு பெண் இயக்குநரின் படத்தில் என்பது தான் ஷாக்!

கீழ்வெண்மணிப் படுகொலையை நினைவுபடுத்தி, கிராமத்தில் புரையோடிப் போயிருக்கும் ஜாதியக் கட்டுமானத்தை பின்னணியாக வைத்து மூன்று கோணங்களில் ஒரு கதையைப் படமாக்க நினைத்தது நல்ல முயற்சிதான்.

ஆனால், அரதப்பழசான கதை, அலுப்பூட்டும் காட்சியமைப்புகளால் அவர் சொல்ல வரும் சீரியஸ் விடயங்கள் எடுபடாமல் போய்விட்டன.

80களில் நடக்கும் கதையாக இருப்பதில் தவறில்லை. ஆனால் எல்லாக் காட்சிகளுமே 80கள் சினிமா காட்சிகளாக இருப்பது தான் 'காளி'யின் பலவீனம்.

# பாஸ்கர் ஒரு ராஸ்கல்

கல்லுக்குள்தான் கன்னா பின்னாவென்று ஈரம் இருக்கும் என்று மெசேஜ் சொல்லும் மலையாள ரீமேக் பாஸ்கர்.

அம்மாவை இழந்த சிறுவன் தன் அப்பாவையும், அப்பாவை இழந்த சிறுமி தன் அம்மாவையும் இணைத்துவைத்து புது ரேஷன் கார்டு வாங்க திட்டம் போடுகிறார்கள்.

அமலாபால் இன்னும் நன்றாக நடித்திருக்கலாமோ என்று தோன்றுகிறது. குறிப்பாக அவருக்கும் குழந்தை நைனிகாவுக்கும் இடையேயான உறவு ஈர்க்கும்படி இல்லை. சிறுவன் ராகவனின் நடிப்பில் முதிர்ச்சி தெரிகிறது. சூரி, ரோபோ ஷங்கர் செய்யும் நகைச்சுவைக் காட்சிகள் சில இடங்களில் 'ஓகே' ரகம். காரச்சட்னி காரமாக இருக்கும் சமாச்சாரங்களை எல்லாம் திரைக்கதையில் அள்ளிப் போட்டு அவியல் செய்திருக்கிறார்கள். " உங்கம்மா மாதிரி யாரும் வர முடியாதுடா.

நீ பொறக்கணும்ங்கிறதுக்காக தன் உயிரையே கொடுத்தவ என்று மாஸ்டர் ராகவனிடம் அரவிந்த் சுவாமி சொல்லும் காட்சி போல பல காட்சிகள் இருந்திருந்தால் இன்னும் ஜீவன் இருந்திருக்கும்.

பெரியவர்களைக் குழந்தைகள் சேர்த்துவைக்கும் கதையைக் 'குழந்தையும் தெய்வமும்' காலத்திலிருந்தே (ஒருவேளை அதற்கும் முன்பா?) பார்த்துவிட்டதால் கதையின் அடித்தளம் ஈர்க்கவில்லை.



ஆனால், போட்டுவைத்த காதல் திட்டம் ஓகேவாகும் முன் பல திடுக்கிடும் திருப்பங்கள் திட்டத்தைத் தவிடுபொடியாக்குகின்றன.

இறுதியில், குழந்தைகளின் திட்டம் வெற்றியடைந்ததா, இல்லையா என்பதை காமெடியாகச் சொல்ல ரொம்பவே முயன்றிருக்கிறார்கள் பாஸ்கர் குடும்பத்தார்.

எதிலும் அடாவடித்தனம் காட்டித்திரியும் கோடீஸ்வரத் தொழிலபதிராக அரவிந்த் சுவாமி. படத்தின் தலைப்பிலுள்ள 'ராஸ்கல்' எனும் வார்த்தைக்குத் தன் நடிப்பால் நியாயம் செய்திருக்கிறார்.

அடியாட்களை அடித்துப் பறக்க விடுவது, சூரி, ரோபோ சங்கரோடு சேர்ந்து காமெடி செய்வது, ராகவனிடம் பாசத்தைக் கொட்டுவது என எல்லா ஏரியாவிலும் நன்றாகவே ஸ்கோர் செய்திருக்கிறார்.

நாசர் நன்றாக நடித்திருக்கிறார்.

திரைக்கதை, காட்சியமைப்பு, இசை ஆகியவை பாஸ்கருக்குப் பலம் சேர்க்கவில்லை. படம் முடிந்ததற்குப் பிறகும் அரைமணி நேரம் கிளைமாக்ஸ் என்ற பெயரில் என்னென்னவோ நடக்கிறது. புளுட்டோனியம், நெப்டியூனியம் என சம்பந்தமில்லாத

அதுவும் மாறி, மும்பை தாதா, துப்பாக்கிச் சண்டை, தண்ணீரில் காணாமல் போகும் பெட்டி என்று திசைமாறி, நம்மைத் திண்டாடவைக்கிறார் பாஸ்கர் என்னும் ராஸ்கல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



## உப சபாநாயகர் பதவி அங்கஜனுக்கு கிடைக்குமா?

**சுதன்** — **குப்பிளான்**

**தெற்கு அரசியலுக்கு தமிழ் தலைமை பயப்படுகிறதா?**

தம்பி சுதன் அதைப் பயம் என்று சொல்லக்கூடாது விசுவாசம். அதன் பொருள் விசுவாசம்.

வீரவசனம் பேசுவது எங்களை உசுப்பேத்துவது, எங்களை தூண்டி விடுவதும், எங்களை பொங்கி எழச் செய்வது, எங்களின் வாக்குகளில் பதவி பெறுவது எங்களிடம் காட்ட வேண்டிய விசுவா சத்தை அங்கு காட்டுவது சுப்பர் டீல்.

**கோபு** — **திடலூர்**

**நிச்சயதார்த்தம் முடிந்த பெண்ணை காதலிப்பது தவறா?**

அந்தப் பெண்ணுக்கு நிச்சயம் செய்யப்பட்டவர் நீங்களாக இருந்தால் ஏற்றுக் கொள்வீர்களா தம்பி?

**அறிவு** — **திருநகர்**

**தாயன்பு என்பது?**

இரவு ஏழுமணி இருக்கும் கே.கே.எஸ். வீதி மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோவிலடியில் கண்டகாட்சி ஒன்று.

சரியான குளிர். மோட்டார் சைக்கிளில் ஒரு தாய் தன் பிள்ளைக்கு குளிராமல் சுவிற்றர் போர்வையால் போர்த்தியபடி பின்னுக்கு இருந்து செல்கிறார். கோவிலைத்தாண்டும் போது அந்த பிரமாண்ட ஆஞ்சநேயரை அண்ணாந்து பார்த்தபடி தனது கையை தன் பிள்ளையின் தலையில் வைத்து "ஆஞ்சநேயா..." என்று உச்சாடனம் செய்தாள்.

தாயால் மட்டும் தான் எந்த சூழ்நிலையிலும் தன்பிள்ளையின் நன்மை பற்றி நினைக்க முடியும் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

**சுரேஷ்** — **மிருசுவில்**

**மகிந்த ஆட்சிக்கு வந்தால்?**

ஒரு நிகழ்வில் ஒருவர் என்னிடம் உங்களுக்கு மோதகம் வேண்டுமா? கொழுக்கட்டை வேண்டுமா? என்று கேட்டார்.

நான் மோதகம் தாருங்கள் என்றேன். அவர் எடுத்துத் தந்தார். அது கொழுக்கட்டை. ஐயா இது கொழுக்கட்டை நான் கேட்டது மோதகம் என்றேன்.

அதற்கு அவர் சொன்னார் தம்பி இரண்டும் ஒன்று தான் பார்ப்பதற்குத் தான் வேறு வேறாய்த் தெரிகிறது என. அப்போது அவர் எனக்கு கீதை சொன்ன கண்ணனாய்த் தெரிந்தார்.

## மகிந்த ஆட்சிக்கு வந்தால்?

**தயாளன்** — **மயிலங்காடு**

**எதிர்க்கட்சி தலைவர் பதவியால் தமிழரின் உரிமை பறிபோகுதே?**

இந்த நாசத்தை எத்தனை தடவை இந்த இடத்தில் சொல்வது. என்ன சொல்ல எல்லா வற்றிற்கும் ஒரு முடிவு வரும், விடிவு வரும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் எதுவும் வந்த பாடில்லை. கலியுகத்தில் நல்லவர்களை இனம் காண்பது கடினம் என்பது உண்மைதான். உணர்கிறேன்.




**தரன்** — **விசுவமடு**

**அநியாயத்தைக் கண்டதும் நீங்கள் பொங்கு வீர்களாமே?**

அது உண்மை தான். ஆனால் கூட்டமைப்பினரின் பொங்கலை விட எனது பொங்கல் குறைவானது தான்.

**சயன்** — **யாழ்ப்பாணம்**

**உப சபாநாயகர் பதவி அங்கஜனுக்கு கிடைக்குமா?**

எதிர்க்கட்சி பதவியை கூட்டமைப்பு எத்தனை தியாகங்கள் செய்து பெற்றுக் கொண்டது. அந்தப் பதவியால் தமிழர்களுக்கு இம்மியும் நன்மை கிடைக்கவில்லை. அது போலத்தான் இந்தப் பதவியும். ஆனாலும் அந்தப் பதவியை அங்கஜனுக்கு வழங்குவதை கூட்டமைப்பு விரும்பவில்லை என்று அறிகின்ற போது அவர்களின் மனநிலை என்ன என்று புரிகிறது.

''என்னைத் தெரியவில்லையா? நன்றாகப் பார்'' என்று கிருஷ்ணன் கூறியது தான் இப்போது நினைவுக்கு வருகிறது?

**நந்தகுமார்** — **மானிப்பாய்**

**ஆளப் போவது யார்?**

உசுப்பேத்தி உசுப்பேத்தி உடம்பை ரணகளம் ஆக்கிட்டீங்கப்பா.

## காலா திரைப்படம் கூறவரும் அரசியல் என்ன?

**சுப்பிரமணியம்** — **மந்துவில்**

**எங்களுக்கும் காலம் வரும்... காலம் வந்தால் வாழ்வு வரும்... என்ற பாடல் பற்றி?**

அந்தப்பாடல் வரும்போது நான் இளைஞன். அப்போது நான் பாடி அதன் பின் அதே பாடலை என் மகன் பாடி இப்போது எங்களுக்கும் காலம் வரும் காலம் வந்தால் வாழ்வு வரும் என்று என் பேரன் பாடுகிறான். வாழ்வும் வந்தபாடில்லை. மற்றவரை வாழ வைத்த பாடுமில்லை.

**ஆதவன்** — **கோண்டாவில்**

**பெண்களின் குட்டைப் பாவாடை பற்றி?**

குட்டையாக குட்டையாக தம்பி கட்டையாக யோசிக்கிறீரோ?

**சரன் -அஜன்**

**காலா திரைப்படம் கூறவரும் அரசியல் என்ன?**

ரஜினியின் சமீபகால திரைப்படங்கள் அனைத்தும் அவரின் அரசியல் பயணத்தின் அத்திபாரங்கள்தான். அதிலும் அடிமட்ட மக்களின் இன்னல்களைச் சொல்லி அவர்களின் தலைவன் ஆகிவிடத்துடிக்கும் ரஜினிக்கு கிடைத்த துரும்புச் சீட்டுதான் ரஞ்சித் என்ற கலைஞர்.

**சன்** — **வவுனியா**

**நினைவேந்தலூடாக விக்கி ஐயா தமிழ் மக்கள் மனங்களில் இன்னும் ஆழமாய்ப் பதிந்து விட்டாரே?**

அதற்குக் கூட சுரிபூசிவிட எத்தனை முயற்சிகள். இந்த அரசியல் ஒரு சாக்கடைதான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதை இப்போது தான் உணர்ந்து கொண்டேன்.

**விது** — **செட்டிக்குளம்**

**கிரிக்கெட் வீரர் சங்கக்காரவா அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்?**

சங்கக்கார ஒரு மிகச் சிறந்த மனிதர். இலங்கையில் பிளவு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். 1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது கூட இவரின் தந்தையார் பல தமிழர்களை காப்பாற்ற உதவினார் என்ற கருத்துக்களும் உண்டு.

ஆனாலும் ஜனாதிபதிப் பதவி என்பது ஒரு தனிப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட பதவியாக இருந்தாலும் தீர்வு என்பதை எட்டிவிட யாராலும் முடியாது.

ஏனென்றால் தமிழருக்கான தீர்வைத் தர சிங்களத் தலைவர்கள் தயாராக இல்லை என்பதுதான் உண்மை.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்




## தூத்துக்குடி துயரம்

ஐம்பூதங்களும்
ஐம்புலன்களுக்கு
இயமனாக
புதிய அவதாரம் ஸ்டெர்லைட்...!

தூத்துக்குடியில்
எம் தமிழ்க்குடி
குடிசையில் வாழ்ந்தாலும்
குதூகலமாக வாழ்ந்தார்கள்

ஏய் ஸ்டெர்லைட்
நீயும் இயமன்தான்...!

நீர் நிறம் மாறியது
நிலம் மலமாகியது
தீ பெருந்தீயாகியது
காற்று மூச்சுக் காற்றை நசுக்கியது
ஆகாயம் புகை மூட்டமாகியது
ஐம்பூதங்களும்
ஐம்புலன்களுக்கு
இயமனாக
புதிய அவதாரம் ஸ்டெர்லைட்..!

நீதிக்காகப் போராடியவர்களுக்கு
அநீதியே தீர்வு...!

ஏய் காவல்துறையே
என் இனம் மீது
உன் தோட்டாக்கள் குறி தப்பியதில்லை...!

அந்த வீரர்கள் புதைந்த இடத்தில்
ஆயிரமாயிரம் புரட்சியாளர்கள் முளைப்பார்கள்
உங்களை துளைப்பார்கள்...!

ஈழத்திலிருந்து நவா

## என் உலகம்

உன் கடைவாயின் பால் மணத்தை
முகர்ந்து முகர்ந்து மூழ்கி விடுகிறேன்

உன் குறு குறு பார்வையில்
கண்ணாமூச்சி ஆடி
தோற்றுவிடுகிறேன்

உன் சின்னக் கையில்
என்னைத் தந்து கைதியாகிறேன்

உன் குட்டிக் காலின் உதைப்பை வாங்கி
செத்து விடுகிறேன்

உன் அருகில் படுத்து உன் மூச்சுக் காற்றில்
உயிர் தாங்கினேன்

உன் மந்திரப் புன்னகையில்
உலகை மறந்து மாயமாகி விட்டேன்

உன் உலகம் நானா? இல்லை என் உலகம் நீயடா

நிலாந்தி சசிகுமார், மட்டக்களப்பு

## மதுக்கோப்பை மங்கையர்

கிராமத்து பைங்கிளியே
மேனிக்கு மஞ்சள் பூசி
கரும் கூந்தல் இடையில் மல்லிகை சூடி
காதில் கம்மல் கையில் வளையல்
கால் கொலுசு வீர வசனம் ஒலிக்க
உயர்ந்து நின்றியே தமிழிச்சியாய்...

மெல்லினமும் வல்லினமும்
செல்லமாய் தவழ்ந்து இடையினமாய்
பெற்றதும் போதையில் விழத்தானோ?

வீரத் தமிழச்சிகள் பிறந்த மண்ணில்
போதைத் தமிழச்சியாக மாறியதேனோ?
மதுக் கோப்பையில் எதைக் கண்டாய்

தேநீர் கோப்பையில் மாட்டுண்டு
கிடக்கும் ஈக்களைப் போல்
மதுக் கோப்பையில் மாட்டிவிட்டாயே?

உன்னை சொல்லி குற்றம் ஏது?
மலர்கின்ற பூக்கள் எல்லாம்
அழகு என்று யார் சொல்வார்
கோப்பையில் விழுகின்ற
ஈக்களுக்கு தெரியுமா
அது தேன் இல்லை என்று

பாரதியார் கண்ட புதுமைப் பெண்கள்
இவர்கள் தானோ அல்லது
கீதாசாரத்தில் சொன்னது போல்
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது!

எஸ்.ஏ.கோகுலன்

## ஏவல் துறையானீர்..!

எரிமலைக் குழம்பாய்
வெடிக்கும் போராட்டங்களை
விரட்டி அடிக்க நினைக்கும்
காவல்துறையே!

மக்களுக்கு கவசமாய்
இருக்கவேண்டிய நீ
அரசியல் கூட்டத்தின்
ஏவல் துறையாகி
என் இனத்தின் நெஞ்சுகளை
சல்லடை போடுகிறாயே!

என் தேசம்
என் காற்று
என் சூழல்
என்று கத்திக் கதறும் அவனில்
நீயும் ஒருவனென்பதை மறந்து
லத்தி கொண்டலைகிறாயே!

தொப்புள் கொடி உறவான
எமக்கு நீதி கேட்டு
மெரினாவில் கத்திக் கதறியதில்
நீரும் ஒருவரென்று
செய்தி வரும் போது
சொல்ல வார்த்தையின்றி
விழியில் நீர் வடிய
இருகரம் கூப்பினோம்

இன்றோ...
சொந்த இனத்தையே
கொன்று குவித்து- அதில்
இன்பம் கண்டு கொள்வதேன்?

துப்பாக்கியால் குறிபார்க்கும் போதும்
லத்தியை ஓங்கும் போதும்
உம் வீட்டு முகங்கள்
அந்தப் போராட்டத்தில்
தெரியாமல் போனதேன்?

நீர் கொல்வது இனத்தை அல்ல
மனிதாபிமானத்தை
சுதந்திரத்தை
வாழ்வதற்கான உரிமையை!

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 400



## அலை கடந்தது அணை எதற்கு?

எம் இனம் காக்க நீ இழந்தது- கால்
மட்டுமல்ல உன் காலங்களையும்தான்
புலித்தோலை அணிந்து வீரவசனம்
பேசும் நரிகள் வர்க்கம்...!!!

இழப்பதும் தொலைப்பதுமே- என் இனத்தின்
அடையாளமாக்கப்பட்டதா?
மறந்துவிட்டோமென நினைத்து
என்ன (பாதுகாப்பு) தருகிறார்களாம்...!

எம் இனம் அழிந்து விட்ட பின்னும்
அணை கட்டித்தான் பலனென்ன?
அணையாய் நின்றவர்கள்- இன்று
அடங்கி விட்டார்கள்- ஆனால்
அடையாளங்கள்! இரத்த சரித்திரங்கள்

விடை சொல்ல முடியா கேள்விகள்
முடிவுரையும் தெரியாது கலங்கி நிற்கிறது
என்கவி வரிகளும்கூட....!!!

சா.உ.தர்சிகா
கொக்குவில் மேற்கு

## ஏக்கம்

என் வாழ்வில்
வசந்த காலத் தென்றலாய்
காதல் மணம் வீசி
இனிய வாழ்வு
வாழ்ந்த வேளைதனில்
எங்கிருந்தோ வந்த
போர் மேகம்
உன்னையும் என்னையும்
பிரித்து விட்டது

க.செல்வமலர்
இடைக்காடு

## அவலம்

குருதி கலந்த
கண்ணீரால்
வரையப்படும்
நம்
வரலாற்றுக்கு
கொடுமை
சூலிகளாய்
நின்று
வலி படைத்த
படையும்
வலுவிழந்து
மூச்சுவிடும்
நடைப்பிணங்களாய்
சீரழியும் நாமும்
ஒரே தேசத்துள்
வாழ்தலில் உள்ள
நீதி மறுக்கப்படும் வரை
முடிவுகளுக்கான
முற்றுப்புள்ளி
மூடப்பட்டே கிடக்கும்

தேன்நிலா
நல்லூர்

## விதை

முள்ளிவாய்க்காலில் முடிந்தது
கதை என்று நான்
தள்ளி நிற்கிறேன் முக்காலில்
இன்னுமா... கூடுகின்றீர்கள்
காலடித்து நாலுகாலில் நிற்கும்
மூவரும் இன்னுமா
தேடுகின்றீர்கள்?
பணமா... பிணமா... அல்லது
விதைத்த வீரம்
முளைக்கவில்லையா?

மாவையூர் கவி
வடலியடைப்பு

## தாயும் நாடும்

பெற்ற தாய்க்காக
எதையும் இழக்கலாம்
ஆனால் எதற்காகவும்
தாயை இழக்கக்கூடாது
இந்தப் பெறுமதியான பேறு
சொந்தமென்று கூறும்
தாயக பூமிக்கும் பொருந்தும்
"பெற்றதாயும் பிறந்த
பொன்னாடும் நற்றவ வானிலும்
நனி சிறந்ததென்று" தொடரும்
இனிய பாடலுமிதையே கூறும்
தியாகிகளுக்கு புரிவது போல்
இப்பணி பெரும்பாலோருக்கு
எப்போதும் தெரிவதில்லை

க.நாகராசா, நுணாவில்

## காலூனம் நீ கொண்டதல்ல!

காலூனம் நீ கொண்டதல்ல
உன் அருகில் உள்ளவர்களால் ஆகும்
நீ உறவுகளை இழந்ததும்
உன் உடைமைகள் அழிந்ததும்
இக்கொடும் போரினால்
உன் அழுகுரல் கணந்தோறும்
ஓங்கி ஒலிப்பதால்
உன் அருகில் வந்து
உறவு கொண்டாடி உனை தேற்றவா
உலகத்தின் நீதிக்கரங்கள்
நெருடும் போது அவர்களின்
வார்த்தைகள் ஊமையாகிவிடும்
உணர்ந்து கொள்

சந்நிதி, கதிர்ஷன்

## தேவை மனமாற்றம் மனச்சாட்சியுடன்

உலகம் போகிற போக்கை காண்பீர்!
நாடுகள் போகிற போக்கை காண்பீர்!
தேசங்கள் போகிற போக்கை காண்பீர்!
இனங்கள் போகிற போக்கை காண்பீர்!
மனிதர்கள் போகிற போக்கை காண்பீர்!
மனிதம் போகும் போக்கும் யாவும் சேர்ந்து
மனித குலத்தையே காவிவிடும்
இயற்கையின் சீற்றத்துடன்!
காவிவிடும் மனித ஆவிகளையும்
பாவிகள் அதிகரித்துவிட்டன உலகில்!
தாவிவிட வேண்டும் இயற்கை
கடவுளிடம் தஞ்சமென!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

# மௌனத்தின் தேடல் -401



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 30.05.2018 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை எனும் ஓடம்...

அன்னம்மாவிற்கு காலும் ஓடவில்லை. கையும் ஓடவில்லை. அடுக்களையிலிருந்தவாறே ஜன்னலூடாக வெளியில் பார்ப்பதும் வெளி வாசலைப் பார்ப்பதுமாக இருந்தாள். காலை 11 மணிக்கு மேலாகி விட் டதே 9 மணிக்கு நடந்து செல்லக்கூடிய காய்கறிக் கடைக்குச் சென்றவளை இன் னும் காண வில்லையே. பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திலிருந்தும் வழமை போல் வீட்டுக்கு அழைத்து வருபவள் அவள். மனம் மேலும் சஞ்சலப்பட்டது. பதகளிப்பு அடைந்தவள் உள்ள காய்கறிகளைக் கொண்டு ஓர் சின்னச் சமையலைச் செய்து முடித்தாள். நேரம் மதியம் 12 மணி எனக் கட்டியம் கூறுவது போல அம்மன் கோயில் மணி அடித்தோய்ந்தது. எட 12 மணி யாப்போச்சு பள்ளிக் கூடம் விடப் போகுதே. வயது முதிர்ச்சியினால் தளதளத்த உடலைத் தாங்கியவாறு அய லிலே உள்ள ஆட்டோவை ஒருவாறு பிடித்துக் கொண்டு ஒரு கட்டைக்கப்பால் அமைந்துள்ள பிளேஸ்கூலில் கல்வி கற்கும் மூன்று வயது நிரம்பிய பெண் பேரப்பிள்ளையையும் ஏற்றிக் கொண்டும் அதற்கு அப்பால் உள்ள 200 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் ஆறு வயது ஆண் பேரப்பிள்ளையையும் கூட்டிக கொண்டு வருகிறாள். "இண்டைக்கு ஏன் பாட்டி எங்களைக் கூட்டிக்கொண்டுவர அம்மா வரவில்லை" என்று கேட் கிறான் மூத்த பேரன். "கடைக்குப்போனவ இப்ப வந்திருப்பா" என்று கூறியவளுக்கு மேலும் அதிர்ச்சி காத்திருந்தது. அவள் வீடு திரும்பவில்லை. பிள்ளைகள் இரண்டும் வீடெல்லாம் ஓடி ஓடித் தேடினர். "அம்மா வருவா" என்று சமாதானப்படுத்தி உடுப்புக்களைக் களைந்து உணவு ஊட்டினாள். முதுமை வயதைத் தாண்டிய அன்னம்மாவிற்கு மருமகளைக் காணவில்லையே என்ற ஏக்க உணர்வு. கைகால்களில் பதற்றம். ஒருபிடி சோற்றைக்கூட விழுங்க முடியவில்லை. மறுபுறம் தாயைக் காணவில்லையே. பிள்ளைகளின் வாடி வதங்கிய முகம் அவளை வாட்டி வதைத்தது. நேரம் இரண்டு மணிக்கு மேலாகிறது. மகனிடம் கூறித் தொந்தரவு செய்ய எண்ணாதவளாக ஐந்து மணிக்கு வீடு வந்து விடுவான் தானே எண்ணிய அன்னம்மா பிள்ளைகளின் மனத்தை திசை திருப்ப எண்ணியவள் அருகில் அமைந்துள்ள பூந்தோட்டத்திற்கு அழைத்துச் செல்கிறாள். வழமைபோல மாலை ஐந்து மணிக்கு கச்சேரியில் தன் கடமைகளை நிறைவு செய்துவிட்டு வீடு திரும்பிய அம்பிகைபாலன் " அமுதா அமுதா" கூப்பிட்டுக் கொண்டே வீட்டுக்குள் நுழைகிறான். வழமைபோல் பூவும் பொட்டுமாக வரவேற்கும் அமுதா என்று செல்லமாக அழைக்கும் அவன் மனைவி அமிர்தராணியைக் காணவில்லை. மன அமைதி இழந்தவனாக "அம்மா அம்மா" என்று உரத்த குரலில் கூப்பிடுகிறான். தோட்டத்திலே நின்ற அன்னம்மா மகன் வந்திட்டானே மனப்பாரம் சற்று இறங்கிய நிலையில் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு ஓடி வருகிறாள். " என்ன அம்மா அமுதாவைக் காணவில்லை" சற்றுப் பதற்றத்துடன் கேட்கிறான். "காய்கறி வாங்கப் போனவள் வீடு திரும்பவில்லை" என்றாள். "அப்ப நீ போய் பார்க்கல்லையோ" கேட்கிறான். "நான் போய் பார்க்கிறன்" உடுப்புகளைக் கூடக் களையாமல் கூறிக்கொண்டு வெளி வாசலில் காலடியெடுத்து வைத்தவன் "ரெல போன் கோல் அப்பா" என்கிறான் மகன். திரும்பி ஓடி வந்து ரெலிபோனை எடுத்த வனுக்கு அதிர்ச்சித் தகவல் " நான் வேறு ஒருவருக்குச் சொந்தமாகி விட்டேன் என்னைக் கேட வேணடாம்" ரெலிபோனைக் கட் பண்ணி விட் டாள். வீடு தனக்கு மேல் இடிந்து விழுந்தது போல் உணர்வு.

பொழுது விடிந்தது. சூரியக் கதிர்கள் ஜன்னலூடாக அவன் அறையைத் தழுவின. தாய் தேநீர்க் கோப்பையுடன் "ராத்திரி எழுப்ப எழுப்ப வெறு வயித்தோட படுத்திட்டாய் இந்தத் தேத்தண்ணியை யாவது குடி" என்று கூறிக்கொண்டே அவனைத் தட்டி எழுப்புகிறாள். கண் விழித்தவன் கோபம் பொங்கி எழ "அவ ளைக் கண்டன் எண்டால் துண்ட துண்ட மாய் வெட்டிக் கருவாடு போட்டுடுவன்" என்று கூறிக்கொண்டே வரவேற்பறை யிலே தொங்கவிடப்பட்ட அவளின் படங்க ளை அடித்து நொறுக்கி வெளியிலே வீசினான். "கொஞ்சம் பொறடா என்னடா நடந்தது" கேட்கிறாள் தாய். வாய் கோபத் தால் துடிதுடிக்க "அம்மா என்ரை நாக்குச் சொல்லக் கூச்சப்படுகுது. அவள் ஆரோடையோ ஓடிப் போயிட்டாள்" என்றான்.

அவமானம் மேலோங்க வீட்டுக்கு வெளியே போக மனம் கூசியது. வீட்டிலே விளக்கேற்றியவள் எனது குலத்திற்கு நீங்காத பழிச்சொல்லை தேடித் தந்து விட்டாளே. நீண்ட மருத்துவ விடுமுறை யில் பிள்ளைகளின் அரவணைப்பை நாடி நின்றான்.

"என்னடா மோனை அவள் செய்த காரியம் றோட்டாலை கூடத் தலை காட்ட முடியவில்லையே" தாய் அடிக்கடி கூறுவா. ஒரு கணம் உயிரை மாய்க்க எண்ணியவன்,குடிக்கத் தலைப்பட்டவன் பிள்ளை கள் தனித்துப் போவார்களே அவர்களுக் காக வாழ்ந்தான். ஒருநாள் காய்கறி வாங்கும் நோக்கில் சீலைக்கடைகளைத் தாண்ட முற்படுகையில் அவனுக்கு அறிமுக மான ஓர் சீலைக் கடை முதலாளி சைகை காட்டி கூப்பிட்டு தனிமையில் கடைக்குப் பின்புறமாக அழைத்துச் சென்றார். " நான் எல்லாம் கேள்விப்பட்டனான். இந்தக் கடையிலதான் வேலை செய்கிறான். மிகவும் லட்சண மானவன். உங்கடை மனுசியோட அக்கா அக்கா என்று இனிக்க இனிக்கக் கதைப்பான். அவனுடைய சிரித்த முகம். அவவும் இருந்து கனநேரம் கதைப்பா. வியாபாரத்தைக் கவனி என்றால்தான் உங்கடை மனுசி எழும்பிப் போவா. இப்படி வரும் என்று ஆர் எண்ணி யது. ஆரைத்தான் இந்தக் காலம் நம்ப லாம். அவன்தான் கலியாணம் கட்டினவன் என்றும் ஒரு பிள்ளையும் மனுசியும் கொழும்பிலைகாள் இருக்கினம். மான மிழந்தவன் போல தலையைத் தொங்க விட்டபடி ஒன்றுமே கூறாமல் காய்கறி வாங்க மனம் வராமல் வெறுங்கையோடு வீடு திரும்பினான். அன்றிரவு 11 மணி இருக்கும் பௌர்ணமி தினம். பூரணை சந்திரன். சாரளத்தின் வழியாக அவன் அறையில் தண்ணொளி பரப்பிக் கொண் டிருந்தது. பக்கத்திலேயிடப்பட்டிருந்த கட்டிலிலே இரு பிள்ளைகளும் ஆழ்ந்த தூக்கத்திலே. ஒரே கட்டிலில் படுத்துறங் கும் அவன் மனைவியின் இடம் வெறிச் சோடிக் கிடந்தது. நித்திரையின்றி உழன்ற அவன் ஜன்னல் பக்கம் பார்க்கிறான். பௌர்ணமி தினங்களில் அவளுடன் மகிழ்ச்சியாக கழிந்த நாட்கள். ஆனால் இன்றோ துன்பியலைக் கட்டவிழ்த்து விட்டுச் சென்றுவிட்டாளே.




அவன் மனம் பல கோணங்களில் சிந்தனைகள் சிறகடித்துப் பறந்தன. அன்பான கணவனாக, கண் நிறைந்த கணவனாக, அன்பகலாத மனைவியாக, மாமியார் கொடுமைகளற்ற மருமகளாக வாழ்ந்தாள். நடந்தது நடந்ததுதான். ஒரு கணம் பிள்ளைகளைத் திரும்பிப் பார்க்கிறான். அவர்களுக்காக வாழத்தானே வேண்டும்.

அமிர்தராணி புகுந்த வீட்டிலே மனையாள் என்ற அந்தஸ்தில் வாழ்ந்து வந் தாள். ஏதோ ஒரு மாயவலை அவள் கண்களை மூட பாழங்கிணறு என்ற மரணப் பொறியிலே விழப் போகிறனே என்று எள்ளளவேனும் சிந்தனையற்ற நிலையில் காய்கறி வாங்கும் போர்வை யில் சென்றவள் தான் ஆசைப்பட்டவ னுடன் ஏற்கனவே திட்டமிட்டு ஒருவரது கண்ணிலும் படாமல் பட்டப்பகலிலே அவனுடன் கொழும்பிலுள்ள குடியிருப்புக்குச் சென்று உட்புகுந்தவள் ஒரு பெண்ணும் அவள் மடியிலே ஒரு குழந்தையையும் கண்டு அதிர்ந்து போனாள். தான் கலியாணம் கட்டவில்லையென்று பொய் சொல்லி விட்டானே. அவள் புரிந்து கொண்டாலும் அவளால் வாய்திறக்க முடியாத இக்கட் டான நிலை. என்ன வேலை செய்திருக் கிறாய். போதாக்குறைக்கு ஒரு பொம்பிளை யையும் கூட்டிக்கொண்டு வந்து நிக்கிறாய்" அவன் மனைவி சத்தம் போட்டாள். " நீயோ சிறுநீரக நோயாளி. உன்னையும் பாக்கேலாது. பிள்ளையையும் பாக்கே லாது. உனக்கு உதவி ஒத்தாசைக்குத் தான் கூட்டிக் கொண்டு வந்தனான்" என்று ஒருவாறு சமாளித்தான். ஆசை அறுபதுதான் மோகம் முப்பதுநாள் என்பார்கள்.

காலவோட்டத்திலே வைப்பாட்ச்சியாக விருந்தவள் வேலைக்காரியாகிவிட்டாள். அவனுடைய நச்சரிப்பு. ஒரு புறம் அவனுடைய மனைவியின் வேலை, பிள்ளை பராமரித்தல், சமையல் கட்டிலே வேலை. ஒவ்வொரு நிமிசமும் வேலை சொல்லிக் கொண்டிருப்பாள். மகாராசியாக வாழ்ந்த எனக்கு இப்படியான வாழ்க்கையா? விதியை நொந்து கொண்டாள். விதியை மதியால் வெல்லலாம் என்பர். மதி மயங்கி விட்டதே. தான் செய்தது இமாலயத் தவறுதான் என்று புரிகிறாள். நான் ஏழு பிறவி எடுத்தாலும் எனக்கு மன்னிப்புக் கிடையாது. இக்கரை மாட்டிற்கு அக்கரைப் பச்சை என்ற கானல் நீரை நம்பி ஓடி வந்தேனே எல்லாம் வெறும் பிரேமை தான். மனம் வெதும்பு கிறாள்.

பானையாலே விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் கொடிய டெங்குக் காய்ச்சல் அவளைப் பற்றிக் கொண்டது. எந்த உதவியுமின்றி ஆஸ்பத்திரியிலே ஒருவாறு தேறியவள். அழகு சுந்தரியாக அழகுப் பெட்டகமாகத் திகழ்ந் வள் எலும்பும் தோலுமாக வீட்டையடைந்தவளுக்கு மேலும் பேரதிர்ச்சி " அடுப்பிலை பிள்ளைக்கு குளிப்பாட்ட சுடுதண்ணி வைச்சிருக்கிறன் இறக்கு" என்று அதிகாரத் தொனியிலே கட்டளையிட்டாள்.


உடலிலே தெம்பு அற்ற நிலையிலே ஒருவாறு சுடுதண்ணிப் பாத்திரத்தை இறக்க கை தவறி அவள் மேல் முழுவதும் கொட்டியது. எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில சேர்க்கப்பட்டவள் பல நாட்களின் பின் ஒருவாறு எரிகாயங்கள் மாற தோல் எரிந்து உரு மாறி அவலட்சணமாக அமிர்தராணி என்று அடையாளம் அற்றவள் ஆனாள். வேலையால வந்தவன் " இரண்டு பேரை யும் என்ரை சம்பளத்திலை வைச்சுப் பாக்கேலாது. நீ வந்த வழியே போடி" என்று கூறிக்கொண்டே அவளைத் தள்ளி வெளியிலே விட்டு கதவைத் தாழ்பாள் போட்டான். அநாதர வாக வீதியிலே நின்ற வள் வீதியால் போவோர் வருவோரிடம் கையேந்தி இரந்து பெற்ற பணம் மூலமாக காலை பத்து மணிக்கு வந்தவள் தான் வாழ்ந்த வீட்டின் கதவைத் தட்டுகிறாள். பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். அம்பிகை பாலன் வேலைக்குச் சென்று விட்டான். "ஆரது" என்று குரல் கொடுத்து கதவண்டை ஓடி வந்தாள் அன்னம்மா. "நான் அமிர்தராணி வந்திருக்கிறன் கதவைத் துறவுங்கோ" என்றாள். அமிர்தராணி என்று அடையாளம் காண முடியாத நிலை" ஆரெடி உன்னை வரச் சொன்னது. எங்கடைகண்ணிலும் முழியாதே அவன் உன்னைக் கண்டால் இருக்கிற கோபத் திற்கு வெட்டிச் சாச்சுப் போடுவன் இங்கை நில்லாதை உயிரைக் கொண்டோடி" என்று உரத்த குரலிலே பொரித்துத் தள்ளினாள் அன்னம்மா. நான் பிள்ளைகளைப் பார்க்காமல் இந்த இடத்தைவிட்டு அசைய மாட்டேன் என்று அடம்பிடித்துக்கொண்டே நிலத்திலே இருந்து விட்டாள். வேறு வழியில்லாது பக்கத்து வீட்டு பங்கஜத்தின் உதவியோடு மகனுக்கு செய்தி அனுப்புகிறாள். கச்சேரியிலிருந்து வியர்க்க விறுவிறுக்க வந்தவன் அவளைக் காலால் உதைத்து "ஓடடி இங்கை இருக்காதே" என்று ஆவேசத்துடன் கத்தினான். " ஒரு கணமும் இங்கே இருக்காதே எங்கையென்றாலும் போ" என்று பொரிந்து தள்ளினான். வேறு வழி ஒன்றும் புரியாதவளாக தலைசுற்ற ஒருவாறு தட்டுத் தடுமாறி எழும்பியவள் கைகால்கள் தடுமாற எங்கே போவதென்றே தெரியாது கால்கள் நடக்கின்றன. காட்டாறாகப் பாய்ந்துவரும் இளம் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது உள்ளத்திலே உறுதியான நீண்ட அணையை அமைத்தால் நீண்ட மகிழ்வான வாழ்வியலுக்கு வித்திடும்.


சு.தர்மலிங்கம்,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா- இஸ்ரேல் உறவு தனிமைப்படுத்தப்படும் ஈரான்

## சர்வதேச அரசியல் பார்வை







உலக அரசியலில் தற்பொழுது தான் ஓரளவுக்குப் போர்ப் பதற்றமானது தணிந்து காணப்படுகின்றது. வடகொரியா தன்னுடைய இராணுவ வழியில் இருந்து இராஜதந்திர வழிக்குப் பாதை மாறியதன்மூலம் கொரிய தீபகற்பத்தில் உருவாகிய போர் மேகங்கள் அகன்று செல்லத் தொடங்கிய சூழ்நிலையில் மீண்டும் அமெரிக்கா, ஈரான் முரண்பாட்டின் கண்கள் மீளத் திறந்துள்ளன. மேற்காசிய பிராந்தியம் மீண்டும் ஓர் நெருக்கடியை சந்தித்துள்ளது. இது தொடர்பாக ஓர் பரிமாணத்தை இக்கட்டுரை அலசுகின்றது.

2015 ஆம் ஆண்டு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா ஈரானுடன் ஓர் அணுவாயுத ஒப்பந்தத்தினை மேற்கொண்டார். அந்த ஒப்பந்தமானது ஐக்கிய நாடுகள் சபையின் வீட்டோ அதிகாரத்தை உடைய நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியவற்றுடன் ஜேர்மனியும் இணைந்து ஈரானுடன் ஓர் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒப்பந்தத்தினை மேற்கொண்டனர். இவ் ஒப்பந்தத்தின் ஓர் பேரம் பேசலினூடாக மேற்கொள்ளப்பட்டது. அதாவது "நான் இதைச் செய்வதால் நீ இதைச் செய்ய வேண்டும்" என்பதன் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது. அதாவது அணுவாயுத உற்பத்திக்கான மூலங்களை உருவாக்குவதை ஈரான் நிறுத்துவதோடு ஈரான் மீதான பொருளாதார தடைகளை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் விலக்கிக் கொள்ளவேண்டும் என்ற நிபந்தனைகளை உள்ளடக்கி இவ் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இவ் ஒப்பந்தத்தில் முக்கியமான அம்சங்களாக அமைவது ஈரானானது யுரேனிய உற்பத்தியை 5 வீதத்திற்கு மேல் மேற்கொள்ள முடியாது என்பதுடன் அணு உலை எரிபொருள் மற்றும் அணு ஆயுதத்திற்கு பயன்படுத்தப்படும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் கையிருப்பினை 15 ஆண்டுகளுக்கு குறைக்கவும் அணுகுண்டு உருவாக்கப் பயன்படும் செண்டரி பியூஸ் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்றும்ஒப்பந்தம்மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் ஈரான் உற்பத்தி செய்திருக்கும் மிதமிஞ்சிய யுரேனியத்தை வேறு நாடுகளுக்கு கொடுக்க வேண்டும் என்பதுடன் ஈரான் மேற்கொள்ளும் இந்நடவடிக்கைக்கு பிரதி உபகாரமாக ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை விலத்துதல் மற்றும் ஈரானுக்கு நட்டஈடாக ஒரு இலட்சம் கோடி ரூபா வழங்கப்படுதல் வேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இவ் ஒப்பந்தத்தினை ஈரான் முறையாக செயற்படுத்துகின்றதா? என்பதனை சர்வதேச அணுசக்தி மையம் கண்காணிக்கும் என்றும் கூறப்பட்டது. இவ்வாறு ஒரு வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தத்தினை மேற்கொண்டதன் மூலம் அமெரிக்கா- ஈரான் இடையிலான அணு ஆயுத முரண்பாடு ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் சற்றுத் தணிந்திருந்தது.

ஆனால் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மேற்கொண்ட தேர்தல் பரப்புரையில் தான் ஜனாதிபதியாக வந்தால் அமெரிக்கா, ஈரானுடன் மேற்கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொள்ளும் என்று குறிப்பிட்டார். அதேபோல் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதுடன் கடந்த வாரம் ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிக் கொள்கின்றது என்ற அறிவிப்பை வெளியிட்டார். அமெரிக்கா இவ் ஒப்பந்தத்தில் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று ஒப்பந்த பங்காளி நாடுகள் அமெரிக்காவைக் கேட்டுக் கொண்டன. குறிப்பாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் அமெரிக்க பயணத்தின்போது இதனை நேரடியாகத் தெரிவித்தார். அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குற்றேரஸ் அமெரிக்கா இவ் ஒப்பந்தத்திலிருந்து விலகுவது மிகப்பெரிய போர் ஒன்று உருவாகுவதற்கு வழிவகுக்கும் என்று எச்சரித்திருந்தார். ஈரானும் அமெரிக்கா இவ் ஒப்பந்தத்தினை முறித்தக் கொள்ளுமாக இருந்தால் கடுமையான விளைவுகளை சந்திக்கும் என்று எச்சரித்தது. இவ்வாறான பல தரப்பட்டவர்களின் எதிர்ப்பிற்கு மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறும் அறிவிப்பை விட்டிருக்கின்றார். எனினும் மற்றைய நாடுகள் தொடர்ந்தும் ஒப்பந்தத்தில் நீடிக்கும் என்று அறிவித்துள்ளதுடன் ரஷ்யா ஈரானுக்குப் பக்கபலமாக நிற்கும் என்று தன்னுடைய நிலைப்பாட்டை ஈரானுக்குத் தெரிவித்துள்ளது.

உண்மையில் அமெரிக்க ஜனாதிபதியின் இத்தன்னிச்சையான, ஒரு தலைப்பட்சமான முடிவிற்குப் பின்னால் இஸ்ரேலின் நூறு வீத விருப்பம் தங்கியுள்ளது. "இஸ்ரேலின் விருப்பம்" என்ற ஒற்றைச் சொல்லிற்காக அமெரிக்கா இந்த முடிவை எடுத்திருக்கின்றது. இஸ்ரேலும் அமெரிக்காவும் நீண்டகால வரலாற்று நண்பர்கள். இஸ்ரேலின் புவிசார் நலன்களில் அமெரிக்கா எப்பொழுதும் தோள் கொடுத்தே வந்துள்ளது. மேற்காசிய பிராந்தியத்தில் இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் ஓர் வல்லரசுப் போட்டியானது 1979 ஆம் ஆண்டிலிருந்து உருவாகியது. ஈரானியப் புரட்சியின் பின்னர் உருவாகிய இஸ்லாமிய கடும் போக்கானவர்கள் இஸ்ரேலுடன் முட்டி மோதிக்கொண்டதோடு இஸ்ரேலானது இஸ்லாமியர்களுக்கு எதிரான நாடு என்ற கருத்துருவாக்கத்தில் ஒரு ஆழமான பகைமையை ஈரான் இஸ்ரேலுடன் வளர்த்துக்கொண்டது. இவ்வாறான ஈரான்- இஸ்ரேல் முரண்பாடானது 2011 ஆம் ஆண்டு சிரியாவின் உள்நாட்டு யுத்தத்துடன் தீவிரமடைந்தது. சிரியாவின் உள்நாட்டு யுத்தத்திற்கு நேரடியாக ஈரான் பங்களிப்புச் செய்ததுடன் சிரிய அரசாங்கத்திற்கு ஆதரவாக தனது இராணுவத்தையும் இராணுவத் தளங்களையும் ஈரான் சிரியாவில் நிலை நிறுத்தியுள்ளதுடன் இப்பிராந்தியத்தில் ஈரானின் கை மேலோங்கியே காணப்படுகின்றது. குறிப்பாக இஸ்ரேலுக்கு எதிரான லெபனான் நாட்டிற்கும் ஹிஸ்புல்லா, ஹமாஸ் போன்ற ஆயுதக் குழுக்களுக்கும் ஈரான் மறைமுக உதவி செய்து இஸ்ரேலுக்கு எதிரான செயற்பாட்டிற்கு தூண்டுவதாக இஸ்ரேல் குற்றஞ் சாட்டுகின்றது. இங்கு ஈரானின் இராணுவ அச்சுறுத்தல் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் நட்பு நாடான சவுதி அரேபியாவிற்கும் காணப்படுவதனால் ஈரானை இப்பிராந்தியத்தில் கட்டுப்படுத்த வேண்டும் என்பதே இஸ்ரேலின் நோக்கமாகும்.

மேற்காசிய பிராந்தியத்தில் ஈரானால் இஸ்ரேலுக்கு பாரிய ஒரு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சிரியாவைத் தளமாகக் கொண்டு எந்நேரமும் ஈரான் தாக்குதல் தொடுக்கலாம் என்று இஸ்ரேல் அஞ்சுவதுடன் சிரியாவில் உள்ள ஈரான் நிலைகள் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தியும் வருகின்றது. அத்துடன் இஸ்ரேல் நிலைகள் மீது ஈரான் ஏவுகணை தாக்குதலை நடத்துவதாக இஸ்ரேல் குற்றம்சாட்டுகின்றது. அதனால் இஸ்ரேலின் பாதுகாப்பிற்காக ஈரானைப் பகைக்க வேண்டிய ஓர் நிர்ப்பந்தம் அமெரிக்காவிற்கு காணப்படுகின்றது. அத்துடன் இஸ்ரேலின் பரம எதிரியான ஈரானை முடக்குவதற்கு இஸ்ரேல் அமெரிக்காவை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றது. எப்பொழுதும் இஸ்ரேலானது அமெரிக்காவின் ஓர் தொட்டில் குழந்தையாகவே பார்க்கப்படுகின்றது. அமெரிக்காவிற்காக இஸ்ரேலும் இஸ்ரேலுக்காக அமெரிக்காவும் எதையும் செய்யும் என்பதே வரலாற்று அனுபவமாகும். அமெரிக்காவிற்கு இஸ்ரேல் ஓர் மூளையாகவே இருக்கின்றது. யூதர்களின் இராணுவ வல்லமையும் உளவுத்துறை வல்லமையும் அமெரிக்காவின் கவசமாகக் காணப்படுவதனால் இஸ்ரேலுக்காக தன்னுயிரையும் அமெரிக்கா கொடுக்கும் என்ற சூழ்நிலையிலேயே டொனால்ட் ட்ரம்ப் ஈரானுடனான ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறும் அறிவிப்பை விடுத்தார்.

ஈரானுடனான ஒப்பந்தமானது எந்தவொரு பிரயோக பெறுமதியற்றதோடு அது " அழுகி சிதைந்து போன ஒப்பந்தம்" என்றும் பல்வேறு குறைபாடுகளால் ஒப்பந்தம் சூழப்பட்டுள்ளது என்றும் பகிரங்கமாக குற்றம் சாட்டினார். "வீடு கொழுத்தும் ராஜாவிற்கு கொள்ளிக்கட்டை எடுத்துக் கொடுக்கும் மந்திரி" போல இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஈரான் ஒப்பந்தத்தை மீறி அணுவாயுத உற்பத்தியில் ஈடுபடுவதற்கான சான்றுகளாக 55000 பக்கங்களையும் கொண்ட ஆவணங்களையும் நூற்றுக்கு மேற்பட்ட சிடிகளையும் சென்றவாரம் காட்சிப்படுத்தி அமெரிக்க ஜனாதிபதிக்கு தன்னுடைய விசுவாச வாலை ஆட்டிக் காட்டினார். இஸ்ரேலை பொறுத்தவரை அது அமெரிக்காவை ஈரானின் பகை நாடாகவே வைத்திருப்பதற்கு விரும்புகின்றது.

இதனால் ஈரானுடன் அமெரிக்கா மேற்கொண்ட அணுவாயுத ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை வெளியேறச் செய்ய வேண்டும்என்பதற்காகவேசரியான தருணத்தில் ஈரானுக்கு எதிரான ஆதாரங்களை வெளி யிட்டது.

இதன்மூலம் ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறியமையும் ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்ற அமெரிக்க ஜனாதிபதியின் அறிவிப்பும் வறண்ட வாய்க்கு சர்க்கரை தண்ணீர்கொடுத்தது போன்று இஸ்ரேல் ரசித்து ருசித்தது.


இவ்வாறு இஸ்ரேல் என்ற தனது இராணுவப் பிள்ளைக்காக அமெரிக்கா எடுத்திருக்கும் இம்முடிவானது திறந்த அரங்கில் அணுவாயுத உற்பத்தியை ஈரான் மேற்கொள்வதற்கான கதவை திறந்துவிட்டிருக்கின்றது என்பதே நிதர்சனமாகும். இது எதிர்காலத்தில் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும்பூமராங்களாக மாறலாம்.

**எஸ். கோகுலன்,**
**வட்டுக்கோட்டை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறிவைக்கப்படும் தமிழர்கள்



தமிழக வரலாற்றில் கடந்த அந்த இரண்டு நாட்களுமே கறுப்பு தினங்களாகப் பதிவு செய்யப்படும். தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டத்தில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் இதுவரை 13 பேர் பலியாகியிருக்கிறார்கள். தாங்கள் வாழும் நிலத்தை, சுவாசிக்கும் காற்றை, குடிக்கும் தண்ணீரை அதிகாரத்தின் பிடியிலிருந்து மீட்க முயன்றவர்களுக்கு இந்த அரசு துப்பாக்கிக் குண்டுகளை பதிலாகத் தந்திருக்கிறது.

அரசு கொடுத்த வேலையை கடமை தவறாமல் செய்து முடித்திருக்கிறார்கள் பொலிஸார். துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பற்றிய செய்தி வெளியாகி, அந்த வீடியோ வைரல் ஆனது. வெறிபிடித்த வேட்டையர்களைப் போலத் துப்பாக்கிகளை தூக்கிக் கொண்டு மக்களைத் தேடும் காவலர்களுக்கு மனச்சாட்சி கொஞ்சமாவது இருக்குமா? என்பது சந்தேகம்தான். வாகனத்தின் மேலே இருந்த ஒருவர் துப்பாக்கியை மற்றொருவரிடம் ஒப்படைக்கும் போது கீழே "கமான் டா அடிடா... ஒருத்தனாவது சாவனும்" என்று கீழே நிற்கும் காவலர் ஒருவரின் குரல் கேட்கிறது. இவ்வளவு வன்மம் மனதில் இருக்கும் ஒருவரால் எப்படிச் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியும்? துப்பாக்கியால் உயிரைப் பறிக்கும் அளவுக்கு அவர்கள் என்ன தவறு செய்தார்கள்? தங்களுக்கான உரிமையை அவர்கள் கேட்பது மரணத்தைக் கொடுக்கும் அளவுக்குத் தவறு என்று சட்டத்தில் எங்காவது குறிப்பிடப்பட்டிருக்கிறதா ?



போராட்டத்தின் போது நடைபெற்ற தடியடிக் காட்சிகளையும் அதன் பின்னரான துப்பாக்கிச் சூட்டின் காட்சிகளையும் பார்க்கும் போது பொலிஸார் எப்பொழுது மனிதர்களை வேட்டையாடும் வேட்டைக்காரர்களாக மாறினார்கள் என்றே தோன்றியது. கூடவே எஸ்.ராம கிருஷ்ணன் எழுதிய "எனது இந்தியா" புத்தகத்தின் சில பக்கங்களும் நினைவில் வந்து சென்றன. "புலியின் கேள்விகள்" என்ற அந்தப் புத்தகத்தில் இருக்கும் பகுதியைச் சிலர் படித்திருக்கக் கூடும்.





"வேட்டை என்பது சாகச விளையாட்டா... அல்லது உயிர்க் கொலையா? பசிக்காக மிருகங்களைக் கொல்வது வேறு, பெருமை அடித்துக்கொள்ள மிருகங்களைக் கொல்வது வேறு இல்லையா? ஆட்சியில் இருக்கும் மன்னர்களே வேட்டை ஆடுவது சரிதானா?" என்ற கேள்விகளுடன் அந்தப் புத்தகம் இருக்கிறது. இப்போது நடந்த சம்பவம்கூட இதைப்போல ஒரு வேட்டைதான். என்ன ஒரு வித்தியாசம் இங்கே. மிருகங்களுக்குப் பதிலாக மனிதர்கள் வேட்டையாடப் பட்டிருக்கிறார்கள். வேட்டையின் போது காட்டுக்குள் என்ன நடக்கிறதென்றே தெரியாமல் மிரண்டு பாயும் விலங்குகள் மீது எப்படிச் சுடுவார்களோ அதைப்போல அப்பாவி பொதுமக்களை நோக்கிச் சுட்டிருக்கிறார்கள்.

துப்பாக்கிக் கையில் கிடைத்தவுடன் ஏதோ மெரினாவில் பலூன் சுடும் துப்பாக்கி கிடைத்த குழந்தையின் குதூகலத்துடன் காவலர்கள் கிளம்புவதை வீடியோவில் பார்க்க முடிகிறது. அவர்கள் சுடும் ஒவ்வொரு குண்டும் ஒருவனின் உடலைத் துளைக்கும் என்பது தெரிந்தும் கூடச் சிறிதும் தயக்கமின்றி துப்பாக்கியின் விசையை அழுத்தியிருக்கிறார்கள். அந்த வாகனத்தின் மீது நின்று கொண்டு சுடும்போது குண்டு இடுப்புக்கு மேல் தான் தாக்கும் என்பதைத் தெரிந்துகொண்டு தான் சுட ஆரம்பித்தீர்களா...? நீங்கள் சுட விரைந்தது மனித உயிர்கள் என்பதை அந்த நொடியில் அறிந்திருந்தீர்களா? உங்கள் கையில் வைத்திருக்கும் லத்திகளும் கண்ணீர்ப் புகை குண்டுகளும் தவறு செய்தவர்களைத்தான் தண்டிக்க வழங்கப்பட்டன என்பதை எந்தக் கணத்திலாவது உணர்ந்திருக்கிறீர்களா?

உங்கள் துப்பாக்கியிலிருந்து சாதாரணமாக ஒரு தோட்டா பாய்ந்ததாக நீங்கள் நம்பலாம். ஆனால், அந்தத் தோட்டா உண்மையில் யாருக்காகப் பாய்ந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா? அதன் பின்னால் இருக்கும் அரசியல் உங்களுக்குப் புரியுமா? நீங்கள் எத்தனை அறிக்கை வேண்டுமானாலும் விடுங்கள், எத்தனை சாட்சிகளை வேண்டுமானாலும் சமர்ப்பியுங்கள், எங்களைத் தற்காத்துக் கொள்ளத்தான் சுட்டோம் எனக் கூறுங்கள். இதுபோல ஆயிரம் காரணங்கள் நீங்கள் கூறினாலும் அந்தத் தோட்டா யாருக்காக உயிர்ப்பலி வாங்கியது என்பதை மட்டும் யோசித்துப் பாருங்கள்.

பொலிஸார் இதுபோன்ற அத்துமீறல்களில் ஈடுபடும் போதெல்லாம் வழக்கம்போல் அவர்களால் ஒரு சப்பைக்கட்டு கட்ட முடிகிறது "நாங்கள் என்ன செய்ய முடியும்? எங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைத் தானே செய்தோம்" சட்டமும் நீதியும் எங்கள் கண்களுக்கு எப்போதும் தெரியாது. கொடுக்கப்பட்ட வேலையைச் செய்வதற்குத்தான் பழக்கப்படுத்தப் பட்டிருக்கிறோம் என்ற வார்த்தைகளை சொல்வதற்கு உண்மையில் நீங்கள் வெட்கப்பட வேண்டும்.

எஜமானன் எதைச் சொன்னாலும் செய்வேன் என்பதற்குப் பெயர் என்னவென்று தெரியுமா? வரலாறு அதை எப்படிப் பதிவு செய்திருக்கிறது என்பதனை அறிவீர்களா...? நீங்கள் வேலை செய்ய வேண்டியது மக்களுக்காகத்தானே தவிர, ஒருபோதும் அதிகாரங்களுக்கு அல்ல. ஆனால் இங்கே நடப்பதோ தலைகீழாக இருக்கிறது. அது அமெரிக்காவோ, சீனாவோ, [illegible] தூத்துக்குடியோ அதிகாரத்தில் இருப்பவர்கள் மக்களை ஒடுக்குவதற்குக் பொலிஸாரைத்தான் ஏவுகிறார்கள். பொலிஸாரும் தயங்காமல் தங்கள் கைகளைக் கொண்டு மக்களின் கழுத்தை நெரிக்கிறது. உங்களைச் சொல்லியும் குற்றமில்லை. பாவம் நீங்கள் கொடுத்த வேலையைச் செய்யத்தானே பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறீர்கள். சட்டத்தை மீறி எத்தனையோ விடயங்களை உங்களால் செய்ய முடிகிறதே. அப்படியே ஏன் நீங்கள் செய்யும் வேலைக்குப் பொருத்தமாக உங்களின் பெயரை "ஏவல்துறை" என்று மாற்றிக் கொள்ளக் கூடாது?

இதேபோல பொலிஸார் கூறும் மற்றொரு விடயம் எங்களை தற்காத்துக் கொள்ளத் தான் சுட்டோம் என்பது. எவ்வளவு பெரிய பொய். நீங்கள் உண்மையாகவே அப்படி நினைத்திருந்தால் சீருடையைக் கழற்றி வைத்து விட்டு மக்களுடன் இணைந்தல்லவா போராடியிருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் நீங்கள் வாழும் நிலத்துக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் சேர்த்துத்தானே நியாயம் கேட்டார்கள். இதுபோன்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும் அடக்குமுறைகளும் வரலாற்றில் பலமுறை நிகழ்ந்திருக்கின்றன. அதை ஆராய்ந்தால் ஒரு விடயம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இதுபோன்ற நேரத்தில் உங்கள் துப்பாக்கிகள் தீயவர்களின் பக்கமாகத் தவறுதலாகக் கூட திரும்பாதவாறு பார்த்துக்கொண்டீர்கள். அதற்கு மாறாக தங்கள் உரிமையைக் கேட்டுப் போராடிய சாமானிய மக்களின் இதயத்தைத்தான் நீங்கள் செலுத்திய தோட்டாக்கள் துளைத்திருக்கின்றன.

இவையெல்லாம் முடிந்த பிறகு உங்கள் வீட்டில் போய் என்ன சொல்வீர்கள். பத்துப் பேரை சுட்டுக் கொன்று விட்டோம் என்றா? நீங்கள் செய்த பாவத்திற்காக உங்களுக்குப் பதவிகளும் பதக்கங்களும் காத்திருக்கக் கூடும். ஆனால், யார் அங்கீகரித்தாலும் யார் மன்னித்தாலும் உங்கள் மனச்சாட்சி எப்போதும் நீங்கள் செய்த பாவத்தை மன்னிக்கப் போவதில்லை. குறைந்தபட்சமாக அடுத்த முறை மக்களின் போராட்டங்களைப் பார்க்கும் போது நீங்கள் அணிந்திருக்கும் சீருடை முதல் கையில் வைத்திருக்கும் ஆயுதங்கள் வரை மக்களின் வரிப் பணத்தில் வாங்கப்பட்டவைதான் என்பதையாவது நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் காப்பாற்ற வேண்டியது உங்கள் முன்னால் நிற்கும் மக்களைத் தானே தவிர, முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருப்பவர்களை அல்ல என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். ஏனென்றால் உண்மை ஒருபோதும் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளாது.

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான பூனைகள்

மனிதன் வளர்க்கும் செல்லப்பிராணிகளில் நாய் களும் பூனைகளும் குறிப்பிடத்தக்கவை. நாய்களின் உயரமும் கடிக்கும் தன்மையின் காரணமாகவும் அச்சப்படுபவர்களின் அடுத்த தெரிவு பூனைதான். ஏனெனில் இவை அமைதி யான சுபாவம் கொண்டவை. பூனைகளில் பல வகைகள் உள்ளன. அவற்றில் பல இயல்பான, அழகிய உடலமைப்புகளைக் கொண்டவை. அன்பு, குறும்பு, நட்பு என மனிதரிடத்தில் நெருங்கிப் பழகும் பூனைகளில் சில அரிதான மற்றும் அழகான பூனைகளும் இருக்கின்றன. உலகில் சில அழகான பூனை இனங்களைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

தேவோன் ரிக்ஸ்



மிகுந்த அறிவுத்திறனைக் கொண்ட பூனை வகை இது. அலை அலையான முடிகளைக் கொண்டது. 1970 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்ட இப்பூனை மெலிந்த உடலமைப்பையும், நீண்ட காதுக ளையும் கொண்டது. கடுமையான தந்திரங்களைக் கூட எளிதில் புரிந்து கொள்ளும் தன்மை கொண்டது. தனது குறும்புத் தனத்தால் மனிதர்களிடையே எளிதில் பழகக் கூடியது. உயரமான தடைகளையும் எளிதில் தாவிப் பற்றிக் கொள்ளும். இதனைப் பராமரிப்பதும் மிக எளிது.

ஸ்காட்டிஷ் உல்ஃப்



இயற்கையான மரபணு மாறுபாட்டால் இவ்வகைப் பூனைகளின் குருத்தெலும்புகள் பாதிக்கப்பட்டு காதுகள் முன்புறமாகவோ, பின்புறமாகவோ மடங்கியே இருக்கின் றன. இதனால் ஆந்தையைப் போன்ற முக அமைப்பைக் கொண்டிருக்கும். 1961 ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்தில் கண்டறியப்பட்ட இப்பூனையினம் அரிதானதாகக் கருதப்படுகிறது. உருண்டை வடிவத் தலையைக் கொண்டது. இப்பூனை மல்லாக்கப்படுத்துத் தூங்கும். கால்களை தெனாவட்டாக வைத்து உட்காரும்.

ஜப்பான் பாப்டைல்



மிகக் குறுகிய முயலைப் போன்ற வால் அமைப்பைக் கொண்டது. இது தென்கிழக்கு ஆசியா மற்றும் ஜப்பா னைப் பூர்வீகமாகக் கொண்டது. மனிதர்களிடையே பாசத்துடன் நெருங்கிப் பழகுவதால் பெரும்பாலான வீடுகளில் செல்லப்பிராணிகளாக வலம் வருகின்றன. மென்மையான கொஞ்சும் குரலில் வளர்ப்பவர்களிடம் தொடர்பு கொள்ளும் வகையில் இருப்பதால் அதிபுத்திசாலி என்றே இவற்றைச் சொல்லலாம். இவற்றின் குறும் புத்தனமாக விளையாட்டுக் குணம்தான் பலராலும் வீடுகளில் விரும்பி வளர்க்கக் காரணம்.

காவோ மானி



தாய்லாந்து நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டது. இதன் கண்கள் வைரத்தைப் போன்று இருப்பதால் "வைரக்கண் பூனை" என்றும் அழைக்கப்படுகிறது. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இப்பூனையினம் வாழ்ந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. முழுவதும் வெண்மையான இப்பூனையின் தோல் குறுகிய நீள முள்ள முடிகளைக் கொண்டுள்ளது. விரைவாக ஓடுவது, தாவிக்குதிப்பதில் வல்லமை படைத்தது. இந்த இனம் அழிவினை நோக்கிச் சென்ற காரணத்தால் இனப்பெருக் கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சவானா




சாதாரண பூனை் மற்றும் ஆபிரிக்கப் பூனையின் கலப் பினத்தில் உருவாக்கப்பட்டது. உயரமான கால்க ளையும், மெல்லிய தோல்களையும் கொண்டிருக்கும். நீண்ட கழுத்து மற்றும் கரும்புள்ளிகளுடன் உள்ள தோலானது சிறுத்தையைப் போன்ற தோற்றத்தைக் கொடுக்கிறது. பழகுவதற்கு இனிமையான குணம் கொண்டவை.

டீ கப் பர்ஷியன்




குறுகிய உடலும், உருண்டை முகமும், நீண்ட முடிகளையும் கொண்டது. மத்திய கிழக்கு நாடுகளில் ஈரானிய பூனை எனவும், ஈரான் நாட்டில் சிராஜி பூனை எனவும் அழைக்கப்படுகிறது. அமெ ரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகளிலும் இப்பூனை விரும்பி வளர்க்கப் படுகிறது. குறுகிய கால்களைக் கொண்டது. அப்பாவியான உருவ மும், குணமும் கொண்டது. இவை பெரும்பாலும் வீட்டிற்கு வெளியே செல்ல விரும்புவதில்லை என்பதால் தொடர்மாடி வாசிகளுக்கு ஏற்றது. மென்மையான குரல், சுத்தம், எல்லோரிடமும் நட்புப் பாராட்டுவது இவற்றின் பொதுவான குணங்க ளாகும்.

மன்ச்கின்



மரபணு மாற்றம் காரணமாக குறுகிய கால்களை உடையது. குறும்புத்தனம், இனிமையான குணம், அதிகமான அறிவுத்திறன் ஆகியவற்றைக் கொண்டது. மனிதக் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து நடப்பவை. குள்ளமான கால்கள் கொண்டிருப்பதால் குறுகிய உயரம் மட்டுமே தாவும். 1995ஆம் ஆண்டு சர்வதேசப் பூனை கள் சங்கம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட இப்பூனையை அங்கீகரித்தது.

பிக்ஸி பாப்



கொழுக் மொழுக் என கொழுத்துக் காணப்படும். சுமார் 5 கிலோ எடை வரை வளரக் கூடியது. இதன் முழு அளவிலான வளர்ச்சி சுமார் 4 ஆண்டுகள் வரை நீடிக்கும்.

உள்ளங்கால்களில் கருமை நிறத் தோல்களுடன் கூடிய முடிகளைக் கொண்டுள்ளது. 2 முதல் 4 இன்ச் அளவிலான வாலைக் கொண்டது. பேரிக்காய் வடி விலான தலையும் கொண்டது.

# "மனம் என்னும் அடிமை"

ஒரு நாட்டில் அரசர் ஒருவர் வெகு சிறப்பாக ஆண்டு கொண்டு இருக்கிறார்.

அவருக்கு வாய்த்த ஒரு அடிமை அவருக்குத் தேவையான எல்லாப் பணிகளையும் மிக அரு மையாக செய்து அவரிடம் நற்பெயர் பெறுகிறான்.

அவனுடைய சேவையில் மகிழ்ந்த அரசர் ஒரு நாள் அவனிடம்,

"உனக்கு என்ன வேண்டுமோ என்னிடம் கேள், நான் அதை நிறைவேற்றி வைக்கிறேன்" என்றார்.

அவனும் சிறிதும் யோசிக்காமல் மன்னரே நான் உங்களைப்போல அரசராக தர்பாரில் ஒரு நாள் மட்டும் வீற்றிருக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தான்.

அதைக் கேட்ட அரசர் அதிர்ந்து போனார்.

இருப்பினும் சற்று சுதாகரித்துக்கொண்டு,

"சரி அப்படியே ஆகட்டும்" என்று கூறிவிட்டு, தன் அமைச் சர்களிடம் " அந்த அடிமை அரசரானால் அவன் ஆணையிடும் எல்லாக் கட்டளைகளையும் எனக்கு நிறைவேற்றுவது போலவே நிறைவேற்ற வேண்டும்" என்று கூறினார்.

அடிமையும் அரசன் ஆனான். அவன் பதவியேற்ற மறுகணமே அரசரின் தலையைத் துண்டிக்க வேண் டும் என்று கட்டளை பிறப்பித்தான். அனைவரும் அதிர்ந்தனர்.

ஆனாலும் அவன்தானே இப்போது அரசன்! எனவே வேறு வழியில்லாமல் அவன் கட்டளைப்படி தண்ட னையை நிறை வேற்றினர்.

அதன்பின் அவனே மீதியான காலங்களில் அரசராக இருந்தான்.

இது ஒரு விபரீதக் கதைதான்.



இதை போன்றதுதான் நம்முடைய வாழ்க்கையும்.

இந்த கதையில் வருவது போல நாம் தான் அரசர்கள். நம்முடைய மனம்தான் அந்த அடிமை.

நம்மில் நிறையப் பேர் அந்த அரசனைப் போல மனம். நமக்கு விரும்பினதைச் செய்தவுடன், அந்த மனதை அரசராக்கி விடுகிறோம்.

ஆனால் பின்வரும் விளைவுகளைப் பார்த்தால், நாமும் அந்த அரசனைப் போல செத்துவிட நேர்கிறது.

ஆம்,. மனம் என்னும் அடிமை சொன்னவாறு செய்தால், நம்முடைய தகுதி, ஆளுமைத்திறன், பாரம்பரியம் எல்லாமே செத்து விடுகின்றன.

நாம் எடுக்கும் எந்த ஒரு முடிவும் நாம் விழித்து இருக்கும்போது எடுக்கப்பட வேண்டும்.

மனம் என்னும் அடிமையின் வசம் ஒப்படைத்தால் பின் னர் நமக்குள் இருக்கும் நியாய, தர்மங்கள் செத்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில்
உங்கள் ஆக்கங்கள்
இடம்பெற
வேண்டும் என்றால்
உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி
வையுங்கள்.

# உதவி



கழுதை ஒன்று, நிறைய பொதி சுமந்து கொண்டு சென்றது. அதன் பின்னால் கழுதையின் எஜமானரும் அவர் வளர்க்கும் நாயும் வந்து கொண்டிருந்தனர். செல்லும் வழியில் புல் தரையைப் பார்த்ததும், கழுதையை அங்கு மேயவிட்டு மரத்தின் நிழலில் படுத்துத் தூங்கினார் எஜமானர்.

கழுதை அங்கிருந்த புற்களை நன்கு மேய்ந்தது. ஆனால், நாய்க்குத் தின்பதற்கு எதுவுமில்லை. பசி, அதன் வயிற்றைப் பிடுங்கியது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த நாய், கடைசியாக கழுதையைப்பார்த்து, "நண்பனே, என்னால் பசி தாங்க முடியவில்லை. எஜமானரோ தூங்குகிறார். கொஞ்சம் கீழே படு. உன் பொதியில் உள்ள உணவில் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறேன்" என்று கெஞ்சியது.

நாயின் கெஞ்சலை கழுதை பொருட்படுத்தவில்லை. அது ஆனந்தமாகப் புற்களை மேய்ந்து கொண்டிருந்தது. நாயும் விடாமல் கெஞ்சிக் கொண்டிருந்தது.


நாயின் தொந்தரவு தாங்காத கழுதை, "என்னப்பா அவசரம்? எஜமானர் எழுந்திரிக்கட்டும். அவர் சாப்பிடும்போது உனக்கும்தான் கொடுப்பாரே" என்றது. வேறு வழியில்லாமல் நாய் சோர்ந்து போய் படுத்துக் கொண்டது.

அப்போது ஓநாய் ஒன்று மேய்ந்து கொண்டிருந்த கழுதை மீது பாய்ந்தது. பயத்தால் அலறிய கழுதை, "நண்பா, சீக்கிரம் ஓடிவந்து என்னைக் காப்பாற்று" என நாயைப் பார்த்து கதறியது.

படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்திரிக்காமல், "ஏன் அவசரப்படுகிறாய்? கொஞ்சம் பொறுமையாக இரு, எஜமானர் விழிக்கட்டும். அவர்தான் கட்டாயம் உனக்கு உதவி செய்வாரே" என்றது நாய்.

கழுதை, நாய்க்கு உதவி செய்யாமல் தான் செய்த தவறை நினைத்து வருந்தியது.

**நீதி: நாம் மற்றவர்களுக்கு உதவினால் தான், மற்றவர்கள் நமக்கு உதவி செய்வார்கள்.**



# பொது அறிவு

1.ஏலக்காயில் இருக்கும் எண்ணையின் பெயர் என்ன?
**வோலடைல்**

2.தன் வாழ்நாளில் நீரே அருந்தாத மிருகம் எது?
**கங்காரு**

3.ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன?
**ஏழு**

4.பிறக்கும்போது குழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள் இருக்கும்?
**330**

5.தாஜ்மஹால் எந்தவகை மார்பிளால் கட்டப்பட்டுள்ளது?
**மக்ரானா**

6.பனிக்கட்டிகளின் மேல் வளரும் செடிகளின் பெயர் என்ன?
**க்ரயோ பைட்ஸ்**

7.டயாலிஸிஸ் இயந்திரத்தைக் கண்டறிந்தவர் யார்?
**வில்லியம் கோல்ப்**

8.உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
**நெதர்லாந்து**

9.கடற்கரை மணலைச் சுத்தம் செய்யும் கருவியின் பெயர் என்ன?
**பீச் கோம்பர்**

10.நமது ஒவ்வொரு கண்ணிலும் எத்தனை தசைகள் உள்ளன?
**ஆறு தசைகள்**

# பழமொழிகள்

**1.அகத்தின் அழகு முகத்தில் தெரியும்**

**விளக்கம்:** ஒருவரது மனநிலையை அவரது முகத்தில் கண்டு அறியலாம். அவரது முக பாவனைகளை வைத்தே அவரது மனதில்என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

மனிதருக்கு முகபாவங்கள் அவரது மன எண்ணங்களை பொறுத்து அமையும்.

**2)அகல இருந்தால் நிகள உறவு, கிட்டவந்தால் முட்டப் பகை.**

**விளக்கம் :** உறவுகள் தொலைவில் இருந்தால் எப்போதாவது சந்திக்கும் போது அவர்களிடத்தில் சண்டை குறைவாக இருப்பதையும், பக்கத்தில் இருக்கும் உறவுகளிடம் எப்போதுமே பழக வாய்ப்பு இருப்பதால் அடிக்கடி ஏதும் பிரச்சினை வருவதையும் அன்றாடம் நாம் காணலாம்.

**3 ) அகல உழுகிறதை விட ஆழ உழு.**

**விளக்கம் :** நிலம் உழும் போது நிலத்தின் அடியில் உரம் மிக்க மண் இருக்கும், மேல் மண் அடிக்கடி பயிரிடப்பட்டு தாது பொருட்கள் குறைந்து காணப்படும், புது மண்ணில் பயிர் செழித்து வளரும்.

அதே போல, நூல்கள் படிக்கும் போதும், கல்வி கற்கும் போதும், சில விடயங்கள் கற்றுக்கொள்ளும் போதும் மோலோட்டமாக தெரிந்து கொள்ளாமல் ஆழ்ந்து தெரிந்துகொள்ளல் அவசியமாகும். அதுவே நிலைக்கும். மற்றவை சில தினங்களில் மறந்துவிடும்.

இப்பழமொழி அறிவுரை மட்டும் கூறாமல் பண்டைய தமிழர் விவசாய அறிவையும் விளக்குகிறது.

# கல்வியின் சிறப்பு

இன்றைய உலகின் இன்றியமையாத ஒன்றாக திகழ்வது யாதெனில் கல்வியே ஆகும். எந்தவொரு சமூகத்தினரும் இக்கல்வியைக் கற்பதிலிருந்து விலகிச் செல்வது இன்றைய நவீன உலகில் மிகவும் அரிதாக காணப்படுகிறது. ஏனெனில் கல்வியின் சிறப்பை அனைத்து சமூகங்களும்புரிந்துள்ளன. இதனால் தான் இன்று கல்வியானது மனிதனின் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.

கல்வியின் சிறப்பு பற்றி கூறும்போது கல்வி கற்றவன் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவன் பிற சமூகத்தால் மதிக்கப்படுகின்றான். இதற்குக் காரணம் அவன் கற்ற கல்வியே.

கற்றவனுக்கு தனது நாடும் ஊருமே அல்லாமல் எந்த நாடும் ஊரும் தன்னுடைய ஊராகும். இப்படி கல்வி கற்றவனின் சிறப்பு இருக்க ஒருவன் தான் மரணிக்கும் வரை கல்வி கற்காமல் இருந்து தனது காலத்தை கழிப்பது மிகவும் சிரமமானதாகும் இதனையே திருவள்ளுவர் மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார்.

"யாதானும் நாடு ஆமால் ஊர் ஆமால் என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு" என்று குறிப்பிடுகிறார்.

ஒருவன் தான் எவ்வளவு கல்வி கற்றாலும் அதனை செயல் வடிவில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் கற்ற கல்வியின் பயன் அவனுக்குக் கிடைக்கும். இல்லாவிடில் அவன் கற்ற கல்வியின் பயன் ஒன்றும் இல்லாமல் போய்விடும். இதனையும் திருவள்ளுவர் தனது திருக்குறளின் கல்வி என்ற அதிகாரத்தின் முதலாவது குறளில் தெளிவாக கூறுகின்றார்.

"கற்க கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக" என்று கூறுவதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ளலாம்.

எண் என்று சொல்லப் படுவதும், எழுத்து என்று சொல்லப்படுவதும் இவை இரண்டினையும் அறிந்தோர் சிறப்பு மிக்க மக்களின் உயிர்களுக்கு கண் என்று சொல்லப்படுவர். இந்த அளவிற்கு கல்வியின் சிறப்பு எடுத்துரைக்கப் படுகின்றது.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

கற்றவரின் சிறப்புப் பற்றி கூறும் போது ஒருவனின் முகத்திலுள்ள கண்ணானது கற்றவருக்குரிய அடையாளம் என்று சொல்லப் படுகிறது. அதே கண் இல்லாதவருக்கு முகத்தில் இரண்டு புண் இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. இதன் மூலம் கல்வியின் சிறப்பும் அதனைக் கற்றவனின் சிறப்பும் கூறப்படுகின்றது.

கல்வி உடையவர் எல்லா மக்களிடமும் நன்றாகப் பழகிக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அவர்களுடன் சந்தோசமாக சேர்ந்து வாழ்வதையே விரும்புவர். இவர்களை பிரிக்கின்ற போது, இனி நாம் எப்போது மீண்டும் சேர்வோம்! என்ற நினைவிலேயே பிரிகின்ற தன்மை கற்றவரிடம் இருக்கும் தன்மையாகும்.

மனிதன் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான். கல்வி என்பது ஆய்வு கல்வி மூலம் சூழலை அறிவை சமூகத்தைபண்பாடுமரபை ஆராய்ந்து கொள்ளலாம்.

"கல்விக்காக உயிர் கொடுத்தோர் என்றும் மரணிப்பதில்லை"

மேற்கூறிய வாசகத்தை ஆராய்ந்த போது கற்றவனின் சிறப்பை கணலாம். அதாவது இக் கல்விக்காக உயிர் கொடுத்தோர் மரணிப்பதில்லை. என்பது கல்வி கற்றவர் மரணித்து விடுவார். ஆனால் அவர் கற்ற, கற்பித்த கல்வி இந்த உலகம் அழியும்வரை இருந்தே ஆகும்.

எனவே, இவ்வாறு பார்க்கும் போது கல்வியின் முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது. ஒருவன் கல்வி கற்றால் எவ்வாறு சமூகத்தில் மதிக்கப்படுகின்றான் என்பதை விளங்க முடியும் இவ்வாறு கல்வியை கற்று சமூகத்தில் சிறந்ததோர் பிரஜையாக வாழ கல்வி உதவுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : ராமு
இசை : எம்.எஸ்.விஷ்வநாதன்
இயற்றியவர் : கண்ணதாசன்
பாடகர் : சீர்காழி கோவிந்தராஜன், ரி.எம்.சௌந்தரராஜன்




நம்பினார் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு
நல்லவர்க்கும் ஏழையர்க்கும் ஆண்டவனே காப்பு
பசிக்கு விருந்தாவன் நோய்க்கு மருந்தாவன்
பரந்தாமன் சந்நதிக்கு வாராய் நெஞ்சே!

கண்ணன் வந்தான் அங்கே கண்ணன் வந்தான் - ஏழை
கண்ணீரைக் கண்டதும் கண்ணன் வந்தான்
கண்ணன் வந்தான் அங்கே கண்ணன் வந்தான் - ஏழை
கண்ணீரைக் கண்டதும் கண்ணன் வந்தான்
கண்ணன் வந்தான் ஆ...

தேடி நின்ற கண்களிலே கண்ணன் வந்தான்
தீபம் ஒன்று கையில் கொண்டு கண்ணன் வந்தான்
தேடி நின்ற கண்களிலே கண்ணன் வந்தான்
தீபம் ஒன்று கையில் கொண்டு கண்ணன் வந்தான்
கேட்டவர்க்குக் கேட்டபடி கண்ணன் வந்தான்
கேள்வியிலே பதிலாகக் கண்ணன் வந்தான்
தருமம் என்னும் தேரில் ஏறிக் கண்ணன் வந்தான்
தாளாத துயர் தீர்க்கக் கண்ணன் வந்தான்
கண்ணன் வந்தான் மாயக் கண்ணன் வந்தான்
கண்ணன் வந்தான்

கண்ணன் வந்தான் அங்கே கண்ணன் வந்தான் - ஏழை
கண்ணீரைக் கண்டதும் கண்ணன் வந்தான்
கண்ணன் வந்தான் ஆ...

முடவர்களை நடக்க வைக்கும் பிருந்தாவனம்
மூடர்களை அறிய வைக்கும் பிருந்தாவனம்
முடவர்களை நடக்க வைக்கும் பிருந்தாவனம்
மூடர்களை அறிய வைக்கும் பிருந்தாவனம்
குருடர்களைக் காண வைக்கும் பிருந்தாவனம்
ஊமைகளைப் பேச வைக்கும் பிருந்தாவனம்
குருடர்களைக் காண வைக்கும் பிருந்தாவனம்
ஊமைகளைப் பேச வைக்கும் பிருந்தாவனம்
அடையாத கதவிருக்கும் சந்நிதானம்
அஞ்சாத சொல்லிருக்கும் சந்நிதானம்
சந்நிதானம் கண்ணன் சந்நிதானம் சந்நிதானம்

கண்ணன் வந்தான் அங்கே கண்ணன் வந்தான் - ஏழை
கண்ணீரைக் கண்டதும் கண்ணன் வந்தான்
கண்ணன் வந்தான் கண்ணா கண்ணா கண்ணா!

கருணை என்னும் கண் திறந்து காட்ட வேண்டும்
காவல் என்னும் கை நீட்டிக் காக்க வேண்டும்
கருணை என்னும் கண் திறந்து காட்ட வேண்டும்
காவல் என்னும் கை நீட்டிக் காக்க வேண்டும்
கனி மழலைக் குரல் கொடுத்துப் பாட வேண்டும்
கண் மறைந்த தாயும் அதைக் கேட்க வேண்டும்
கனி மழலைக் குரல் கொடுத்துப் பாட வேண்டும்
கண் மறைந்த தாயும் அதைக் கேட்க வேண்டும்
கவலைகளை உன்னிடத்தில் தந்தேன் கண்ணா
கருணையே அருள் செய்ய வருவாய் கண்ணா
கவலைகளை உன்னிடத்தில் தந்தேன் கண்ணா
கருணையே அருள் செய்ய வருவாய் கண்ணா
கண்ணா கண்ணா கண்ணா கண்ணா

கண்ணன் வந்தான் அங்கே கண்ணன் வந்தான் - ஏழை
கண்ணீரைக் கண்டதும் கண்ணன் வந்தான்
கண்ணன் வந்தான் கண்ணன் வந்தான்

# அதிசய அழகிய எரிமலை

பார்ப்பவர்கள்மனதைக்கொள்ளை கொள்ளும் வகையில் கடலுக்கு நடுவே ஒரேஞ்சு நிறத்தில் குமிழ்களால் நிறைந்த நீரூற்று போன்ற ஒளிப்படத்தை யுனைடெட் ஸ்டேட்ஸ் புவியியல் கணக்கெடுப்பு மையம் (U.S. Geological Survey) தனது டுவிட்டர் பக்கத்தில் சென்ற வாரம் பதிவிட்டது. பழைய நினைவுகளை நினைத்துப் பார்க்கும் வகையில் த்ரோபேக் தேர்ஸ்டே (Throwback Thursday #TBT) எனும் ஹேஷ்டேகில் இந்த ஒளிப்படத்தைப் பகிர்ந்திருந்தது USGS. உண்மையில் அது ஒரேஞ்சுக் குமிழ்களாலான நீரூற்று இல்லை. அது ஒரு எரிமலை வெடிப்பு. 48 ஆண்டுகளுக்கு முன்பு ஹவாய்த் தீவின் கிலாயூ எரிமலையில் ஏற்பட்ட வெடிப்பு.

ஹவாய்த்தீவானது சுற்றுலாவுக்குப் பெயர் பெற்ற அளவுக்கு எரிமலைகளுக்கும் பெயர் பெற்றது. பெரிய தீவான ஹவாய்த்தீவை சுற்றிலும் எரிமலைகள் நிறைந்திருக்கின்றன. அவற்றில் ஒன்றான கிலாயூ எரிமலை 24 மே, 1969 இல் வெடிக்கத் தொடங்கியது. அதன் மாக்மாவும் எரிமலைக் குழம்பும் எரிமலையில் இருந்து வெடித்துத் திரண்டு ஓடின. ஆனால் மற்ற எரிமலைகளைப்போல அல்லாமல் ஒரே சீராக வெடித்து வழிந்து ஓடின. அதனால் கிலாயூ எரிமலையைத் தூரத்தில் இருந்து பார்க்கும்போது ஒரேஞ்சுக்குமிழ்களாலான நீரூற்று போன்று காட்சி தந்தன. அப்போது எடுக்கப்பட்ட படம்தான் இப்போது வைரலாகியுள்ளது. எரிமலை முகட்டில் இருந்து மாக்மாவும் எரிமலைக் குழம்பும் சீராக வழிந்தோடியதால் தான் இந்தத் தோற்றம் கிடைத்தது என்றும் இப்படி ஒரு சீரான எரிமலை வெடிப்பு அரிதாகத்தான் நிகழக்கூடியது என்றும் எரிமலைகளைக் கண்காணிக்கக்கூடிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

24 மே, 1969 இல் தொடங்கிய எரிமலை வெடிப்பு ஜூலை 22, 1974 வரை நீண்டது. ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் சரியாக சொல்லப் போனால் 1774 நாட்கள் எரிமலை வெடிப்பு தொடர்ந்து நிகழ்ந்தது. அப்போது, அதிக நாட்கள் தொடர்ந்து எரிமலை வெடிப்பை ஏற்படுத்திய நிகழ்வு இதுதான். ஆனால் இந்தச் சாதனையை அடுத்த 9 வருடங்களில் வெடிக்க ஆரம்பித்த "புஓ" எரிமலை முகப்பு கைப்பற்றிக் கொண்டது. 1983 இல் வெடிக்கத் தொடங்கிய அந்த எரிமலை இன்றுவரை அணையாமல் இருக்கிறது. ஆனால், இதைவிட கிலாயூ எரிமலையில் ஏற்பட்ட வெடிப்புதான் இன்றும் நினைவில் வைத்துக்கொள்ளும் வகையில் இருக்கிறது. அதற்குக் காரணம் புகைப்படத்தில் பார்ப்பதுபோல அப்போதைய நாட்களில் இந்த எரிமலை வெடிப்பை பொதுமக்கள் பலரும் தூரத்தில் இருந்து பயமில்லாமல் கண்டு களித்திருக்கிறார்கள். படத்தில் நாம் பார்ப்பது போல எரிமலையில் இருந்து வழிந்தோடிய எரிமலைக்குழம்புகள் கடலுக்குப் போகவில்லை. அதற்குக் கீழே நிலப்பரப்பு இருக்கிறது. ஆனால், கடல் மட்டத்தில் அதுமட்டும் தனியாக இருப்பது போன்ற தோற்றம் புகைப்படத்தை இன்னும் அழகாக்கியுள்ளது.


ஐந்து வருடங்களாக கிலாயூ எரிமலையில் ஏற்பட்ட வெடிப்பு மௌனா உலு வெடிப்பு (Mauna Ulu Eruption) என்றும் அறியப்படுகிறது. இப்படியான தொடர்ச்சியான எரிமலை வெடிப்பு கடந்த 2,200 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்ததே இல்லை என்கின்றனர் எரிமலை ஆய்வாளர்கள். ஐந்து வருடங்களில் ஏற்பட்ட இந்த எரிமலை வெடிப்பின் மூலம் 350 மில்லியன் கியூபிக் மீற்றர் எரிமலைக் குழம்பு வெளியாகியது. இது ஏறக்குறைய 1,40,000 ஒலிம்பிக் போட்டிக்கான நீச்சல் குளங்களின் கொள்ளளவு. அதன்பின் ஏற்பட்ட "புஓ" எரிமலை வெடிப்புகூட இவ்வளவு சீராகவும் மக்கள் பார்ப்பதற்கு ஏதுவாகவும் இருக்கவில்லை.



ஒரு எரிமலையானது வெடிக்க ஆரம்பித்த பிறகு அதன் எரிமலைக் குழம்புகள் பல அடி உயரத்துக்கும் செல்லக்கூடியது. ஏறக்குறைய 500 மீற்றர் உயரத்துக்குக்கூட செல்லும். அதற்கு நேர் எதிராக பத்து, இருபது மீற்றர் உயரத்துக்குக்கூட செல்லும். மௌனா உலு வெடிப்பில் 12 எரிமலை ஊற்றுக்கும் மேற்பட்ட வெடிப்பு நிகழ்ந்துள்ளது. அதுமட்டுமில்லாமல் ஏறக்குறைய 70 மீற்றர் அளவுக்கு எரிமலைக்குழம்பு உயர்ந்து வழிந்தோடியுள்ளது. இந்தப் புகைப்படத்தில் எரிமலைக்குழம்பு 20 மீற்றர் உயரத்துக்கு உயர்ந்துள்ளது.

எரிமலை வெடிப்பு என்றாலே ஆக்ரோஷமான, பயத்தை ஏற்படுத்தக்கூடிய பிம்பங்கள்தான் நம்மிடையே இருக்கின்றன. ஆனால், எரிமலை வெடிப்பைப் பற்றிய அழகியலான ஒரு பிம்பத்தை இந்தப் புகைப்படம் நமக்குத் தருகிறது. இப்போதும் ஹவாய்த்தீவானது ஒரேஞ்சு அலர்ட் எனப்படும் பதற்ற சூழ்நிலையில்தான் இருக்கிறது.

# படம் பார்த்து கதை சொல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓய்வு பெறுகிறான் 360 டிகிரி

பட்டிங் இலக்கணம் மீண்டும் பழமை தேடும். கிரீஸ்க்கு நடுவிலான ஜாலங்கள் தொலையும். இத்தனை நாட்கள் கிரிக்கெட்டிலிருந்த தேச பேதம் இல்லாத ரசிப்புத்தன்மை குறையும். ஏனெனில், ஏ.பி. டி வில்லியர்ஸ் ஓய்வு பெற்றுவிட்டார்!

"உண்மையைச் சொன்னால் நான் களைத்துப்போய்விட்டேன்" என்று சொல்லி, சர்வதேசக் கிரிக்கெட்டுக்கு விடைகொடுத்து விட்டார் ஏ.பி. "மிஸ்டர் 360 டிகிரி ஓய்வு" என்று டுவிட்டர் சோக டுவிட்களை பகிர்ந்துகொண்டிருக்கிறது. டி வில்லியர்ஸ் அடித்த ஏலியன் லெவன் சிக்ஸர்கள், அதிவேக சதம், பக்கத்து ஊருக்குச் சென்ற பந்தை பாய்ந்து பிடித்த கட்ச் போன்ற வீடியோக்கள் பேஸ்புக்கில் "ஃபீலிங் நாஸ்டால்ஜிக்" எமோஷனோடு உலாவிக்கொண்டிருக்கின்றன. 20,014 சர்வதேச ஓட்டங்கள், 31 பந்தில் சதம், ஐம்பதுக்கு மேல் சராசரி, நூறுக்கு மேல் ஸ்ட்ரைக் ரேட் என நம்பர்கள் எல்லா வலைத்தளங்களிலும் கொட்டப்படுகின்றன. ஏ.பி. டி வில்லியர்ஸ் எண்களால் அடையாளம் காணப்படவேண்டிய வீரரா?

ஹர்ஷா போக்ளே மிக அழகாகச் சொன்னார், "The numbers tell a story. But the numbers tell a very small part of A.B de Villiers' story".

உண்மை. டி வில்லியர்ஸ் எண்களுக்கு அப்பாற்பட்டவர்... ஓட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்... 360 டிகிரிக்கும் அப்பாற்பட்டவர். அவரது கதை நிச்சயம் எண்களுக்குள் முடியக்கூடியதல்ல. வெற்றிகளாலும், சாதனைகளாலும் கிரிக்கெட்டை அணுகுபவர்களுக்கு அவர் ஜாம்பவான் கேட்டகிரி. ஆனால், அந்த விளையாட்டை அதன் அழகியல், அர்ப்பணிப்பு, நேசம் சார்ந்து அணுகுபவர்களுக்கு இவர் "ஏ.பி.டி" கேட்டகிரி. ஆம், இதுவரை கிரிக்கெட் உலகம் கண்டிடாத வீரர் அவர். இனிமேலும் காணக் கிடைக்காத வீரர் அவர்.

பொயின்ட், எக்ஸ்ட்ரா கவர், கவர் என வட்டத்துக்குள்ளேயே ஆஃப் சைடு ஃபீல்டர்கள் நிற்கிறார்கள். கவர் பௌண்டரியை நோக்கி பந்து வேகமாகப் போகிறது் ஷார்ட் எக்ஸ்ட்ரா கவர், கவர் ஃபீல்டர்கள் இருவரும்தான் அதைத் துரத்தவேண்டும்.

துரத்துகிறார்கள் மிகவும் வேகமான அவுட்ஃபீல்டு. பந்து மின்னலென பாய்கிறது. அதைத் துரத்தியவர்கள் இருவரும் ஒரு கட்டத்துக்கு மேல் தங்கள் முயற்சியைக் கைவிடுகிறார்கள். பந்து பௌண்டரி எல்லையை நெருங்கிவிட்டது. இன்னும் ஒரு அடிதான். ஆனால், அதற்குள் லாங் ஆஃப் திசையிலிருந்து உயிரைக் கொடுத்து ஓடிவந்த அந்த உருவம் பௌண்டரிக்கும் பந்துக்கும் இடையே அணையிடுகிறது. சறுக்கிய வேகத்தில் பந்தைப் பிடிக்கிறது. பிடித்த வேகத்தில் எழுகிறது் அர்ஜுனனின் அம்பாய் பந்தை எறிய கைகள் ஆயத்தமாகிவிட்டன. அரங்கம் முழுக்க "ஏ.பி.டி... ஏ.பி.டி..." என்ற ஆரவாரம் எதிரொலிக்கிறது!

பௌண்டரி என்று ஆசுவாசப்பட்ட துடுப்பாட்ட வீரர்கள் கொஞ்சம் பீதியடைந்து வேகமெடுத்து ஓடுகிறார்கள். "பௌண்டரி கொடுத்துவிட்டோம்" என்று கவலைகொண்டிருந்த பௌலர், இப்போது ரன் அவுட் செய்ய ஸ்டம்ப் நோக்கி விரைகிறார். கைகளைத் தூக்கி தன்னிடம் த்ரோ செய்யச் சொல்லிக் கத்துகிறார் கீப்பர். ஆசுவாசமாக இருந்த அம்பயர் ரன் அவுட் காலுக்காகத் [illegible] பார்வையை கூர்மையாக்கு[illegible].

தங்களுக்குச் சம்பந்தமே இல்லை என்று நின்றுகொண்டிருந்த லெக் சைடு ஃபீல்டர்கள் "பக்-அப" செய்ய ஸ்டம்புகளுக்குப் பின்னால் ஓடுகிறார்கள்.

"4" என்ற அட்டையைத் தூக்கியிருந்த பட்டிங் டீம் ரசிகர்கள் ஒரு நிமிடம் பீதியில் உறைகிறார்கள். பீல்டிங் அணி ரசிகர்களின் ஆரவாரம் சட்டென்று பலநூறு டெசிபல்கள் கூடுகிறது... அந்த த்ரோ கீப்பரை அடைவதற்கு முன்பே துடுப்பாட்ட கிரீஸைத் தாண்டியிருந்தார். விக்கெட் இல்லை. ஆனால், அதுவல்ல விடயம்.

கிரிக்கெட்டின் வெற்றியே ஒரு நொடி கூட குறையாத அந்தப் பரபரப்புதான். அந்தப் பரபரப்புக்கு நடுவே ஒரு ட்விஸ்ட்... தனக்குச் சம்பந்தம் இல்லாத இடத்தில் அந்த ஃபீல்டர் கொட்டிய உழைப்பு... ஒரு நொடியில் அந்த மைதானத்தில் இருந்த வீரர்கள் முதல் ரசிகர்கள் வரை அனைவரின் மனநிலையையும் மாற்றிவிட்டது. தாங்கள் எதிர்பாராத ஒரு விடயம் திடீரென நட[illegible]து... அ[illegible]வும் ஒ[illegible] நொ[illegible]க்கும் குறை வா[illegible] நேரத்தி[illegible] கண் முன் நிக[illegible]ழும்போது [illegible] ரீனலின்" ஹார் [illegible]ன் அதி[illegible] சுரந்து ரத்தத்தில் கலக்கும்.

இதயம் வேகமாகத் து[illegible]கத் தொடங்கும். [illegible] துடிப்பு சீராகும்வரை கண்கள் நிச்சயம் அதற்கு[illegible] கா[illegible]மானவர்களைத் தான் பா[illegible]க்கு[illegible]. [illegible]க்கும் கண்கள் யாருடை[illegible] [illegible]ருந்தாலும் சரி, தென்[illegible]பி[illegible]க்[illegible]னோ, இந்தியனோ, [illegible]ரேலியனோ... [illegible] போதும் [illegible]. இரண்டல்ல... [illegible]. ஆயிரம் தருண[illegible] [illegible]வொரு கிரிக்கெட் ர[illegible]ன் கண்களையும் கட்டிப[illegible] [illegible]வர் டி வில்லியர்ஸ். ஒவ்வொரு போட்டியிலும், ஒவ்வொரு பந்திலும் அவர் காட்டிய அர்ப்பணிப்பு, அவர் கொட்டிய உழைப்பு, அவர் செய்த அசாத்திய விடயங்கள்... எதிரணி ரசிகனை மட்டுமல்ல எதிரணி வீரர்களையுமே கட்டிப் போட்டது.!

சொல்லப்போனால், அந்த உழைப்பும் அர்ப்பணிப்பும்தான் டி வில்லியர்ஸ். ஒவ்வொரு பந்திலும் தன்னால் எவ்வளவு கொடுக்க முடியுமோ, அதைக் கொடுத்து [illegible] வர் அவர். ஐ.பி.எல் போட்டியின் போது அலெக்ஸ் ஹேல்ஸ் அடித்த அந்தப் பந்தை காற்றில் பறந்து பிடித்தபோது மட்டுமோ, ஆஃப் சைட் வைடாகப் போகும் பந்தை, அதையும் தாண்டிப் போய் ஃபைன் லெக் திசையில் சிக்ஸர் அடிக்கும போது மட்டுமோ அல்ல.

30 யார்டு வட்டத்துக்குள் பந்தை அடித்துவிட்டு இரண்டு ஓட்டங்கள் ஓடியபோது, தன்னைவிட படு வேகமாகப் பயணிக்கும் பந்தை வெறித்தனமாகத் துரத்தியபோது, அணியின் கீப்பர் அடிபட்டபோது மறுப்பே சொல்லாமல் ஸ்டம்புக்குப் பின்னால் நின்று வித்தைகள் காட்டியபோது. ஆடிய ஒவ்வொரு தன் சுயசரிதையின் ஓரிடத்தில் டி வில்லியர்ஸ் குறிப்பிடுவார்.



ரெக்கார்டுகள் பெரிய விஷயமே இல்லை. அவை தொலைக்காட்சியில் ஃபிளாஷ் ஆகும், இல்லை மறுநாள் பத்திரிகைகளில் அச்சாகும். ஆனால், அவை எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடாது. ஆனால், ஒருவரின் புகழ் என்பது மனித உணர்வுகளில், நினைவுகளில் மட்டும்தான் நிலைத்திருக்கும்". டி வில்லியர்ஸ் என்னும் சகாப்தம் நினைவுகளின் மூலம் வாழக்கூடியது.

அதிவேக சதமும், 360 டிகிரி ஷாட்களும் மட்டுமல்ல அவர் கொடுக்கும் நினைவு. அதற்கு நேர்மாறான நினைவுகள் அதிகம். அதைவிட உணர்வுபூர்வமான நினைவுகள் அதிகம். அப்படி என்றென்றும் மறையாத ஒன்று 2012ஆம் ஆண்டு அடிலெய்டில் அவர் ஆடிய அந்த டெஸ்ட் இன்னிங்ஸ்.

430 ஓட்டங்கள் என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆடத் தொடங்கிய தென்னாபிரிக்கா நான்காவது நாளிலேயே 3ஆவது விக்கெட்டையும் இழந்தது. அதுவும் 45 ஓட்டங்களுக்கு. வெற்றி நிச்சயம் முடியாது.

சமநிலை செய்யவே 100 ஓவர்கள் ஆடவேண்டும். நிலைத்து நின்றார் ஏ.பி. டு ப்ளெஸ்ஸியுடன் பார்ட்னர்ஷிப் அமைத்து மொத்த அவுஸ்திரேலியாவையும் சோதித்தார். அவர் அடித்தது 33 ஓட்டங்கள்தான். ஆனால், அவர் சந்தித்தது 220 பந்துகள். கிட்டத்தட்ட 37 ஓவர்கள் அவுஸ்திரேலியாவின் வெற்றியை தனி ஆளாகத் தள்ளிப் போட்டார். அன்று டு ப்ளெஸ்ஸியும் இவரைப் போலவே மாரத்தான் ஆட்டம் ஆட, தோற்கவேண்டிய போட்டியை டிரா செய்தது தென்னாபிரிக்கா. டி வில்லியர்ஸின் அதிரடி ஆக்‌ஷன் மட்டுமல்ல... அவரின் பொறுமையும் நிதானமும்கூட ஆட்டத்தின் முடிவை முற்றிலுமாக மாற்றும்.

3 ஆண்டுகள் கழித்து டில்லியில் அதேபோன்ற தருணம். 481 ஓட்டங்களைத் துரத்திய தென்னாபிரிக்கா நான்காவது நாளிலேயே தடுமாற, மீண்டும் "ஹெர்குலஸ்" மோடுக்கு மாறினார் டி வில்லியர்ஸ். 297 பந்துகளில் 43 ஓட்டங்கள். போராடினார். இம்முறை டு ப்ளெஸ்ஸி விரைவில் வீழ்ந்த போதும் போராடினார்.

"நானே முதல்ல ஒரு கிளாசிக்கல் பட்ஸ் மேன்தாண்டா, அதுக்கப்புறம்தான் இந்த 360 டிகிரிலாம்" என்று சொல்லாமல் சொல்லியிருப்பார் ஏ.பி. அன்று தோல்வியைத் தவிர்க்கமுடியவில்லை.

ஆனால், அந்த இன்னிங்ஸ் நிச்சயம் எவராலும் மறக்கமுடியாது... இந்திய வீரர்களாலும்கூட! பெங்களூர் மைதானத்தில் தன் 100ஆவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கியபோது சின்னசாமி அரங்கம் அதிர்ந்தது, இந்தியர்கள் அவரை எப்படி நேசிக்கிறார்கள் என்பதற்கான சான்று. இவற்றையெல்லாம்விட, 2015 உலகக் கோப்பை அரையிறுதி... நியூசிலாந்திடம் தோற்று வெளி யேறியது தென்னாபிரிக்கா. ஆக்லாந்து மைதானத்தில் அமர்ந்து அழுகிறார் டி வில்லியர்ஸ். அந்தக் காட்சியைப் பார்த்து மொத்த உலகமும் அழுததே! தங்கள் தேசத்துக்குக் கொஞ்சமும் சம்பந்தம் இல்லாத ஒரு வீரர் அழும்போது, எதற்காக அழவேண்டும்? அந்தத் தோல்வி ஒவ்வொரு கிரிக்கெட் ரசிகனையும் ஏன் பாதிக்கவேண்டும்? நீ நேசித்த விஷயத்துக்காக தன்னை அர்ப்பணித்தவன் அழும்போது உன் கண்களிலும் கண்ணீர் வரத்தான் செய்யும். இமைகள் தடுத்தாலும், கண்கள் விட்டு அவை வழிந்தோடும். அது தேசம் என்தையெல்லாம் தாண்டி விளையாட்டு நேசம்! இந்த நினைவுகள் டி வில்லியர்ஸ் தவிர்த்து எந்த வீரருக்கும் கிடைத்திடாது. எத்தனை ஆயிரம் ஓட்டங்கள் அடித்தாலும், எத்தனை நூறு விக்கெட்டுகள் வீழ்த்தினாலும், எத்தனை எத்தனை கோப்பைகள் வென்றாலும், இந்த உலகம் அப்படி அழுதிடாது. கிரிக்கெட் ரசிகர்களில் ஒருவரின் வெறுப்பையும், சக வீரர்கள் ஒருவரின் பொறாமையையும்கூட சம்பாதிக்காத அந்த வீரனைத் தவிர, அப்படியொரு அன்பு வேறு எந்த வீரனுக்கும் கிடைத்திடாது.

டி வில்லியர்ஸ் இப்போது ஓய்வு பெற்றுவிட்டார். இனி இதுபோன்ற நிகழ்வுகள் அமைவதும், நினைவுகள் கிடைப்பதும் சாத்தியமில்லை.

அடுத்த சச்சினையும், அக்ரமையும் கண்டுகொண்ட கிரிக்கெட் உலகுக்கு இன்னொரு டி வில்லியர்ஸ் சாத்தியமே இல்லை. அதனால், டி வில்லியர்ஸ் என்னும் பெயர் கிரிக்கெட் உள்ளவரை தனி அடையாளம் கொண்டு நிற்கும்... கடைசி வரை பேசப்படும், புகழப்படும்... யாரேனும் ஒருவர் கீப்பர் பின்னால் சிக்ஸர் அடிக்கையில் (A shot like AB), யாரேனும் ஒருவர் காற்றில் பறந்து கேட்ச் பிடிக்கையில்(Flying like AB), யாரேனும் ஒருவர் லாங் ஆஃபில் இருந்து மிட்விக்கெட் வரை பாய்ந்து பௌண்டரியைத் தடுக்கையில்(An attempt like AB). 30 பந்துகளில் சதம் அடிக்கையில்(A genius like AB), ஒரு நாள் முழுக்கப் போராடி தோல்வியைத் தவிர்க்கையில்(A warrior like AB),எதிரணி வீரர்களும்எதிர்நாட்டு ரசிகர்களும் எழுந்து நின்று மரியாதை செலுத்தையில்... Respected like AB... அந்த மரியாதைதான் அவருக்கான அடையாளம்! (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும்









நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாது ஒழிக்கும் நோக்குடன் 20 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனை சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் கொண்டு வரப்படும் 20 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்த யோசனையை மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி..பி) தலைவரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க தனிநபர் பிரேரணையாக சமர்ப்பித்துள்ளார்.

இந்த 20 ஆவது திருத்த யோசனையை காலம் தாழ்த்தாது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் இந்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான ஆதரவை எதிர்பார்த்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவாக அநுரகுமார திஸாநாயக்க செயற்படுகின்றார் என்றோ, ஜனாதிபதி - பிரதமருக்கு எதிராக செயற்படுகிறார் என்றோ இந்த விடயத்தில் குற்றம் சாட்ட முடியாது.

ஏனெனில் மைத்திரியும் ரணிலும் கூட்டுச் சேர்ந்து மகிந்தவுக்கு எதிராகக் களமிறங்கிய போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக வாக்குறுதி வழங்கியிருந்தனர். ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் வாக்குறுதிகளை மறந்து செயற்படுகின்றனர்.

இதேவேளை அரச தரப்புடன் இணங்கிச் செயற்படும் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருபதாவது திருத்தச் சட்டத்தை ஆதரிக்க வாய்ப்பில்லை என்பதை அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வெளிப்படுத்தியுள்ளார்.

அரச தரப்பின் நிலைப்பாட்டை மீறிச் செயற்படமுடியாத நிலையிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு கூறும் காரணங்கள் ஏற்கக் கூடியதாக இல்லை.

நல்லாட்சி அரசு என்று கூறப்படும் மைத்திரி- ரணில் தலைமையிலான இந்த அரசாங்கம் உருவாக்கப்பட்ட போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது - பாராளுமன்றத்திற்கு அதிகாரங்களை அதிகரிப்பது பிரதானப்படுத்தப்பட்டது.

ஆனால், நல்லாட்சி என்று சொல்லப்படும் இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் அரச தரப்பினர் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக எந்தவொரு வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும் சூழ்நிலை தென்படவில்லை.

இதனால், மக்கள் விடுதலை முன்னணி 20 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்த யோசனையை முன்வைத்துள்ளது.

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா என்ற பதவியைப் பெற்றிருந்தாலும் கூட, அநுரகுமார திஸாநாயக்க அரசிற்கு எதிராக சில நடவடிக்கையில் ஈடுபட பின்னிற்கவில்லை.

ஆனால், பிரதான எதிர்க்கட்சியாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு உடன்பட்டுச் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மகிந்த அணியின் உறுப்பினர்களே எள்ளி நகையாடுகின்றனர்.

எரிபொருட்களின் விலை யேற்றத்தைக் கூட எதிர்த்து கருத்துக் கூற முடியாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருப்பது அவர்களின் விமர்சனத்திற்கு பிரதான காரணமாகவுள்ளது.

எதிர்க்கட்சி என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்க்குமாறு கேட்கவில்லை. ஆனால், எதிர்க்க வேண்டிய எல்லாவற்றையும் எதிர்க்காமல் இருப்பதைத்தான் ஏற்கமுடியவில்லை.

எரிபொருள் விலையேற்றம், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றம் நாட்டிலுள்ள சகல மக்களின் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இதனையாவது எதிர்த்து குரல் கொடுத்திருந்தால் வடக்கு - கிழக்கு மக்களுக்குத்தான் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டையாவது இல்லாமல் செய்திருக்கலாம். அதைக்கூடச் செய்ய முற்படாமல் இருக்கும் உங்கள் இராஜ தந்திரத்தை இனியாவது மக்களுக்கு விளங்கப்படுத்துங்கள்.

தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை அரச தரப்பு நிறைவேற்றத் தவறினால் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டவிட்டாலும் பரவாயில்லை, சுட்டியாவது காட்டுங்கள்.

வாக்களித்த மக்களுக்கு இதுவரை எதனையும் செய்யவில்லை. இனியும் எதனையும் செய்யவாய்ப்பில்லை என்பதை அரசின் .செயற்பாடுகள் வெளிப்படுத்தியுள்ளன.

அபிவிருத்தி ரீதியாவும் அரசியல் ரீதியாகவும் எந்தவித முன்னேற் றங்களையும் எட்டாத நிலையில் 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையையாவது ஒழித்து விடுங்கள்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையால் சிங்களவர்கள் அனுபவித்த அடக்கு முறைகள், அழிவுகளைக் காட்டிலும் தமிழர்களே அதி களவில் இழப்புக்களைச் சந்தித்தனர்.

இலங்கையில் தமிழினம் இன வழிப்புக்கு முகங்கொடுக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை முக்கிய காரணமாக அமை நதது.

தனிமனிதனிடம் அதிகாரங்கள் குவிக்கப்படுவது அழிவுக்கே வித்திடும் என்பதால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழித்து பாராளுமன்றிற்கு அதிகாரத்தைப் பாரப்படுத துங்கள்.

தேர்தல் கால வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டால்தான் ஜனநாயகத்தின் மீது மக்களுக்கு இருக்கும் சொற்ப நம்பிக்கையாவது கட்டிக்காக்கப்படும்.

எனவே, அரச தரப்பு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முற்படாத காரணத்தால் எதிர்க்கட்சியான மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள 20 ஆவது திருத்தச் சட்ட யோசனைக்கு ஆதரவளித்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை இலங்கையில் இல்லாது ஒழியுங்கள்.

**எஸ். ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

facebook

# குற்ற உணர்ச்சி



சாமிநாதன் நான் டெய்லி சொல்லிட்டு இருக்க முடியாது, உங்களாலே நேரத்துக்கு வர முடிஞ்சா வேலைக்கு வாங்க, இல்லையின்னா வேலைக்கு வரவேண்டாம்.

அப்பா அவரிடம் சொல்லிக் கொண்டிருந்ததை கேட்ட கண்ணனுக்கு கோபம் ஒரு பக்கம், சிரிப்பு ஒரு பக்கம் வந்தது. இந்த சாமிநாதனை இதோடு எத்தனை தரம்தான் இப்படி மிரட்டிக்கொண்டே இருப்பார். அவரும் பதிலுக்கு, சரிங்க முதலாளி "இனிமே நேரத்துல வந்துடறேன். இதே வார்த்தைகள்தான் இவரிடம் வரும்.

இவனும் பல முறை அப்பா விடம் புகார் சொல்லி விட்டான், அப்பா அவருக்கு ஓய்வு கொடுத் துடலாம், கொஞ்சம் பணம் கொடுத்து அனுப்பிச்சுட்டா ஒதுங் கிக்குவாரு. சொன்னவனை சிறிது நேரம் உற்றுப்பார்த்து விட்டு "வேணாம் கண்ணா இன்னும் கொஞ்ச நாள் வேலை பாக்கட்டும். சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டு சென்று விட்டார்.

இவர்கள் நடத்திக்கொண்டிருக்கும் கம்பனியில் சுமார் நூறு பேருக்கு மேல் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். கண்ணன் படித்து முடிக்கும் வரை அவன் அப்பாதான் பார்த்துக்கொண்டிருந்தார். இவன் பொறியியல் பட்டப்படிப்பு முடித்து அப்பாவுக்கு துணையாய் வந்த பின்னால் சில மாற்றங்களை செய்தான். கொஞ்சம் இளைஞர்களை வேலைக்கு எடுத்தான். வயதானவர்களை அனுப்பி விட சொன்ன போது அவன் அப்பா தயங்கினார்.

கண்ணா அவங்களை வேண்டாமுன்னு அனுப்ப வேண்டாம், அவங்களுக்கு ஓய்வு கொடுக்கிறோம் அப்படீன்னு சொல்லி கையில் கொஞ்சம் பணம் கொடுத்து அனுப்பனும்.

சொன்னபடியே ஐம்பத்து எட்டை தாண்டியவர்களுக்கு ஓய்வு என்ற திட்டத்தை கொண்டு வந்து அவர்கள் செய்த பணிகளுக்கு பணிக் கொடையும் கொடுத்து அனுப்பினான்.

தினமும் வேலை நேரம் தாண்டியே, வந்து கொண்டிருந்த இவரையும் அனுப்பி விடலாம் என்று முடிவு செய்த போது அப்பா தடுத்து விட்டார்.

இவர் இன்னும் கொஞ்ச நாள் வேலை செய்யட்டும், கம்பனிக்குள்ள வேண்டா முன்னாலும், என் ஆபிசுல உட்கார்ந்து இருக்கட்டும். சொன்னபடியே சாமிநாதன் இனிமே உங்களுக்கு என் ஆபிசுல தான் வேலை. காலையில ஒன்பது மணிக்கெல்லாம் வந்து ஆபிச ஒழுங்கு படுத்தி வச்சிருக்க வேண்டியது உங்க பொறுப்பு.

சரி என்று தலையாட்டிய சாமிநாதனின் முகத்தில் தென்பட்டது மகிழ்ச்சியா, அல்லது அதிர்ச்சியா என்று இவனுக்கு புரியவில்லை. வழக்கம்போலவே தாமதமாகத்தான் வந்து கொண்டிருந்தார். அப்பாவும் அவரை வழக்கம்போல திட்டிக்கொண்டேதான் இருந்தார்.

கண்ணனுக்கு அப்பாவிடம் வற்புறுத்தி சொல்ல முடியாத சூழ்நிலை. இவனே. இப்பொழுதுதான் இந்த கம்பனிக்கு பொறுப்பு எடுத்திருக்கிறான். அப்பாவோ இருபத்தி ஐந்து வருடங்களாக இதை வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வருகிறார். அதனால் அவரை வற்புறுத்த இவன் மனம் இடங்கொடுக்கவில்லை. மற்றபடி சாமிநாதன் கடுமையான உழைப்பாளியாகத்தன் இருந்தார். எந்த வேலை சொன்னாலும் தட்டாமல் செய்தார். அதுபோல பலருடன் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருப்பது, அடாவடி பேச்சு, இவைகள் எப்பொழுதும் இவரிடம் இவன் பார்த்ததில்லை. ஆனால் கம்பனி சட்டம் என்று ஒன்றை போட்டு விட்டு இவர் மட்டும் விதி விலக்கு என்று இருப்பது இவனுக்கு ஒவ்வாததாக இருந்தது.

அப்பாவிடம் இதை பற்றி விவாதிப்பதற்கும் தயக்கமாக இருந்தது. அப்பாவுடன் அந்த காலத்திலிருந்தே இவர் வேலை செய்து கொண்டிருக்கிறார் என்பதை மற்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

என்றாலும், இவரை போல மற்ற பணியாளர்களும் இவருடன் வேலை செய்து ஓய்வு பெற்று விட்ட போது இவரை மட்டும் விதி விலக்காய் அப்பா ஏன் வைத்திருக்கிறார் என்பது இவனுக்கு புரியவில்லை.

இன்றைய கால கட்ட சூழ்நிலையில் கம்பனி பல்வேறு போட்டிகளுக்கிடையிலே போராட வேண்டியிருக்கிறது. அத்தகைய சூழ்நிலையில், தகுந்த பணியாளர்களை பணிக்கு வைத்து தரமான பொருட்களை தயாரிக்க வேண்டி இருக்கிறது.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1424

Search for people, places and things    Nagendram    Home

### நகுலன்

சிரிக்கும்போது நண்பர்களுடன் சிரி!
அழும்போது தனிமையில் அழு..!



கூட்டத்தில் அழுதால் நடிப்பு என்பர்!
தனிமையில் சிரித்தால் பைத்தியம் என்பர்!

### சகாதேவன்

இவன் என் தந்தையை விட நன்றாகப் பார்த்துக் கொள்வான் என்ற எண்ணம்...



தோன்றும் ஒருவனை பெண் தேர்ந்தெடுத்திருந்தால் காதல் தோற்க வாய்ப்பேயில்லை

### பரசுராம்

தவறு செய்வதற்கு அதிக சாமர்த்தியம் தேவையில்லை



அதை நியாயப்படுத்துவதற்கே அதிக சாமர்த்தியம் தேவைப்படுகின்றது...!

### நந்தினி

அன்னையின் வலி அறிந்து அவருக்கு உதவும்



ஒவ்வொரு மகளும் தாய்மையின் மறு உருவம்தான்!

### சிந்து

ஒருபோதும் அன்பை யாசித்துப் பெற்றுக்கொள்ளாத



ஏனெனில் எஞ்சியவற்றைத்தான் இங்கு பிச்சை இடுவார்கள்....!

### பைரவி

மன்னிப்பு கேட்கவும் கொடுக்கவும் கற்றுக் கொண்டால் போதும்...



வாழ்க்கை கடினமானது என்று தயங்கி நின்றவர்கள் வாழ ஆரம்பித்துவிடுவார்கள்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 133

## முதியோரை சொந்த வீட்டில் பராமரிப்போம்...



மனித வாழ்க்கையில் பல காலகட்டங்கள் பிறப்பு முதல் இறப்புவரை குழந்தைப் பராயம் தொட்டு முதியோர் என்ற நிலையை நாம் அறிந்த ஒன்று.

இந்தக்காலப்பகுதியில் இந்த 'முதியோர் எனப்படுபவர்கள் தம் வாழ்க்கையில் 65 வருடங்களை வாழ்ந்தவர்கள் என்று உலக சுகாதார நிறுவனம் வரைவிலக்கணப்படுத்துகின்றது. இத்தனை வருடம் உடலால், உளத்தால் உழைத்து உன்னத நிலையை அடைந்த அவர்களால் பெறப்பட்டவர்களை (பிள்ளைகளை) உன்னத நிலையை அடைய வழியமைத்துக் கொடுத்தவர்களை அவர்கள் தம் வாழ்க்கையில் பெருமளவு காலத்தைக் கழித்த, கடந்து வந்த, வாழ்ந்த இடத்தில் அவர்களின் இறுதிக் காலத்தை வாழ வழியமைத்துக் கொடுப்பது இளையோராகிய பிள்ளைகளின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

அதிக வேகமான தொழில்நுட்ப வளர்ச்சியான காலகட்டத்தில் மனித வாழ்க்கையும் அதன் வகிபாகங்களும் சுற்றும் பூமியில் கடந்து செல்லும் வேகம் அளப்



பரியது. எனினும் இந்த வேகத்தை பொருளாதார ரீதியாகவும் உடல், உள, ஆன்மீக சமூக ரீதியாகவும் சமநிலையூடாக கொண்டு செல்வதில்தான் எம்வாழ்க்கையின் வெற்றி அதாவது அர்த்தம் தங்கியுள்ளது.

இந்த வெற்றிகரமான எம் வாழ்க்கையில் நாம் யாரால் இவ் உலகியல் வாழ்க்கைக்கு வந்தோமோ அவர்களை இறுதி வரை கடமை, கண்ணியத்துடன் காப்பது / பேணுவது எம் தலையாய கடமையுள் முக்கிய ஒன்று. இவர்களை அவர்கள் தம் பிறந்து வளர்ந்த இடத்தில் பராமரிப்பது மிகவும் பொருத்தமானதும் விரும்பத்தக்கதுமாகும். இவற்றினால் பல நன்மைகளும் உண்டு.

**அவையாவன:-**

1. முதுமைப்பருவத்தில் தாம் பிறந்த இடத்தில் வாழ்வதனால் அவர்களுக்கு வசதி **(Comfort)**, பாதுகாப்பு **(Safe)** போன்ற உணர்வுகள் அவர்கள் தம் உள்ளத்தில் உருவாகும் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும்.

2. ஒவ்வொரு தனிமனிதர்க்குமுரிய தனித்துவம் வாய்ந்த (Personalized) பராமரிப்பை, ஆதரவை அளிக்க முடியும்.

3. உடல் / உள நிலையில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையிலிருந்து விரைவாக குணமடையும் நிலைமையை நோக்கி செல்வார்கள். **(Fast recovery)**

4. பராமரிப்பு/ஆதரவு வழங்கி செலவாகும் மூலவளங்கள், பணம் என்பன வீண்விரயமாக்கப்படுதல் தவிர்க்கப்படும் **(Cost effective)**. வீட்டில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களை பாவிக்கலாம். பராமரிப்பில் உறவினர்கள், நண்பர்கள் பங்கு கொள்ளலாம்.

5. தமது வாழ்க்கையில் இறுதிக் காலத்தை அதிகளவு காலம் பிறந்து வளர்ந்த இடத்தில் கழிப்பதை மிகவும் விரும்புவர். அது மட்டுமல்லாது தம் சுதந்திரத்தை, சமூகவியல்பான தொடர்புகளை தம் இனத்தவர்கள், உறவினர்கள், நண்பர்களுடன் மீட்டுப் பார்க்க, பகிர உகந்த இடமாக வீடே அமையும். **(Independent)**

6. உளம் மிகவும் அமைதியாகவும் ஆன்மீக ரீதியான அர்த்தத்தை மீட்டெடுக்கும் இடமாகவும் ஒருவரின் வாழ்க்கையில் வாழ்ந்த வீடு அந்நிலையை கொடுப்பதாக அமையும். **(Peace mind)**

7. முதியவர்கள் வீட்டில் இருப்பதால் இவர்களை பார்க்க சுகம் விசாரிக்க, பல நல் ஆலோசனைகளைப் பெற, நன்றி பாராட்ட போன்ற காரியங்களுக்காக உறவினர், நண்பர், அயலவர் என பலரும் வீட்டிற்கு வருவார்கள். இதனால் குடும்பங்கள் பல ஒன்று சேரும் ஒற்றுமை உணர்வு, புரிந்துணர்வு, பகிரல் போன்ற நற்செயல்கள் மேலும் வளரும். **(Keep families together)**

8. வாழ்க்கையின் தரம் மேம்படும். தமது கட்டிலில் நித்திரை செய்யலாம். தனது கழிவறையை பயன்படுத்தலாம். தாம் விரும்பியதை கேட்கலாம், பாடலாம், தொடர்பாடலாம் விரும்பிய ஆடையை அணியலாம். போன்ற தாம் விரும்பியவற்றை செய்யக்கூடியதாக இருக்கலாம். (Improve quality of life and dignity)

9. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் அவர்களுடைய பராமரிப்பில் தன்னை ஈடுபடுத்துவார்கள். இதனூடாக குடும்ப அங்கத்தவர்களிடையே ஒரு சுமுகமான உறவு, மனநிலை, சந்தோஷம், பொறுப்பேற்றல், திருப்தி என்ற உணர்வுகள் ஒவ்வொருவரிடமும் ஏற்படும். (One on one attention)

10. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் செல்லப்பிராணிகள் / மிக விருப்பமான செயல்களாகிய தோட்டம் செய்தல், பறவை வளர்த்தல், சிறிய கை வேலைகள் செய்தல் போன்றன இருந்திருக்கலாம். இவற்றை தம் வீடுகளில் தம் இறுதிக்காலத்தில் செய்யலாம். எனவே முதியோர் பராமரிப்பை வீடுகளில் செய்வது மிகவும் பொருத்தமானது. (Pets, Gardening / Hobby)




மனித வாழ்க்கை வட்டத்தின் ஆரம்பம் பிறப்புடன் தொடங்கி இறப்புடன் முடிவது நாம் அறிந்த ஒன்று. இந்த பிறந்தநாள் கொண்டாட்டம் ஆடம்பரமாக பல விதி தொழில்நுட்ப, பொருளாதார ஆட்சிக்கு ஏற்ப கொண்டாடப்படுகின்றது. இதே போல் நாம் ஒவ்வொருவரின் இறப்பு நாள் எமக்குத் தெரியாது. ஆனால் அந்நாள் எமக்கு என்றோ ஒரு நாள் வந்தே தீரும். இது இயற்கையின் நியதி. இந்த வாழ்க்கைப் பருவத்தில் பல பெரியோர்கள் கூறியுள்ளனர். முதுமைப் பருவத்தைக் கடப்பது மிகவும் கடினமானது என்று.

எனினும் எம் முதியோரை நாம் கனம் செய்து எம் வாழ்க்கையை சற்று மாற்றுவோமாயின் எம் நேரத்தை அவர்களுக்காக செலவிடின் எம் முதுமைப் பருவத்தை இனிதே கடப்பது மிகவும் இலகுவாகும்.

வீட்டில் பராமரிப்பு அளிப்பது என்பது மிகவும் பாரம்பரியதும், மதிப்பிற்குரியதுமான ஒன்று. இதனை எம் வாழ்க்கையிலும் பின்பற்றி இளையோருக்கும் வழிகாட்டிகளாக வாழ்ந்து எம் முதியோரை நல்வாழ்வு வாழ அன்புடன் பண்புடன் வழியமைப்போமாக.

திருமதி.ந.சதானந்தி
சிரேஷ்ட போதனாசிரியர்,
தாதியர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## நீரிழிவு உள்ளவர்கள் மண்ணிற சீனி பாவிக்க முடியுமா?



மண்ணிற சீனியை ஒரு அருமருந்து போலவும் உடலுக்கு நன்மை பயக்கும் எனவும் போலியான மிகைப்படுத்தப்பட்ட விளம்பரப்படுத்தல்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

மண்ணிற சீனியும் வெள்ளைச்சீனி போலவே நீரிழிவு உடல்நிறை அதிகரிப்பு உடம்பில் கொழுப்பு அதிகரிப்பு போன்ற தீயவிளைவுகளை ஏற்படுத்துகின்றது.

வெள்ளைச்சீனி போலவே மண்ணிற சீனியும் நீரிழிவு உள்ளவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். எனவே மண்ணிற சீனி ஒரு ஆரோக்கியமான உணவுப்பொருள் அல்ல. ஒப்பீட்டளவிலே வெள்ளை சீனியிலும் பார்க்க மண்ணிற சீனியில் சிறிதளவு ஊட்டச்சத்துக்களும் கனியுப்புக்களும் அதிகமாக இருக்கிறது என்ற ஒரு சிறிய விடயத்தை மூலதனமாக்கி மண்ணிற சீனிக்காக பாரிய விளம்பரப்படுத்தல்கள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக பல நீரிழிவு நோயாளர்களும் பொதுமக்களும் மண்ணிற சீனியை அதிகளவு பயன்படுத்த தொடங்கியிருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர்க்கப்பட வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org